www.tamilarangam.net

# காற்றாய்... புயலாய்...

## பெண் எழுத்தாளர் சிறுகதைகள் - 2000



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# காற்றாய் .. புயலாய் ...

(பெண் எழுத்தாளர் சிறுகதைகள் – 2000)

தொகுப்பு : ஞானி

"நிகழ்"
123, காளீசுவரர் நகர்,
கோயமுத்தூர் – 641 009.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

| | | |
|---|---|---|
| நூல் | : | காற்றாய், புயலாய் (பெண் எழுத்தாளர் சிறுகதைகள் 2000) |
| தொகுப்பு | : | ஞானி |
| முதற்பதிப்பு | : | மார்ச், 2000 |
| வெளியீடு | : | நிகழ்<br>123, காளீசுவரர் நகர்,<br>கோயமுத்தூர் – 641 009. |
| அச்சாக்கம் | : | ஸ்ரீ விஷ்ணு அச்சகம்<br>10வது வீதி, காந்திபுரம்,<br>கோயமுத்தூர் – 641 012 |
| பக்கங்கள் | : | 144 |
| விலை | : | ரூ. 30/– |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பதிப்புரை

திருமதி. இராஜேஸ்வரி பாலசுப்ரமணியம் அவர்களின் திட்டப்படி பெண் எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டி மூன்றாவது ஆண்டிலும் முடிவு பெற்றது. நடுவர் மூவர்களால் தெறிவு செய்யப்பட்ட சிறுகதைகள் இந்தத் தொகுப்பில் அடங்கியுள்ளன. எந்த ஒரு போட்டியிலும் கறாரான முடிவுகள் செய்வது என்பது பெரும்பாலும் இயலாதென்பதை வாசகர்கள் புரிந்து கொள்ள முடியும். ஒவ்வொரு வாசகரும் சற்றுக் கூடுதலாக சிந்திக்க இயலுமானால் அவரவர் தமக்குரிய சிறந்த சிறுகதைகளை இந்தத் தொகுப்பிலிருந்தும் தெறிவு செய்து கொள்ளலாம். இதன் காரணமாகவே, சென்ற ஆண்டைப் போலவே இந்த ஆண்டிலும் இன்னார்க்கு இன்னதொகை பரிசு என்ற பட்டியலை இங்கு வெளியிடவில்லை. வாசகர்களின் தேர்விலும் எங்களுக்கு நம்பிக்கை உண்டு.

உலகெங்கும் வாழும் தமிழ்ப் பெண்கள் தம்மை உணர்ந்து கொள்வதோடு, தம்மை உருவாக்கிக் கொள்வதற்கான பல்வகைப் படைப்பிலும் ஈடுபட வேண்டும் என்பது திருமதி. இராஜேஸ்வரி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவர்களின் எண்ணம். இந்த நோக்கத்தோடு தான் பெண் எழுத்தாளர்களுக்கான சிறுகதை முயற்சிகளை அவர்கள் ஊக்குவிக்கிறார்கள். மூன்றாவது ஆண்டு சிறுகதைப் போட்டிக்கு வந்த 77 சிறுகதைகளில் 50 கதைகளையாவது, ஒவ்வொரு கதையிலும் இடம்பெறும் சில தனிக்கூறுகளுக்காக நாம் பாராட்டத்தான் வேண்டும். குடுமபச் சூழலில் பெண்கள் திணறத் தான் செய்கிறார்கள். ஆண் ஆதிக்கத்திற்கு எதிராக பெண்கள் புலம்புவதோடு கலவரமும் செய்கிறார்கள்.

இந்த வகையில் மட்டுமே பெண்கள் தம்மை வெளிப்படுத்திக் கொள்வது போதாது. வரலாறு என்றும், சமூகம் என்றும் ஒரு பெரிய சூழலில் ஆண்களோடு பெண்களும் தான் அகப்பட்டு திணறுகிறார்கள். புலம்பலை நிறுத்திக் கொண்டு இம்முறையில் பெண்கள் தம்மை ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும். இப்படிக் கருதுகிறார்கள் நம் நடுவர்கள்.

இந்தத் தொகுப்பில் இடம்பெறும் சிறுகதைகளை தெறிவு செய்த நடுவர்கள் பேராசிரியர் ஹரி விஜயலட்சுமி, பேராசிரியர் அனந்த பரமேஸ்வரி, திறனாய்வாளர் திரு. அறிவன் ஆகியவர்களுக்கு நம் நன்றிகள் உரியவை. பரிசுக்கு உரியவை என தெறிவு செய்யப்பட்ட சிறுகதைகளைத் தவிர மேலும் 25 சிறுகதை எழுதியவர்களை பாராட்டும் முறையில் அவர்களுக்குத் தரமான நூல்களை அனுப்பும் முறையில் ரூபாய் 1000 அன்பளிப்பாகத் தந்த பெரியவர் திரு. வா.கி. துரையன் அவர்களுக்கு நம் நன்றிகள் உரியவை. நூல் வெளியிடுவதற்கான நிதி உதவி செய்தவர்கள் என்ற முறையில் தோழர் பொன்னீலன், திருமதி ரஜினி பெத்துராஜா, பேராசிரியர்கள் எம்.ஏ. சுசீலா, அனுராதா, வள்ளியம்மாள், செல்வி குணவதி, மரியாதைக்குரிய நண்பர் திரு. நித்திலன், திரு. அறிவன், ஆகியவர்களுக்கும் நூலாக்கத்தில் என்னோறடு ஒத்துழைத்த நண்பர்களுக்கும், அச்சகத்தாருக்கும் எங்கள் மனம் நிறைந்த நன்றிகள்.

தங்கள்
ஞானி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்கள் படைப்பும் யதார்த்தமும்

பெண்ணியல் சிந்தனைகள் சார்ந்த எழுத்துக்களுக்குத் தமிழ் இலக்கிய உலகில் கிடைக்கும் வரவேற்பு மிகவும் சொற்பம் என்பது என் கருத்து. இன்று தமிழ்நாட்டில் பிரபலமாக விளங்கும் பெண் எழுத்தாளர்கள் பலர் வியாபார எழுத்தாளர்கள். உயர்மட்டத்தை, உயர் சாதியை, பெரிய படிப்பைப் படித்தவர்கள்.

பெரும்பாலான பெண்களின் யதார்த்த வாழ்க்கை அவர்களின் எழுத்துக்களில் பிரதிபலிப்பதை எதிர்பார்ப்பதும் தவறு. அதையும் விடத் தமிழகத்தில் ஒரு பெண் எழுத்தாளர் பிரபலமாக இருப்பதற்கு அரசியல் குழுக்கள், இலக்கியக் குழுக்கள், பத்திரிகைத் தொடர்புகள் என்பன உதவி செய்கின்றன.

இந்த மாதிரி உதவிகள் எதுவுமின்றி தங்கள் அனுபவங்களை, தங்கள் உள்ளக் கிடக்கைகளை, தாங்கள் முகம் கொடுக்கும் கொடுமைகளை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளத் தங்கள் எழுத்துக்களைப் படைக்கும் பெண்களின் படைப்புக்கள் பிரபலமான பத்திரிகைகளில் வருவது அபூர்வமே.

எனது முயற்சியான பெண்கள் எழுத்துப் போட்டி இந்த வருடம் மூன்றாம் தொகுதியை வெளியிடும் நிலைக்கு வளர்ந்திருப்பது மிகவும் சந்தோசம் தரும் விடயமாகும். முதலாம் வருடம் 45 கதைகளும் இரண்டாம் வருடம் 55 கதைகளும் இவ்வருடம் 77 கதைகளும் இந்தப் போட்டிக்குக் கிடைத்திருப்பதன்மூலம் இந்தப் போட்டி எத்தனைப் பெண்களின் சிந்தனை அலைகளைத் தூண்டியிருக்கிறது என்று தெரிகிறது.

இவ்வளவு கதைகளிலும் பெரும்பாலானவை ஒவ்வொரு பெண் எழுத்தாளர்களினாலும் சுய அனுபவங்களின், பார்த்துச் சிலிர்த்த பரிதாபங்களின்மூலங்கள் என்பது அப்பட்டமாகத் தெரிகிறது.

சில கதைகளைப் படிக்கும்போது இந்த 21 ஆம் நூற்றாண்டிலும் மனிதன் விஞ்ஞான ரீதியில் அடுத்த உலகத்தை ஆள முயற்சிக்கும் கால விளிம்பிலும் இப்படிக் கொடுமைகளைப் பெண்கள் அனுபவிப்பது நம்ப முடியாத விடயமாக இருக்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சீதனம் என்ற பெயரில் முதலீடு செய்கிறான். இந்த வியாபாரத்தில் பெண் தாய்மைமூலமும், உடல் உழைப்புமூலமும் கூடிய விரைவில் போதைப் பொருளாக இருக்க முடியாத நிலைகளையடைகிறாள். இந்தச் சந்தர்ப்பத்தில் சின்னவீடு வைத்துக் கொள்ளவும் பாலியற் தொழிற் பெண்களிடம் போய் வரவும் சமுதாயம் அனுமதி கொடுத்திருக்கிறது.

இதே விபச்சார நிலை – குடும்பத்தில் நடப்பதுபோல் தொழில் இடங்களிலும் பரவியிருக்கிறது. முதலாளிகள் தொழிலாளிப் பெண்களின் உழைப்புக்கு மட்டுமல்லாது உடலுக்கும் ஆதிக்கம் செலுத்துவது பல நாடுகளிலும் நடக்கும் ஒரு விடயமாகும்.

தாய்மையைத் தவிர்த்து தனித்துவத்துடன் வாழும் பெண்களின் நிலை இன்று மேலை நாடுகளில் கூடிக் கொண்டு வருகின்றது. பல தரப்பட்ட குடும்பக் கட்டுப்பாட்டு உதவுகரணிகள் (மாத்திரை, ஆணுறை, டையாபுரம், கொயில் போன்றவை) இதற்கு உதவுகின்றன. இதனால் குடும்பக் கட்டுப்பாட்டு நிலை குறைகிறது. ஆனால் இதனால் பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலானவர்கள் பெண்களே. பெரும்பாலான பெண்களுக்கு மாத்திரைகளில் உள்ள ஹார்மோன்ஸ் போன்ற கெமிக்கல்ஸ் ஒத்துப் போவதில்லை. ஆணுறை போடக் கணவர் தயங்கினால் அல்லது மறுத்தால் அதன் விளைவாக இன்னுமொரு குழந்தையைப் பெற்றுக் கொண்டுக் கடவுள் விட்ட வழி என்று பெருமூச்சு விடுபவர்களும் பெண்களே. ஆண்கள் பாவிக்கக்கூடிய குடும்பக்கட்டுப்பாட்டு மாத்திரைகள் இன்னும் பாவனைக்கு வரவில்லை. ஏனென்றால் மருந்து தயாரிக்கும் கொம்பனிகள் எல்லாம் ஆண்களின் கையிலிருப்பதும் இவர்களுக்குப் பெண்களின் சுகத்தில் அக்கறையில்லை என்பதும் ஒரு காரணமாகும். தாய்மை தேவையில்லை என்ற பெண்கள் பெருகுவதால் மேலை நாட்டில் குழந்தைகள் பெறுவது மிகவும் குறைந்து கொண்டு வருகிறது. பிரான்ஸ் நாட்டில் 3 குழந்தை பெற்ற தாயை அரசாங்கம் மிகவும் வசதியாக வைத்துப் பார்க்கிறது. ஸ்கண்டிநேவியன் நாடுகளில் பிறப்பு விகிதம் ஒரு வருடத்திற்கு 0.5% என்ற அளவில் குறைகிறதாக அறிக்கைகள் கூறுகின்றன. இதனால் பெண்களுக்குச் சுதந்திரம் வந்துவிட்டதாக அர்த்தமா என்ற கேள்வியும் எழுகிறது. உலகத்திலேயே ஆண் ஆதிக்கத்தின் பிடியில் அகப்பட்டு 'மாடல்கள்' என்று தங்கள் அழகை விற்றுக் கொள்ளும் இளம் பெண்களின் 'அழகு' வாழ்க்கை ஒரு சொற்ப காலத்திற்குத்தான் என்பது அவர்களுக்குத் தெரியும்.

www.tamilarangam.net

புகை பிடிப்பதும் மதுபானம் எடுப்பதும் 'சுதந்திரப் பெண்களின்' ஒரு சின்னம் என்றும் கருதப்படுகிறது. சிகரெட் கொம்பனிகளின் கோடிக்கணக்கான லாபத்திற்கு இன்று பலியாவோர் வளர்ந்து வரும் நாட்டில் உள்ள இளம் தலைமுறையினராகும். புகை பிடிப்பதால் பெண்களுக்குப் பல சிக்கல்கள் வரும் என்பது தெரியாதவர்கள் பரிதாபத்துக்குரியவர்கள். ஒரு பெண் சிகரெட் குடிப்பதால் அவள் தனது உடலின் பல பாகங்களுக்குக் கெடுதி செய்கிறாள். நுரையீரல் கான்ஸர், தொண்டைக் கான்ஸர், வாயிற் கான்ஸர் வர வாய்ப்புண்டு. பல பெண்களுக்கு மார்புக் கான்ஸர், பெண் உறுப்புக் கான்ஸர் வருவது மட்டுமல்லாமல் குழந்தை பெறுவதிலும் பிரச்சினை வரும். காலத்திற்கு முந்திக் குழந்தை பெறல் (Pre mature delivery), கர்ப்பத்தில் குழந்தை அழிதல் என்பன சிகரெட் பிடிக்கும் பெண்கள் எதிர்நோக்கும் ஒரு பிரச்சினையாகும்.

அடுத்ததாக மதுபானம் எடுப்பது – அளவுக்கு மீறி எடுப்பது யாருக்கும் கூடாது. அதிலும் இளம் பெண்கள் மதுபானம் எடுப்பது மிகவும் பிரச்சினைகளைக் கொண்டுவரும் விடயமாகும். ஈரல் நோயிலிருந்து, ஞாபக மறதி வரை எத்தனையோ சிக்கல்களை எதிர்நோக்க வரும்.

பெண் விடுதலையைத் தேட இப்படியான கலாச்சாரத்திற்கு அப்பாற்பட்ட பழக்கவழக்கங்களைக் கைகொள்ள வேண்டுமென்பதில்லை.

சுதந்திரமற்ற பெண்ணுள்ள குடும்பம் சிறை பிடிக்கப்பட்ட சிந்தனைகள் உள்ள குடும்பமாகும். ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்த நாட்டின் பெண்களின் முன்னேற்றத்திலிருக்கிறது. எங்கள் பெண்கள் சந்திக்கும் எத்தனையோ பிரச்சினைகள் மேலை நாட்டுப் பெண்களால் கற்பனையும் செய்ய முடியாத பிரச்சினைகளாகும். ஆனாலும் பெரும்பாலோர் புகைபிடிக்காமல், மதுவுக்கு அடிமையாகாமல் கண்டபடி புத்தியைத் தெருவில் விடாமல் காத்திரமான பெண்களாக வாழ்கிறார்கள். ஏனென்றால் எத்தனையோ இன்னல்களுக்குள்ளும் வாழும் நிர்ப்பந்தம் அவர்களுக்கு உள்ளது. இப்படியான பெண்களின் சிந்தனைக்குக் கரு கொடுக்காமலே இந்தச் சிறுகதைப் போட்டி தொடங்கப்பட்டது.

இந்தப் போட்டியின் வெற்றி எத்தனைப் பெண்கள் இதில் பங்கு பற்றுகிறார்கள் என்பதிலிருந்து தெரிய வருகிறது. அவர்களில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெரும்பாலோர் ஆரம்ப எழுத்தாளர்கள். அவர்களின் எழுத்தில் இன்னும் பதப்படுத்தப்படாத கதை சொல்லும் குழந்தைத்தனமும் தெரிகிறது. ஆனால் அந்தக் கதை சொல்லும் விடயங்கள்தான் இங்கு முக்கியம். இருதயத்தைப் பிழக்கும் உண்மைகள், இந்தச் சமுதாயத்தை எரித்துக் கொட்டும் ஆவேசம் என்பன அவர்கள் கதைகளிற் தெரிகின்றன. இந்தப் பெண்கள் சிறுகதைப் போட்டிக்குச் சில ஆண்கள், அதிலும் கோவை ஞானி ஐயாவின் உதவியில்லாவிட்டால் இது இவ்வளவு காலமும் நடந்து கொண்டிருக்காது.

முற்போக்குச் சிந்தனையும் பெண்ணியத் தத்துவத்தில் – பெண்கள் விடுதலையில் அக்கறையுமுள்ளவருமான இவரின் பணிக்குச் சமத்துவத்தை நம்புபவர்கள் உதவ வேண்டும் என்பது எனது கருத்து. பரிசு பெறும் கதைகளைப் பரவலாக வெளியிட்டால் அது இந்தப் பெண்களைக் கௌரவப்படுத்தும் செயலாகும். இந்தப் போட்டிக்குக் கல்லூரி முனைவர்கள், மாணவிகள், குடும்பத் தலைவிகள், தொழிலாளிப் பெண்கள், ஆபிஸ் பெண்கள் என்று பல தரப்பட்ட பெண்கள் சாதி, சமய, வயது வித்தியாசமின்றி எழுதுகிறார்கள். இவர்களுக்கு இந்த அரிய வாய்ப்பைக் கொடுக்கும் கோவை ஞானி ஐயா அவர்கட்குப் பெண் உலகம் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது.

பெண்களின் கவர்ச்சியைப் பணமாக்க முண்டியத்துக் கொண்டு பல முற்போக்குப் பத்திரிகைகள் முன் வரும்போது பெண்களின் சிந்தனை வளர்ச்சிக்கு, அவர்களின் உள்ளக்கிடக்கைக்கு உயிர் கொடுக்கும் சிறுகதைகளுக்கு இடமளிக்க சமுதாயச் சிந்தனையுள்ள பத்திரிகையுலகம் முன் வர வேண்டும். இவ்வளவு சிறுகதைகளையும் வாசித்துத் தெரிவு செய்து இந்தப் போட்டிக்கு உதவி செய்யும் நடுவர்களுக்கு என் உளமார்ந்த நன்றி.

– இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்

www.tamilarangam.net

# உள்ளடக்கம்

பக்கம்

1. காற்றாய் புயலாய் சூறாவளியாய் – வள்ளி 13
2. ஐந்து பவுனும் அரைப்பவுனும் – ஜூலியட் ராஜ் 21
3. தேடல்களும் சாஸ்வதங்களும் – ஜானகிரமணன் 32
4. தீர்ப்பு – மாலதி 41
5. விட்டு விடுதலையாகி – எம்.ஏ. சுசீலா 52
6. ஆழம் – ரமணி பிரசாத் 60
7. சும்மாதான் இருக்கா – ந. அனுராதா 68
8. முதுமையில் ஒரு சாதனை
   – சாதனா இராதாகிருஷ்ணன் 74
9. அவள் அவன் அது – இரா. கயல்விழி 83
10. அம்மாவோடு – அருள் செல்வி 88
11. மனித நேயம் – நா. சுப்புலட்சுமி 96
12. நட்பு – தென்றல் 104
13. பழி ஓரிடம் – எஸ். புனிதவல்லி 114
14. மாயாவின் சிநேகிதம் – ஷீபா 127
15. பூஞ்சோலை பூங்குயில் – என். விஜயலட்சுமி 134

www.tamilarangam.net

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காற்றாய், புயலாய், சூறாவளியாய் ...

கதையைக் கையாண்டுள்ள விதமும் எடுத்துரைக்கும் பாணியும் கதை சொல்லும் முறையும் பாராட்டுக்குரியன. எளிய நடையில் இனிய கதை. ஆண்மைக்குச் சவாலாக எழும் பெண்மை போற்றத்தக்கது.

- நா. அனந்த பரமேஸ்வரி

ரயிலின் 'தடக், தடக்' ஓசை சீராய்க் கேட்டுக் கொண்டிருந்தது. எங்கும் நிறைந்து வழியும் இருள். சாப்பிட்டு, பழம் தின்று, தண்ணீர் குடித்து, பெர்த்தில் ஏறி, நாளையைச் சந்திக்க நிம்மதியாகத் தூங்கும் ஜனங்கள். கவலையற்று, குறட்டைவிடும், புரளும் மனிதர்கள். படுத்துக்கொண்டு, ஜன்னல் வழியே பார்த்தபோது தன்னந்தனியே ஓடி ஓடி இருளுக்குள் புதைவது போலிருந்தது. தனக்காகக் காத்திருக்கும் பிரச்னை பூதாகரமாய்த் தோன்ற, போர்வையை இழுத்து, கண்மூடித் தூங்க முயன்றாள்.

கம்பி வேலியைப் பிடித்துக் கொண்டு மனம் நிறைய கலக்கத்துடன் வழியனுப்பிய அம்மாவின் நினைவு தூக்கத்தை மீறி வந்தது. "போதும் ஜானு ! பட்டதெல்லாம் போதும். நீ உறுதியாய் வேண்டாம்னு சொல்லிடு. முள்ளுல சேலை பட்டாலும், சேலைல முள்ளு பட்டாலும் சேலைக்குத்தான் நஷ்டம். ஒரேயடியாய்த் தலை முழுகிடு". கண்களில் நீர் ததும்ப, நெஞ்சடைக்க அம்மா கூறியது காதில் கேட்டது.

"என்ன பாவம் செஞ்சமோ யார் கூட்டக் கலைச்சமோ கூடு இல்லாம நம்ம குழந்தை அலையுது. கோர்ட் படி மிதிக்கிறது நம் குடும்பத்துல உண்டா ... குலத்துல உண்டா ... ஈஸ்வரா" பாட்டியின் குரல் பின்னணியில் ஒலித்தது". இதோட முடிவு கட்டிட்றேன். கவலைப்படாதே. வரேன்மா" எனும்போதுதான் அருணைக் கவனித்தாள். மூன்று வயது அருண் காலைக் கட்டிக்கொண்ட" என்ன விட்டுட்டு எங்க போற ... நானும் வருவேன், பேர ....". கைகளில் தூக்கும்போது உடம்பு சுட்டது. மனதில் கவலை நிறைந்தது. மருந்துகளை எடுத்து அம்மாவிடம் தந்துவிட்டு, குழந்தையைத் தட்டி சமாதானப்படுத்திவிட்டு விரைந்தாள் ரயிலடிக்கு. அருண் எப்படி இருக்கிறானோ? ...அலுவலகத்தில் நாளை முக்கிய வேலை வேறு. கெஞ்சி, கூத்தாடி, போராடி ஒரு நாள் லீவு வாங்குவதற்குள் பட்டபாடு ... சீ ! போதும். போராடியது நினைவுகள் அலைகளாய் எழும்ப, தூக்கத்தில் அமிழ்ந்து போனாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நவம்பர் மாத மழையில் நகர் நனைந்து கொண்டிருக்க, ரயில் நுழைந்தது. பயணிகள் அறை கச, கச வென்றிருந்தது. அங்கும், இங்கும் ஓடும் பயமற்ற பெரிய, பெரிய எலிகள். அலங்காரத்தையும் மீறித் தெரியும் அழுக்குகள். படுத்தும், இருந்தும் அலட்சியமாய்ப் பேசிச் சிரிக்கும் மனிதர்கள். இருக்கக்கூட இடமில்லை. பாத்ரூமில் நுழையும்போதே அசுத்தமும் அருவருப்பும் முகத்தில் அறைந்தது. உடை மாற்றி, கிளம்புகையில் நடக்கக்கூடத் தெம்பின்றி வரும் அப்பாவைப் பார்க்க நெஞ்சு வலித்தது. மகளுக்குத் தான் துணையாய், மகளின் வாழ்வு சிதறுவதை அணுஅணுவாய்ப் பார்த்தபடி வரும் அப்பாவின் நிலை மிக மோசமானதாய்த் தோன்றியது.

இடுப்பளவு மழைநீரில் நடப்பதே சிரமமாய், செருப்பை விட்டுவிட்டாள். பஸ் நிற்குமிடம் தெரியாது, அலைந்து ஓடி ஒருவழியாய் பஸ்ஸில் ஏறியபோது கூட்டத்தில் மூச்சுமுட்டியது. அப்பாவின் தலை நெரிசலில் கரைந்து இலேசாகத் தெரிந்தது. இறங்கும்போதுதான் கவனித்தாள். வேர்த்து, விறுவிறுத்து கண்கள் சொருக அப்பா ...."அப்பா, அப்பா என்ன ஆச்சு" ஓடிவந்து தாங்கிக் கொண்டாள்.

"இலேசா நெஞ்சு வலிக்குது. கண் இருட்டுது, கொஞ்சம் தண்ணி தாயேன்".

தெரியாத ஊரில் என்ன செய்வது? எங்கே போவது? சட்டென்று தெரிந்த ஹோட்டலுக்குள் நுழைந்தாள். நான்கு சேர்களை ஒன்றாக்கி படுக்க வைத்தாள். ஃபேன் போட்டு, காபி வாங்கி ஆற்றிக் கொடுத்துவிட்டு, மருந்துக்கடை எதுவும் தெரிகிறதா எனத் தேடினாள். கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போல . . . . கண்களில் கண்ணீர் பொங்கியது. கவலைப்பட்டு அப்பாவுக்கு ஏதாவது ஆகி விடுமோ . . . . அப்பா நன்றாக இருந்தால் போதும். இப்படியே கோர்ட், கேஸ் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, ஊருக்குத் திரும்பி விடலாமா என்று தோன்றியது.

புலியின் வாலைப் பிடித்துக் கொண்டு சவாரி செய்வதான வாழ்க்கை. விட்டால் புலி தின்றுவிடும். . . . . சரி இன்று ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட வேண்டும். அப்பா மெதுவாக எழுந்து அமர்ந்தார். "ஒண்ணுமில்லே ஜானு . . . ராத்திரி சாப்பிடாம யோசிச்சுட்டே இருந்தேனா தூக்கமில்லே. தலை சுத்திடுச்சு" என்றார்.

கோர்ட் கட்டிடத்தை அப்போதுதான் பெருக்கிக் கொண்டிருந்தார்கள்.

www.tamilarangam.net



தூசியும் தும்புமாய் பறந்தது. பெரிய படிக்கட்டுகளில் ஓரமாய் அமர்ந்தாள். போவோர், வருவோரின் குத்தலான, நக்கலான பார்வைகள் குற்றவாளியைப் பார்ப்பது போன்ற உறுத்தும் கண்வீச்சுகள். குந்திக்கொண்டும், நின்று கொண்டும், புகைத்துக் கொண்டும் போலீஸ்காரர்களுடன் நிற்கும் வித்தியாசமான கூட்டம். கறுப்புக் கோர்ட்டுடன், சாப்பாட்டுக் கூடையுடன் வந்திறங்கும் கவலையற்ற வக்கீல்கள், அவர்களுக்காகக் காத்திருக்கும் கவலை ததும்பும் ஜனங்கள். அந்த இடத்தில் நிற்கவே மனதிற்குக் கூச்சமாய் இருந்தது. "இங்க நிற்காதீங்க. உங்க கேஸ் நடக்கிற கோர்ட்டுக்குப் போங்க" விரட்டும் குரல்கள்.

மெதுவாய்க் குடும்ப நீதிமன்றம் நோக்கி நடந்தாள். நேரம் ஆக ஆக, கூட்டம் மோதிக் கொண்டு நெளிந்தது. நீந்திச் செல்வது போலிருந்தது. அரசாங்க அலுவலகங்களுக்கு ஒருமுகம், ஆஸ்பத்திரிகளுக்கு ஒருமுகம் என்பதுபோல கோர்ட்டின் முகம் பரபரப்பாய், கவலையும், பீதியும் தருவதாய் இருந்தது.

உடைந்த நாற்காலிகளும் மேசையுமாய், கதவு திறந்த பீரோக்களுமாய் . . . . பேப்பர்கள் எங்கும் கட்டுக்கட்டாய் இறைந்திருக்கும் நெரிசலான சிறிய அறை. சினிமா நீதிமன்றங்கள் நினைவில் வர சிரிப்பு வந்தது. உட்கார இடமின்றி மந்தையாய்ப் பெண்கள். கொட்டடியில் அடைக்கப்பட்டதைப் போல இத்தனை பெண்களை ஒரு சேர எங்கும் பார்த்ததாய் நினைவில் இல்லை. விதவிதமாய் பெண்கள் . . . அடிமட்டத்திலிருந்து மேல்மட்டம்வரை இருபது தாண்டாத பால் வடியும் முகங்களும் 50 தாண்டிய இறுகிய முகங்களும் சோகம் அடர்ந்த நடுத்தர முகங்களும் கவலையும் கண்ணீரும் குழப்பமுமாய்.

வாழ்வில் எத்தனைவித பிரச்னைகள் என்னென்ன சிக்கல்கள். இந்தியத் திருமண மரபும் குடும்ப உறவும் பாதுகாப்பானது என்பார்கள். இன்று என்ன ஆயிற்று? எங்கு யாரிடத்தில் தவறு? எட்டி, எட்டிப் பார்க்கும் ஆண்கள். தள்ளி நிற்கும் அப்பாவையும் கண்ணீருடன் முறைக்கும் அம்மாவையும் மாறி, மாறிப் பார்த்துச் சூழல் புரியாது திகைக்கும் குழந்தைகள். குமுறலும் வேதனையுமாய் நிகழ்ந்ததைக் கூறி வடிகால் தேடும் துணைவந்த வயதான தாய்கள் . . . அந்த உலகம் மிக வித்தியாசமாய் இருந்தது. வாழையடி வாழையாய், ஆல் போல் பரவி, அருகுபோல வேரோடும் திருமணங்கள் கல்லெறிந்த தேன் கூடாய்க் கலைவதேன்.

www.tamilarangam.net



கோர்ட் வரை வந்திருக்க வேண்டாமோ? பேசி அமைதியாய்ப் பிரிந்திருக்கலாமோ? எத்தனை முறை மன்றாடினாள், அமைதியாய் பிரிந்து விடலாம் என்று. "அப்படியே உன்னை விட்டுவிடுவேனு நினைச்சியா . . . உன்னை கோர்ட்டுக்கு இழுப்பேன். கேவலப்படுத்துவேன். அவமானப்படுத்துவேன். சீரழிப்பேன் . . ." ஆக்ரோஷமாய் சீறிய வார்த்தைகள் மனிதனிடமிருந்து வருவதாய்த் தெரியவில்லை.

"ஒருத்தன் தன் வாழ்க்கையில் போலீஸ் ஸ்டேஷன் படியும், கோர்ட் படியும் மிதிக்கக் கூடாது" என அப்பா கூறி வேரோடிய வார்த்தைகள். கோர்ட்டைச் சந்திக்க வேண்டிய பயத்திலேயே மௌனமாய்த் தாங்கிய சகிக்க இயலாக் கொடுமைகள். பெண்களுக்குப் பாதுகாப்பு தரும் சட்டமே, விலங்காய், சுடு நெருப்பாய் தோன்றிய அந்த நாட்கள். மௌனமாய் நிற்க, நிற்க விரட்டப்பட்டு இன்று நீதிமன்றத்தில் நிற்கிறாள்.

பிரிந்தபின் மாறி மாறி வரும் மிரட்டல் கடிதங்களால் வீடு ரணமாயிற்று. அன்று ரோஜாச் செடிக்குத் தண்ணீர் ஊற்றும்போது அண்ணா அழைப்பது கேட்டது.

"ஜானு ! ஜானு ! உனக்கு ஒரு வக்கீல் நோட்டீஸ்" எதிர்பார்த்ததுதான். ஆனால் நோட்டீஸ் தந்த செய்தி அதிர்ச்சியாய் இருந்தது. 'You are a divorced woman. சப்கோர்ட்டில் எக்ஸ்பார்டி (expartle) டைவார்ஸ் வாங்கியாகி விட்டது" என்றது நம்பவே முடியவில்லை.

"அண்ணா, எப்படி அண்ணா நானில்லாமல், எனக்குத் தெரியாமல் டைவார்ஸ் வாங்கிவிட்டார்?"

"நீ இல்லாத அட்ரஸுக்கு சமன் அனுப்பி, நீ இல்லாத பகுதியில பேப்பர்ல போட்டு, வாங்கியிருப்பாங்க. நீ கோர்ட்ல ஆஜராகவே இல்லையா. சட்டத்தில இருக்கிற ஓட்டை . . . பயன்படுத்திட்டான் . . . கிரிமினல்". அண்ணாவுக்கு கோபத்தால் முகம் சிவந்தது.

"அவனைச் சும்மா விடக் கூடாது ஜானு ! உடுத்துன புடவையும் கையில குழந்தையுமாய் உன்னை விட்டுட்டான். நீ உன் நிம்மதியைத் தொலைச்சிட்டு, வாழ்க்கையை வீணாக்கிட்டு நிற்கிறே. உனக்குத் தெரியாமலே, உன்னை விவாகரத்துப் பண்ணியிருக்கான். இந்த விவகாரத்தை ஏத்துக்கமாட்டேன். திரும்ப மறுவிசாரணை வேணும்னு மனுப்போடு . . ." பெரியண்ணா கொதித்துக் கத்தினான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"சும்மாயிருடா. சாக்கடையில கல்லெறிஞ்சா யாருக்கு நஷ்டம். அவன்ட்ட இருந்து நம்ம பொண்ணு உயிரோட தப்பிச்சதே பெரிய புண்ணியம். நமக்குப் பொண்ணாய், அவள் குழந்தைக்கு அம்மாவாய் இருந்துட்டுப் போகட்டும். நடக்க வேண்டிய நல்லத பேசு. கோர்ட்டெல்லாம் வேண்டாம் . . . விடு . . . கடவுள் இருக்கார்" என்றார் அப்பா.

அப்பாவின் பேச்சை அண்ணா கேட்பதாயில்லை. அண்ணாவுடன் கோர்ட் படியேறி மனுவும் கொடுத்தாயிற்று. மறு விசாரணை நீள்கிறது இரண்டு வருடங்களாய் . . . வாய்தா மேல் வாய்தா தேதிகள் சொல்லியே வருடங்கள் உருள . . . வக்கீல் வந்தால் நீதிபதி வரவில்லை, நீதிபதி வந்தால் கோர்ட் புறக்கணிப்பு என நாட்கள் வெறுமையாய்ச் செல்ல, ரயிலில் அலைந்து அலைந்து மனம் நொந்தது. போராட மனதிலும் உடலிலும் தெம்பில்லை. பணத்திற்கும் வழியில்லை. மாதா மாதம் சந்தித்து, மனம் கசந்து, அதுவே பெரும் வேதனையாய் . . . இரண்டு வருடங்களுக்குப் பிறகு இன்றுதான் முதன்முதலில் விசாரணை. "வாழ இயலாது. மறு விசாரணை வேண்டாம்" என வழக்கை முடித்து விட வேண்டும் இன்றுடன். போராட்டங்கள் போதும் . . . நீதிபதியிடம் கூறப் போகும் அந்த கணத்திற்காக ஆவலுடன் காத்திருக்க ஆரம்பித்தாள்.

சைலன்ஸ் . . . சைலன்ஸ்
ரேவதி – பிரபாகரன்
சுமதி – சங்கரன்

ஒவ்வொருவராய் அழைக்கப்பட, கோர்ட் பைலில் மட்டும் வருடக் கணக்கில் தம்பதியராய் . . .

ஜானகி – நடராஜன், தன் பெயர் அழைக்கப்பட நகர்ந்தாள். "வேகமாய் போம்மா. என்ன தூங்கிட்டு இருந்தியா" பெண் அதிகாரியின் கரம் நெட்டித் தள்ளியது. எதையோ சாதித்ததைப் போல், மனம் நிறைய திமிருடன், மதர்ப்புடன் எதிரே கணவன் . . . வக்கீலுடன்.

"இது யார் தெரியுதா?" நீதிபதி கேள்வி கேட்கத் தொடங்கினார்.

"என்னோட பழைய மனைவி"

"என்ன !" நீதிபதி இலேசாக நிமிர்ந்தார்.

"அப்ப, புது மனைவி வேற இருக்கா?"

"ஆமாம். புதுக்கோட்டையில". ஜானுவுக்கு அதிர்ச்சியாய் இருந்தது.

www.tamilarangam.net



குருவிக் கூட்டைக்கூட கலைக்க இடம் தராத தேசம் நம் தேசம். பாசமும் நேசமுமாய் பராமரிக்கப்பட வேண்டிய இல்லம் சிதைதலை, குழந்தைகள் வாழ்வும் நிம்மதியும் பாதுகாப்பும் குலைதலை எண்ணவும் அஞ்சும் உள்ளம் நம் உள்ளம். தன் வீட்டைத் தன் கூட்டைத் தானே சிதைத்து, கலைத்து, உடைத்து ஒரு பெண் வெளிவருகிறாள் என்றால் அதன் பின்னணியில் நிகழும் கொடுமைகளை இந்தச் சமூகம் உணர்தல் வேண்டும்; புரிதல் வேண்டும். பெரும்பாலும் அனைத்தையும் இழந்து, குழந்தையுடன் வெளியேறும் பொருளாதாரச் சார்பற்ற பெண் தனியொருத்தியாய் இச் சமூகத்தில் சந்திக்கும் சிக்கல்கள் அநேகம். கனவுகளும் கற்பனைகளுமாய்த் தனக்கெனத் தனிச் சிந்தனைகளுடன் சென்ற அவள் இருக்க இடமின்றி, உடுக்க உடையின்றி, பிறர் சார்பில் நிற்கையில், தன்னை இந் நிலைக்கு ஆளாக்கியவனை விட்டு ஒதுங்கி தனித்து வாழ விரும்புகிறாளே ஒழிய, போராடத் துணிவதில்லை. போராடுதல் வாழ்க்கைச் சிக்கல்களை மேலும் சிக்கலாக்குகிறது என்பதுடன், நீதிமன்றம் செல்தல் என்பது இன்றளவும் நல்ல நோக்குடன் பார்க்கப்படுவதில்லை என்பதும் மற்றொரு காரணமாகும். எல்லாவற்றையும் மீறி, நீதி கேட்பதைத் தவிர வழியேயில்லை என நீதிமன்றத்தை மிதிக்கும் பெண்கள் படும் துயர்கள் . . . அப்பப்பா . . . சொல்லக் கொதிக்கிறது; சொல்லிப் புரிய வைக்க வார்த்தைகளில்லை. எதிர்பாராத பல முனைகளில், அடுக்கடுக்காய், அலை அலையாய் எழும் பிரச்சனைகளில் ஒரு சின்னஞ்சிறு துளிதான் "காற்றாய்ப் புயலாய்". நீதிமன்றங்களில் வாடி, வதங்கி, கண்ணீர் மல்கி, முடிவுக்காய், விடிவுக்காய் காத்திருக்கும் சகோதரிகளின் துன்பத்தைக் கோடிட்டுக் காட்ட விரும்பியதன் விளைவே என் முதல் சிறுகதை.

- வள்ளி (கன்யா)

பிளாட் நெ. 22, 4–4–7,
சாந்தி நகர் நியூ காலனி,
மதுரை – 18.

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

www.tamilarangam.net



# "ஐந்து பவுனும் அரைப் பவுனும்"

நிமிடத்திற்குள் நிறம் மாறும் கணவனை அறிந்தபின் பிரிந்துபோய், அநாதையாய் நிற்க மனமின்றி அவனையே அண்டி, பின் அவன் கொட்டும் விஷச் சொற்களால் மனம் வெறுத்து, வைரமாய் உறுதி பெற்று பாரதி எண்ணிய பெண் வடிவாய் "ஐந்து பவுன் நம்மைப் பிரிக்கும்பொழுது இந்த அரைப் பவுனா நம்மைச் சந்தோஷப்படுத்தும் என்று கூறி அரைப் பவுன் தாலியை அவிழ்த்து அவனிடமே அளித்துவிட்டு வெளியேறுவது பெண் இனத்திற்கு ஏற்பட்ட விழிப்புணர்வைக் காட்டுகிறது."

- நா. அனந்த பரமேஸ்வரி

வரதட்சணைப் பிரச்சனைகளின் தாக்கங்கள் பெண் இனத்தைக் கண்ணுக்குத் தெரிகிற / தெரியாத சங்கிலிகளால் பிணித்திருப்பது பற்றிய பார்வையை முன் வைப்பதோடு, பிணிப்பின் இறுக்கம் அதிகரிக்கும்போது சங்கிலியின் கண்ணிகள் நெகிழ்ந்து, பெண்ணுக்குத் தன் காலில் நிற்கும் தன்னம்பிக்கை அளிக்கிறது என்ற மாறுபட்ட சிந்தனைக் களத்தையும் முன் வைக்கிறது. ஐந்து பவுன் பிரச்சனையை அரைப் பவுன் தாலி தீர்த்து வைக்கிறது.

- ஹரி விஜயலட்சுமி

வீடு மாறிப் போயிருந்தது. இரவு நேரம் என்றதாலோ என்னவோ கொஞ்சம் இருள் ஒளிந்திருந்தது.

ஒட்டடை படிந்துபோன சுவர்கள், பிசுபிசுத்த தலையணை உறைகள், திரைச்சீலைகள், என்ணைப் பசையோடு பாத்திரங்கள். பெண் இல்லாத வீடு என்று அப்பட்டமாய்த் தெரிந்தது. வீட்டைச் சரி செய்ய ஒரு வாரம் தேவைப்படும். வீட்டு மனிதரைச் சரி செய்ய ஒரு மரணம் தேவைப்பட்டிருக்கிறதே . . .

விடிந்ததும் கதவு திறந்து வாசல் பெருக்க வெளியே வந்தேன். பக்கத்து வீட்டுப் பாட்டி என்னைக் கண்டதும் துடைப்பத்தைப் போட்டுவிட்டு விடுவிடு என்று என்னருகில் வந்தாள்.

"யாரு ...? கோமதியா . . . நல்லாயிருக்கியாம்மா?" என்று என் கரம் பற்றிக் கொண்டார்.

"நல்லாயிருக்கேன் பாட்டி."

www.tamilarangam.net



அக்கம் பக்கம் பார்த்துக் கொண்டு, ரகசியம் பேசுபவள்போல் "என்ன நடந்தாலும் வீட்டைவிட்டு போகக் கூடாதும்மா . . . நீ செஞ்சது தப்பு."

எது தப்பு, எது சரி என்று அனுபவிப்பவர்களுக்குத்தான் தெரியும். இது சொன்னால் புரியாது.

"சரி பாட்டி," என்றேன் சின்னச் சிரிப்போடு.

"என்ன பாட்டி? காலையிலேயே ஓதறீங்க . . ." என்று என் கணவர் வெளியே வந்தார்.

"என்னப்பா பெரிசா ஓதப்போறேன். எனக்கு உன்மேல ரொம்ப திருப்திப்பா. நீ கோமதியைக் கூட்டிட்டு வருவேன்னு எதிர்பார்க்கவே யில்லை. நல்லாயிருப்பா . . . இனிமே சந்தோசமாயிருங்க."

"என்ன பண்றது பாட்டி, இனிமேல் இவளுக்குன்னு யார் இருக்கா? அம்மாவும் போயாச்சு, அப்பாக்காரனும் போனதும் பாவமாயிருந்தது. வீட்டுல வேலைக்காரியாக்கிடலாமான்னு அண்ணன் எதிர்பார்த்துக்கிட்டிருக்கான். வேறு வழியில்லேன்னு புரிஞ்சுக்கிட்டு இனிமேலாவது ஒழுங்காயிருந்தால் சரி . . ." என்று பெரிதாய்ச் சப்தமிட்டுச் சிரித்தார்.

இல்லை இவர் மாறவில்லை. இரவு இருட்டில் கொஞ்சியது . . . பேசியது எல்லாம் வேஷங்கள்.

முகமூடி மனிதராகவே இன்னும் இருக்கிறார். நெஞ்சுக்குள் சின்னதாய் நடுக்கம் தோன்றியது. என்னைச் சுற்றி வலை விரிந்து, வலைக்குள் சிறைப்பட்டதுபோல மனம் நடுங்கியது.

அவர் திரும்பி உள்ளே போகவே நானும் பின்னே போனேன்.

"ஏன்டி பெருக்கலையா?"

"ம் . . . பெருக்கனும் . . . ஏங்க . . . உங்களுக்குக் காப்பி . . . " சட்டென்று மலர்ந்து போனார்.

"கோமதி நான் காப்பி போடறேன். உப்புமா கிண்டறேன். நீ போய் பெருக்கிட்டு, குளிச்சிட்டு வா . . ."

www.tamilarangam.net



"ஏங்க உங்களுக்குக் கஷ்டம் . . ."

"ரொம்பப் பாசம்தான். அடப் போடி. இந்த மூணு மாசம் நான்தான் சமைச்சேன். அப்போ எங்கே போச்சி உன் கரிசனம்?"

நிமிடத்தில் குணம் மாறும் இவரோடு தர்க்கிப்பது உசிதமில்லை என்று தோன்ற வெளியே வந்தேன்.

நிஜமாகவே உப்புமா நன்றாகயிருந்தது.

"டேஸ்ட்டாயிருக்குங்க"

"வாரத்துக்கு நாலு நாள் உப்புமாதான். உன்னையத் திட்டிகிட்டே சாப்பிடுவேன், கோமதி".

பதில் பேசாமல் நிமிர்ந்தேன்.

"ஆமா, ஏன் உங்கப்பா வீட்டுக்கு ஓடிப்போன?"

"பழசு வேண்டாமே, ப்ளீஸ்"

"எதுடி பழசு . . . உங்கப்பா சாகலைன்னா நான் உன்னைக் கூட்டிட்டே வந்திருக்க மாட்டேன். எங்கம்மாவும் அப்பாவும் சொன்னதால் தான் சாவுக்கே வந்தேன். அவங்க போட்ட பிச்சைதான் இந்த வாழ்க்கை. இல்லேன்னு வச்சுக்க ரெண்டு மாதத்திலே வேற கல்யாணம் பண்றதாயிருந்தேன்" என்றார்.

எனக்கு உப்புமா தொண்டையில் சிக்கியது. என்ன மனிதர் இவர். எதைத்தான் பேசுவதென்று தெரியாதா . . .

முகத்தை கண்ணாடியில் பார்த்துக் கொண்டே பேசினார். என் பிரிவு இவரைப் பாதிக்கவில்லை. என்னையே பாதிக்காதபோது, இவரை பாதிக்காதது வியப்பில்லை. என்னைப் பொருத்தவரை இது பிரிவில்லை விடுதலை. ஆனால் மீண்டும் இப்போது சிறை.

"என்ன கனவு காண்ற . . . நான் பேசிக்கிட்டேயிருக்கேன் . . ."

"சொல்லுங்க, கேட்கறேன் . . ."

"நீ வந்துட்டேன்னு போய் ஆபீஸில் சொன்னா எல்லாரும் என்னை பாராட்டுவாங்க . . . ஆனால் உலக மகா இளிச்சவாயன் நான்தான்".

www.tamilarangam.net



"ஏங்க, ஏதோதோ பேசறீங்க . . ."

"ஏன், கூட கூட பேசமாட்ட ... உன்னை கூட்டிட்டு வந்ததே தப்புடி. கூட கூடவா பேசற நீ. காலத்துக்கும் என் காலடியில் கிடக்கணும் நீ. சரி, சரி ... நல்ல காரமா குழம்பு வச்சிவை. உன்னை மாதிரியே சப்புன்னு சமைக்கப் போறே . . ." போய்விட்டார்.

கதவை சாத்திவிட்டு உள்ளே வந்ததும் சுதந்திரக் காற்று வீசியது போலிருந்தது! ஏன்? ஏன்? எனக்கு மட்டும் இப்படி நடக்கிறது . . . கல்யாணமே எனக்குத் தண்டனையாய்ப் போனதேன் . . . கணவன் இல்லாத தருணமே எனக்குச் சந்தோசமாயிருந்தது.

யார் மேல் தவறு? கவர்ன்மெண்ட் மாப்பிள்ளை என்று அப்பா 20 பவுன் போடுவதாக ஒத்துக் கொண்டது தவறு. பெட்டிக்கடை வைத்திருப்பவருக்கு வரக்கூடாத ஆசை.

திருமணம் கூடிவரும் வேளையில் பணமெல்லாம் அம்மாவின் திடீர் மருத்துவச்செலவுக்குக் கரைந்து போனது. ஐந்து பவுன் கடன் சொல்லப்பட்டது.

அதுதான் . . . அது மட்டும்தான் தவறு. கல்யாணமே இப்போது வேண்டாமென்று சொல்லியிருக்கலாம் . . . அப்பா சொல்லவில்லை. மகள் வாழப்போவதை யோசித்து இரண்டு மாதம் கழித்து போடுவதாய் சொன்னார்.

மாப்பிள்ளை, இவராவது கல்யாணம் வேண்டாமென்று சொல்லியிருக்கலாம் சொல்லவில்லை.

"ஓ, இரண்டு மாசம் கழிச்சுப்போடுங்க . . . அதுக்கென்ன?" என்றதோடு நில்லாமல் பெரிய சாதனை செய்ததுபோல ஊரெல்லாம் தம்பட்டம் அடித்தார், ஏதோ வரதட்சணையே வேண்டாம் என்று சொன்னவர்போல் பேசினார்.

"அப்படியா! ரொம்ப நல்ல மனசுப்பா, உனக்கு" என்று நாலுபேர் புகழ இவர் வயிறும், மனமும் நிறைந்து போனது.

கல்யாணம் செய்த புதிதில் இவர் குணம் மிரட்டியது. முகம் மட்டுமின்றி ஆளே முகமூடிக்குள் மறைந்திருந்தார். வெளிவேஷம் போட்டார் . . . எல்லாக் கெட்ட பழக்கமும் இருந்தது. எதிர்த்துக் கேட்டால்,

www.tamilarangam.net



"அடப்போடி, யார்டி இந்த காலத்துல சிகரெட்டும் பாட்டிலும் இல்லாம இருக்காங்க . . ." என்றார்.

அந்த நாற்றத்தில் என் மனம் புகைந்தது.

இரண்டு மாதத்தில் அம்மாவுக்குப் புற்றுநோய் என்று கண்டுபிடிக்கப்பட்டு இறந்துபோக, அப்பா கடனாளியானார்.

"என்னடா ஆயிற்று ஐந்து பவுன்?" என்று மாமியார் கேட்க இவர் விழித்துக்கொண்டார்.

குடிகாரன் என்ற போர்வையில் என்னை அடித்துத் துன்புறுத்தினார். போதை இறங்கிப் போர்வை விலகியதும், "என்னை மன்னிச்சுடு கோமதி ... நான் ஏதோ கோபத்தில் அடிச்சிட்டேன்" என்று கைபிடித்து உருகினார்.

அப்பாவிடம் நகைபோட பணமில்லை. அண்ணனுக்கு வசதியில்லை. அப்பாவிடம் இவர் குணம் பற்றிச் சொல்லாமல் மறைத்தேன். புரிந்துகொள்ளாத அப்பா இவரைப் புகழ்ந்தார்.

"மாப்பிள்ளை தங்கம்மா . . . வேறொருத்தராயிருந்தா நகை நகைன்னு பிடுங்கி எடுத்துடுவாங்க," என்று அவர் காதுபட புகழ, இவர் அசட்டுச் சிரிப்போடு நகர்ந்து கொண்டார். அப்பா விலகியதும் என்மேல் பாய்ந்தார்.

குறுகிப் போனேன். வெறும் மஞ்சள் கயிறு என்னை ஒன்றுமில்லாதவளாக்கியது. சுயமாய் முடிவெடுக்கும் திறன் குறைந்து போனது.

வாசலில் நின்று இவர் குடித்துவிட்டு அக்கம்பக்கம் கேட்கும்படி கத்தும்போது நான் பதில் பேச மறந்துபோய் ஜடமாகிப் போயிருக்கிறேன்.

இரவுக்கு மட்டும் இவருக்கு மனைவி வேண்டும். "ம்" என்றால் சிரித்து, "ஊகூம்" என்றால் எனக்குள் சுருங்கப் பழகிக் கொண்டேன்.

ஒரு குழந்தை பிறந்தால் சரியாய் போய்விடும் என்று பக்கத்து வீட்டுப் பாட்டி ஆறுதல் சொல்வார்கள்.

ஒருமுறை அவர் அம்மா, அப்பா வந்தார்கள். பிள்ளை கெட்டு குட்டிச்சுவர் என்று தெரிந்தும் அதைத் தாங்கும் தூண்கள் . . .

www.tamilarangam.net



"கல்யாணத்துக்கு அப்புறம்தான் இப்படிப் பேசுகிறான். அதுவும் உங்கப்பா நகைபோடலேன்னு தெரிஞ்சப்புறம்தான் . . . இந்த ஒரு வருஷமாத்தான் குடிச்சிட்டு கெட்டழிஞ்சு போறான்", என்று குட்டிச் சுவருக்கு வண்ணம் பூசிடும் அம்மா.

மௌனத்தில் ஆதரவு காட்டும் மாமனார், அம்மா, அப்பா இருக்கும் துணிவில் குடிபோதையில் வேண்டுமென்றே என் அப்பாவைத் தரக்குறைவாய்ப் பேசி, முடியைப் பிடித்திழுத்து அடிக்கவும் எனக்குள்ளிருந்த தன்மானம் விழித்துக் கொண்டது.

"அவன்தான் குடிச்சிருக்கான், நீயாவது எதிர்த்து பேசாமலிறேன்," என்று மாமியார் பேச எனக்குள்ளிருந்த சாது மிரண்டு கொண்டது.

"குடிச்சா, எனக்குப் பதில் உங்களையா அடிக்கிறார்?" என்று சீற

"என்னடி எங்கம்மாவையே எதிர்த்துப் பேசறியா . . . போடி வெளியே, " என்று முடியைப் பிடித்து வெளியே தள்ளிக் கதவை மூடினார்.

அக்கம்பக்கத்துப் பரிதாபப் பார்வைகள் என்னைத் துரத்த, எழுந்து அப்பா வீடு போய்ச் சேர்ந்தேன்.

மாப்பிள்ளையின் முகமூடி பற்றித் தெரிந்ததும் அப்பா உடைந்து போனார்.

"இனிமேல் நான் அங்க போகலைப்பா . . . உங்க கூடவே இங்கேயே இருந்திடறேன்."

ஒரு வருடம் ஓடிய படபடப்பு அடங்கியது. அப்பாடா . . . என்ற நிம்மதியோடு, அப்பாவின் தோளில் சாய்ந்து கொள்ள முடிந்தது. இனிமேல் இதுதான் சாஸ்வதம் என்று நினைத்துச் சந்தோசப்பட்டேன்.

என் பாரமெல்லாம் அப்பாவை பாதிக்க, அப்பா மெல்ல மெல்ல நொடிந்து போனார். நானே என் அப்பாவுக்கு விஷமானேன். அப்பா இறந்து போனார்.

சொந்தக்காரர்களின் வலியுறுத்தலால் என் கணவர் என்கிற உறவுக்குச் சேதி போனது.

நாலு பேர் புகழ வேண்டுமே. அதனால் உடனே கிளம்பி வந்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்னிடம் எதுவும் பேசவில்லை. எல்லா வேலையையும் மருமகனாய் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தார்.

நாலு பேர் புகழ்ந்தார்கள். அதே வாயோடு எனக்கு புத்தி சொன்னார்கள். புருஷனோடு வாழ்வதுதான் பெண்ணுக்கு அழகு என்றார்கள். தாலிதான் கடைசிவரை பாதுகாப்பு என்றார்கள்.

"நான் எல்லாத்தையும் மறந்துடறேங்க. அவளை இதுக்கப்புறமாவது ஒழுங்கா குடும்பம் பண்ணச் சொல்லுங்க".

மூன்று மாதப் பிரிவில், என் தந்தையின் மறைவில் இவர் மாறிவிட்டாரா . . . என் யோசிப்பு, என் மௌனம் சம்மதமாக ஏற்கப்பட்டது.

மீண்டும் இந்தக் கண்ணீர் நதியில் தள்ளப்பட்டேன்.

"பக்கத்து வீட்டம்மா பிரசவ ஆஸ்பத்திரிக்குப் போறாங்க . . . நானும் கூடப் போகவா".

"ஏன்?"

"குழந்தை பெத்துக்கலாம்னு . . ."

பதில் பேசாமலிருந்தார். இன்று நல்ல மனநிலையில் இருப்பது போல் தோன்றியது.

"ஆமா, இந்தப் புடவை எனக்கு நல்லாயிருக்கா . . . ரொம்ப நாளைக்கப்புறம் நீங்க வாங்கித் தந்த சேலை. எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு."

"ஆபீஸ்ல கொண்டுவந்து வித்தாங்க. அவனவன் இரண்டு, மூணுன்னு எடுக்கறான். நான் வாங்கலேன்னா தப்பா நினைப்பாங்க. அதான் ஒன்னு வாங்கினேன்".

"தங்கக் கத்தி, தாங்கித்தானாக வேண்டும்"

"சரி நான் டாக்டர் கிட்ட போகட்டுமா?"

"ஆமா, உனக்கு உங்கப்பன் சீர் செஞ்சிட்டான். இப்ப புள்ளைக்கு உங்கண்ணன் சீர் செய்யப் போறானாக்கும். போடி . . . தாலி கட்டின

www.tamilarangam.net



தோஷத்துக்கு நானே நொந்து போயிருக்கேன். பிள்ளை வேணுமாம் பிள்ளை. எல்லாம் பொறக்கும்போது பொறக்கட்டும்."

இப்படிச் சொன்னவர் இரவில் அணைத்தபோது உடல் அமிலமாய் எரிந்தது. தாலி இவருக்குத் தரும் உரிமை எனக்கு இல்லாமல் போனதே. மனம் யோசித்தது. யோசிப்பே இனித்தது. இனிமையைத் தக்க வைத்துக் கொள்ள மனம் நேரம் பார்த்தது.

"அம்மா எனக்கு ஏன் இந்த வலி ... ஏய் சனியனே ... இங்க வாடி ... காலைக் கொஞ்சம் பிடிச்சு விடுடி ... கோமதி ... தீயை விழுங்கியவர் போல கத்தினார்.

மெல்ல அருகில் சென்றேன். "என்ன வலிக்குதா? குடிச்சிட்டு ரோட்டுல தடுமாறி விழுந்து காலை உடைச்சிக்கிட்டா வலிக்கும்தான். அதான் அசையாம இருக்க மாவுக் கட்டு போட்டிருக்கே . . ."

"ஏன்டி சனியனே . . . எழுந்திருக்கமாட்டேன்னு கத்தறியா . . . கிட்ட வந்தா கொன்னுடுவேன் . . ." கண்கள் சிவக்கக் கத்தினார்.

இவர் வலி என்னை பாதித்தது உண்மை. ஆனால் இவர் வலிக்கு நான்தான் காரணம் என்பதுபோல என்னிடம் கோபப்பட்டுக் கொண்டேயிருந்தார்.

அவர் அம்மா, அப்பா வந்திருந்தனர். ஆபீஸிலிருந்தும் நிறையபேர் பார்க்க வந்திருந்தார்கள். வந்தவர்களின் பார்வையில் சிநேகமில்லை.

ரொம்ப நல்ல டைப்பும்மா. இவர் உங்களைக் கூட்டிட்டு வருவாருன்னு நாங்க யாருமே எதிர்பார்க்கவில்லை. தானே துணிஞ்சி நல்லது செய்வார். எல்லாருக்கும் உதவுவார்", என்றார்கள்.

"எல்லார்க்கும் நல்லது செய்யறதாலதான் இப்படி பெரிய விஷயத்தில் ஏமாந்துட்டேன்", என்றார்.

எனக்குப் பகீரென்றது. அனைவருடைய மௌனம் என்னை கேலி பேசியது.

பாவம் உடம்பு முடியாதபோது எதுவும் பேச வேண்டா மென்றிருந்தேன்.

www.tamilarangam.net



என் வாழ்வு இப்படியே போய்விடுமா . . . இவர்மேல் நான் வைத்திருப்பது அன்பா . . . பரிவா . . . பாசமா . . .

எங்கள் உறவுக்கு என்ன பெயர்? நான் இரண்டு நாள் அன்பாயிருந்தா, இவர் குத்தலில் நான்கு நாள் வெறுத்தேன். மனம்விட்டு இரண்டு பேரும் பேசினால் தீர்ந்து போகுமா . . .

நான் எத்தனை கவனித்தும் இவர் திருப்தியடையாமலிருக்கிறார். கொஞ்சம் கொஞ்சமாய்க் கால் குணமானது. வலியில் துடித்தபோதும் வதைத்தார். தாயாய் இவரை கவனித்தபோதும் என்னை துரத்தினார். உடம்பு தேறியதும் மீண்டும் என்னை துரத்தினார்.

"உங்கப்பாவால்தான்டி இப்படி நிறையக் குடிக்க ஆரம்பிச்சேன். ஏமாத்திட்டாங்கடி உங்குடும்பத்துல. அப்படியிருந்தும் நான் உனக்கு சோறு போடறேன் பார். என்னைச் சொல்லணும்," படுத்துக் கொண்டே புலம்பினார்.

" ஒன்றும் பேசாமல் உள்ளே போனேன். ஏற்கனவே எடுத்து வைத்திருந்த பெட்டியை எடுத்துக் கொண்டு வெளியே வந்தேன்.

என்ன, என்பதுபோல் பார்த்தார். பார்வையில் கோபமின்றிப் பயமிருந்தது. தோற்றுப்போன பயம். நாற்காலியை இழுத்துப் போட்டு உட்கார்ந்தேன்.

"என்ன பார்க்கறீங்க . . . ஒரு புருஷன்கிட்ட மனைவி பேசற நேரம் பார்த்தீங்களா . . . என் மனம்விட்டு இப்போதான் பேசப்போறேன். மத்த நேரம்னா நான் பேசமுடியாது".

அது எப்படி உங்களுக்குப் பசிக்கிற மாதிரி எனக்குப் பசிக்கணும். உங்களுக்குத் தவிக்கிற மாதிரி எனக்குத் தவிக்கணும். உங்களுக்கு வலிக்கிற மாதிரி எனக்கு வலிக்காதா . . . என்னை மனைவியா மதிக்க வேண்டாம், ஒரு மனுஷியா மதிச்சிங்களா . . . தாலி கட்டிட்டா அடிமையில்லேங்க . . . தாலி பாதுகாப்புன்னு நினைக்கிறோம். அது வேலியாயிருந்து பாதுகாக்கணுமே ஒழியச் சிறையாயிருக்கக் கூடாது. அந்த தாலிக்குக்கூட விலைபேசி கேலியாக்கறீங்க. ஏங்க ஐந்து பவுன் நம்மை பிரிக்குமா . . ."

"என்னடி வாய் நீளுது ..."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"ஏன்? ஏன் நீளாது ... இன்னும் இரண்டு மாதம் கழிச்சி வேற கல்யாணம் செய்திருப்பேன்னு சொல்லும்போது ... அதே வார்த்தையை நான் சொல்லியிருந்தா நீங்க எப்படித் துடிச்சிருப்பீங்க ...

சீர் செய்ய ஆள் இருந்தாத்தான் பிள்ளை பெத்துக்கணுமோ ... யாரோ சீர்செய்ய, உங்களைப் பிள்ளை அப்பான்னு கூப்பிடணுமா ...

ம் ... அப்பாங்கிற வார்த்தைக்கு மதிப்பென்னன்னு உனக்குத் தெரியுமா ... உன்கிட்ட போய் என்னைக் குடுத்தேனே ... குழந்தை பெத்துக்கணும்னு ஆசைப்பட்டேனே ...

முதல்ல எல்லாத்தையும் எழுதிவச்சிட்டு செத்துப் போகலாம்னு நினைச்சேன். ஆனால் நான் எழுந்து நிற்க முடிவு பண்ணிட்டேன்" மெல்ல என் தாலியைக் கழட்டினேன்.

"ஏய் ... என்ன செய்யற ... பைத்தியம் பிடிச்சிருக்கா உனக்கு ..."

"அப்பா! நீ கட்டும்போது இருந்த சந்தோசத்தைவிட கழட்டும்போது இன்னும் சந்தோசமாயிருக்கு. இந்த அரைப் பவுன் தாலி நம்மைச் சேர்த்து வைக்குமா? எப்படி? ஐந்து பவுன் நம்மைப் பிரிக்கும்போது இந்த அரைப் பவுன் நம்மைச் சந்தோசப்படுத்தும்னு என்னால் நம்பமுடியவில்லை. இந்தா நீயே வச்சிக்க. போய் நாலுபேர்கிட்டச் சொல்லு, என் பொண்டாட்டி ஓடிப்போயிட்டான்னு ... அடடான்னு உன்மேல் பரிதாபப்படுவாங்க ..."

"போடி ... போ ... எங்காவது பிச்சையெடுத்து மானம் கெட்டுச் சாவு ... போ ..."

"உனக்குச் சமைச்சுப்போட்டுட்டு ஊமையாயிருக்கிறதைவிட ஒரு அனாதை ஆஸ்ரமத்துலப் போய் சமைச்சுப் போட்டுட்டு நிம்மதியாயிருப்பேன். என்ன வலிக்குதா? வலியை அனுபவிச்சாத்தான் புரியும். போறேன் ..."

பெட்டியோடு வெளியே வருகையில் மனம் லேசாயிருந்தது. எதிர்ப்பட்ட காற்றும் என்னைப்போல் சலனமற்றிருந்தது ... ஒருவேளை இது இனி தென்றலாகலாம்.

***

www.tamilarangam.net



வளர்ப்பு நாய்க்கும் வாசலில் இருக்கும் தாவரத்திற்கும் இருக்கும் மரியாதைகூடச் சில பெண்களுக்குக் கிடைப்பதில்லை. காலமெல்லாம் அடிமையாவதற்கே பிறந்தவர்கள்போல நடத்தப்படும் கால்நடைகள்தான் பெண்கள்.

தங்களின் ஆசைகள், ஆதங்கங்களையெல்லாம் அடகு வைத்துவிட்டு வாழ்வைத் தொலைத்த பெண்கள், மாமியாராய் வளரும்போது மனிதநேயத்தை மறந்து போகிறார்கள். மருமகளும் ஒரு வீட்டின் மகள்தானே என்பதை மறந்து போகிறார்கள். வரதட்சணை என்னும் விருட்சம் வளர்வதற்கு விதை போடுவதே இந்த மாமியார்கள் இனம்தான். ஆண்பிள்ளை பெற்றால் உலகமே தன் வசம் என்றெண்ணி, விற்பது தெரியாமல் தங்கள் பிள்ளைகளை விற்கிறார்கள். எரியும் ஸ்டவ்வுடனும் எரியாத விறகுகளுடனும் ஆயுளெல்லாம் அல்ல ஒரு மருமகளை விலையோடு வாங்குகிறாள்.

மூன்று முடிச்சி போட்டவுடன் அவனே தெய்வம் என்று நினைத்து வாழும் பெண்கள் தங்கள் வாழ்நாளில் பெரும்பகுதியை வேண்டுதல்களாக மட்டுமே செலவழிக்கின்றனர். பெற்றோரிடம், கணவனிடம், வயதானபின் பிள்ளைகளிடம் என்று வேண்டி வேண்டி வரம் கிடைக்காத பக்தையாகவே காலமெல்லாம் தவமிருக்கிறார்கள்.

- ஜூலியட் ராஜ்

C-9, பக்கெட்வீல் சாலை,
வட்டம் – 24
நெய்வேலி – 607 801

www.tamilarangam.net



கடவுளா? அப்படி ஒருவர் இருக்கறதையே நான் மறந்து நாளாச்சு ரிஷி. கோயில், குளம் போகக் கூடாதுன்னு ஒண்ணும் இல்லை. ஆனா அதுக்குன்னு நேரம் ஒதுக்கவே இல்லை. இப்போ காலம் கடந்திருச்சோன்னு பயமா இருக்கு ரிஷி.'

'நாளைக் காலைல முதல் வேலையாகக் கோயிலுக்குப் போனாப் போச்சு. இதுக்குப் போய் கலங்கலாமா ஐயா ! என்றான் ரிஷி ஆறுதலாக.

ஒரு வயோதிகரை இளைஞன் ஒருவன் கைத்தாங்கலாக அழைத்துச் செல்வதையே பார்த்தவாறு இருந்தார் சுந்தரமூர்த்தி.

வாழ்க்கையை ஒளிமயமாக்கப் போகிறவன்னு நம்பிக்கிட்டு என் மகனுக்குப் 'ப்ரஜோத்'னு பேர் வச்சேன். அவன் செய்யும் காரியங்கள் அச்சுறுத்துது ரிஷி. டி.எஸ்.பி. யே ஜாடை மாடையாகச் சொன்னார். ப்ரஜோத்தோட நண்பர்கள் கூட்டம் கவைக்குதவாத ஒரு ஆரவாரக் கும்பல். கம்பெனியை எனக்குப் பிறகு கூடிக் காக்கப் போறது யாரு? என்னோட எல்லாம் முடிய வேண்டியதுதானா?

'ஐயா ! நீங்களே நீண்ட காலம் இந்த பிஸினஸ்ஸை நடத்தத்தான் போறீங்க? ப்ரஜோத்துக்குக் கம்பெனில சில கனத்த பொறுப்புகளைக் கொடுத்துப் பார்க்கலாம். அவன் ஆசைப்படுவது போல் மேல் நாட்டு அனுபவங்களைக் கற்றுவர அனுப்பலாம்.

'சரி ! ப்ரஜோத்தை, சங்கீதாவை, பார்வதியை, கனகாவை எல்லோரையும் கொஞ்சம் விட்டுப் பிடிக்கலாம் என்பது உன் யோசனையா?'

'கனகா அம்மாவை விட்டுப் பிடிக்க வேண்டாம் விட்டுரலாம்' என்றான் ரிஷி மெதுவாக.

சுந்தரமூர்த்தி மறுபடியும் அட்டகாசமாகச் சிரித்தார். பின் சிந்தனையில் ஆழ்ந்தார்.

'அவளுக்கு சமூக அங்கீகாரமோ சட்டத்தின் பாதுகாப்போ இல்லை. ஆனால் அவள் என்னை நம்பி இருப்பவள் ரிஷி !, 'ஐயா . . . . .' என்று ஏதோ சொல்ல ஆரம்பித்துத் தயங்கினான் ரிஷி.

'சொல்லு ரிஷி எதுவானாலும் தயங்காமல் சொல்லு. என் தலைக்கு மேல வெள்ளம் போய் எத்தனையோ நாளாச்சு'. 'கனகா அம்மா உங்களை மட்டும் நம்பி இல்லை ஐயா !'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுந்தரமூர்த்தி ஒரு பெருமூச்சுடன் அலைகடலைப் பார்த்தவாறு அமர்ந்திருந்தார்.

'ஐயா ! உங்க மனசைப் புண்படுத்திட்டேனா?'

'இல்லை. 'நந்தவனத்தில் ஓர் ஆண்டி'ன்னு சித்தர்கள் அன்றைக்கே என்னைப் பற்றி பாடி வச்சுட்டுப் போயிட்டாங்களேன்னு ஆச்சரியப்பட்டுக்கிட்டு இருக்கேன்'.

சுந்தரமூர்த்தியை ஹோட்டல் ரூமில் விட்டு விட்டு ரிஷி தன் வீட்டுக்குத் திரும்பியபொழுது இரவு மணி ஒன்று.

கதிரவன் முகத்தில் பளீரென்று அறைந்ததும் ரிஷி கண் விழித்தான். சே ! எவ்வளவு நேரம் உறங்கி விட்டான் ! பெரியவர் ஹோட்டல் ரூமில் அவனுக்காகக் காத்திருப்பார். பரபரவென்று வேலைகளை முடித்துக் கொண்டு கிளம்பினான்.

'நித்யா ! நீ . . . .' என்று ஆரம்பித்தான்.

'பக்கத்து வீட்டு மாமியோட நர்ஸிங் ஹோம் போறேன். எமர்ஜன்ஸின்னா ஒங்களோட மொபைல்ல தொடர்பு கொள்றேன். கிஷோரை ஜான் வீட்டுலயே விட்டுட்டுப் போறேன். எது ஒண்ணுன்னாலும் பதட்டமில்லாம நிதானமா நடந்துக்கறேன். சரிதானே !' என்று நித்யா புன்னகைக்க, ரிஷி சிரித்தான்.

ஃபோன் ஒலித்தது.

'ரிஷி ஹியர்'

அவன் உதட்டைக் கடித்து வேதனையை விழுங்குவது நித்யாவுக்குப் புரிந்தது.

'வரேன் நித்யா ! வந்து பேசிக்கலாம் !

ஹோட்டல் ரூமில் சுந்தரமூர்த்தி பேச்சு மூச்சின்றிக் கிடக்கச் சுற்றிலும் டாக்டர்கள்.

எமர்ஜன்ஸி ஆபரேஷன் மண்ணியாகணும். ஓபன் ஹார்ட். யோசிப்பதற்கெல்லாம் நேரம் இல்லை என்றார் டாக்டர் நரேந்திரன்.

பார்வதி மௌனமாக நீட்டிய பாரத்தில் கையெழுத்திட ஆபரேஷன்

www.tamilarangam.net



நடந்தது. சுந்தரமூர்த்தி என்ற மனிதரின் கதை அந்த ஆபரேஷன் தியேட்டர் மேஜையிலேயே முடிந்து விட்டதைத்தான் ரிஷியால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

'கான்பிடன்ஷியல்' என்று போட்டு ரிஷியின் பெயருக்கு இருந்த அந்தக் கனத்த உறையை வக்கீல் ரிஷியிடம் கொடுத்தார்.

'பெரியவர் கடைசியா ஹோட்டலில் இருந்தபோது இந்தக் கடிதத்தை எழுதியிருக்கார்னு யூகிக்கிறேன். அவர் முக்கியமான தகவல் உன்னிடம் சொல்ல விரும்பியிருக்கலாம். அவர் உயிலை நான் படிக்கறதுக்கு முன்னால நீ இந்த லெட்டரைப் படிக்கறது நல்லது' என்றார் வக்கீல்.

ரிஷி கடிதத்தைப் பிரித்தான்.

அன்புள்ள ரிஷி,

நானும் நீயும் இன்று பீச்சில் உட்கார்ந்து பேசினோமே அதன் தொடர்ச்சியாக இந்தக் கடிதத்தை நீ எடுத்துக் கொள்ளலாம். என் உயிலை என்றோ எழுதி நான் வக்கீலிடம் சேர்த்து விட்டேன். உன்னிடம் சில உண்மைகளைப் பகிர்ந்து கொள்ளத்தான் இந்தக் கடிதம். இதை இன்றே எழுதி விட வேண்டுமென என் உள்ளுணர்வு தூண்டுகிறது. இதற்கு என் மனநிலையும் உடல் நிலையும் காரணமாக இருக்கலாம்.

ரிஷி ! நீ உண்மையிலேயே யார் தெரியுமா? என் தேடலில் எனக்குக் கிடைத்த ஒரே சாஸ்வதம் நீதான். நீ எனக்கு மிகவும் நெருங்கியவன். காதல் வயப்பட்டு வீட்டை விட்டு ஓடிப் போய்த் திருமணம் செய்து கொண்ட என் தங்கையின் மகன் நீ. ஊர்ப்பக்கமே வராமல் வடக்கே எங்கோ வாழ்ந்து கொண்டிருந்த என் தங்கை, வேறு வழியில்லாம உன்னை ஒரு அநாதை விடுதியில் விட்டிருப்பதாகத் தகவல் சொல்லிவிட்டுக் கண்ணை மூடினாள். உன்னை சென்னைக்கு அழைத்து வந்தேன். ஆனால் யாருக்கும் அறிமுகப்படுத்தவில்லை. மறைமுகமாக உன் படிப்புக்கு உதவினேன். என் கம்பெனியில் வேலை போட்டுக் கொடுத்தேன். ஆனால் அதற்குப் பின் வந்த பதவி உயர்வுகள் எல்லாம் நீயே உன் தகுதியால் தேடிக் கொண்டவை.

நீ குணக்குன்றாக வளர்ந்திருப்பதைப் பார்த்துப் பார்த்துப் பரவசப்பட்டேன். ஒரு ஏழைப் பெண்ணைத் தேடிப் பிடித்து மணந்து கொண்டாய். அவளைக் கண்ணின் மணி போல் வைத்திருக்கிறாய். தாம்பத்யத்தை அலங்கோலமாக்கி விட்ட என் போன்றோருக்கு உன் இனிய இல்லறத்தால் சாட்டையடி கொடுத்தாய். மனித உறவுகளுக்குப் புது

www.tamilarangam.net



அர்த்தம் சொன்னாய். மனித நேயத்திற்குப் புதுப் பரிமாணங்கள் காட்டினாய். ஆன்மீகத் தேடலைத் தவிர வேறெந்தத் தேடலையும் நான் உன்னிடம் பார்த்ததில்லை.

என் உயிலுக்கு வருகிறேன். நம் கம்பெனியின் 60% ஷேர் உனக்கும் மற்ற 40% ஷேர், பார்வதி, ப்ரஜோத், சங்கீதா மூவருக்கும் எனப் பிரித்திருக்கிறேன். இந்த ஏற்பாட்டால் கம்பெனி நிர்வாகம் முழுவதும் உன் கையிலேயே இருக்கும். மற்றவர்கள் உன் ஆலோசனைப்படிதான் நடக்க வேண்டி இருக்கும். அதனால் கம்பெனி ராஜ பாட்டையில் பீடு நடைபோடும். நீ மேலும் பல வெற்றிச் சிகரங்களை எட்டித் தொடுவாய்.

என் சொத்துக்களை நான்கு பங்காகப் பிரித்திருக்கிறேன். உனக்கு ஒரு பங்கு. மற்ற மூவரின் பங்குகளுக்கும் நீதான் டிரஸ்டி. பார்வதியின் பாட்டும் சங்கீதாவின் அத்து மீறல்களும் ப்ரஜோத்தின் திருவிளையாடல்களும் அவர்களை நடுத்தெருவில் கொண்டு நிறுத்தி விடாமல் இருக்கத்தான் இந்த ஏற்பாடு. உனக்குப் பிடிக்கிறதோ பிடிக்கவில்லையோ இந்தச் சிலுவைகளை எனக்காக – உன் தாய் மாமனுக்காக – நீ சுமக்கத்தான் வேண்டும்.

கனகாவுக்கும் ஒரு கணிசமான தொகை கொடுத்து ஒதுக்கி விடு.

தேடல்களே இல்லாத உன்னை வாழ்வின் இன்பங்கள் அனைத்தும் தேடி வரும் என்பது உறுதி.

இந்த அமைதியான இரவு நேரத்தில் என்னைச் சுற்றிலும் இருளின் ஆட்சி. என் உள்ளத்திலோ ஒளியின் ஆட்சி. ஏனென்றால் நான் தேடல்களை முடித்துக் கொண்டு சாஸ்வதங்களிடம் சரணடைந்து விட்டவன்.

***

*குற்றால அருவியைப் போல், குளிர் சந்தனக் காற்றினைப் போல், குயில் கூட்டம் கூவினாற் போல் இனிக்கும் கன்னித் தமிழ் என்னை எழுதத் தூண்டியது.*

*அனுபவங்கள் கதைகளாக மலர்ந்ததுண்டு. எழுதியவை அனுபவங்களாய் பரிணமிப்பது கண்டு வியந்ததுண்டு.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மனித நேயத்தின் புதுப் புது பரிமாணங்கள் என்னை பிரமிப்பில் ஆழ்த்தி என் எழுத்தார்வத்துக்குத் தூபமிடுபவை.

அன்னை என்றொரு நாதம், தந்தை என்றொரு வேதம், மனைவி என்றொரு மங்கல கீதம், கணவன் என்றொரு கலங்கரை விளக்கம், ஒரு தருவின் கனிகளாய் உடன்பிறப்புகள், பளிங்கு நீர் போல் பள்ளி நட்பு, கவிதைச் சுவையாய் கல்லூரி நட்பு, கண்ணீர் துடைக்கும் காவிய நட்பு – என்று ஊடும் பாவுமாய் மனித உறவில்தான் எத்தனை இழைகள் ! இந்த இசையில் ஆங்காங்கே அபஸ்வரம் தட்டுமேயானால், அது தனி மனித மனத்தின் வக்கிரங்களின் வெளிப்பாடேயாகும். அதுவே சமுதாயப் பிரச்னையாய் விஸ்வரூபம் எடுக்கும்பொழுது விளைவது வேதனை. மனித குலம் பண்பாட்டுச் சிகரங்களிலிருந்து நழுவிப் பாதாளம் விழும் பேதமை.

இந்த சமுதாய இடிபாடுகளிலிருந்து எழுந்து பெண்மை சங்கநாதம் செய்ய வேண்டும். அதற்குப் பெண்ணுக்கு கல்வி என்றொரு ஊன்றுகோல் வேண்டும். இலக்குகள் என்னும் தூண்டுகோல் வேண்டும். தன்னம்பிக்கை என்னும் தாண்டுகோல் வேண்டும். சில மனித மனங்கள் பாறைகளாகிப் போனாலும் மனித சமுதாயம் பாலைவனம் ஆகி விடாது என்ற நம்பிக்கை வேண்டும்.

பெண்ணியம் என்பது விழிப்புணர்வு. பெண் விழித்தெழும் பொழுதுதான் பாரதியின் கனவுகள் பலிக்கும்.

– ஜானகி ரமணன்

Flat No1, Rukmini Apartments
193, Ratapeth,
Pune - 411 011

www.tamilarangam.net



# தீர்ப்பு

'என் கணவரும் உங்கள் மனைவியும் ஒருவரை ஒருவர் மிகத் தீவிரமாக நேசிப்பதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'

'மிகக் குரூரமான கேள்வி இது, இந்த நிலையை நான் வெறுக்கிறேன். அதை முழுக்க மாற்ற ஏதாவது வழி இருக்கிறதா?

'வழியை நீங்கள்தான் சொல்ல வேண்டும். இந்த மாதிரி பிரச்னைகளை ஏற்படுத்துகிறவர்களே உங்களைப் போலப் பொறுப்பில்லாத கணவன்மார்கள்தான்.'

என்ன சொல்கிறீர்கள் நீங்கள்? இருந்து, இருந்து பழியை எங்கள் மீது போடுகிறீர்கள். திருமணம் என்கிற வீட்டைப் போஷிப்பது பெண் கடமை. உங்களைப் போன்ற பெண்கள் வீட்டுக்குள் இருந்து கொண்டு இல்லத்தரசி என்று வேஷம் கட்டி, கோலம் போட்டு, சமையல் பண்ணி, குழந்தைகளைப் பாராட்டு குவிக்கிற, பணம் சம்பாதிக்கிற மெஷின்களாகத் தயார் பண்ணுகிறது தவிர வேறு என்ன செய்கிறீர்கள்? கணவனைத் திசை திருப்பாமல் நீங்கள் அல்லவா பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்?'

'ஐயா, வார்த்தைகளை அளந்து பேசுங்கள், உங்கள் தப்பினால் தான் என் அருமையான கணவரைக் கை நழுவ விட்டிருக்கிறேன். எப்படித் தெரியும் எனக்கு உங்களைப் பற்றி என்று ஆச்சர்யப்படாதீர்கள். பிரைவேட் டிடெக்டிவ் வைத்து அவ்வளவும் அறிந்து வைத்திருக்கிறேன். நீங்கள் 87–ஆம் வருடம் ஜுலை மாதம் பெண் பார்த்து வந்தீர்களா உங்கள் மனைவியை? செப்டம்பர் கடைசி வெள்ளிக்கிழமை உங்கள் திருமணம். திருமணத்துக்கு முன் உங்கள் மனைவியிடம் பேசியதுண்டா?

கிடையாது. அதெல்லாம் எங்கள் குடும்பத்தில் கிடையாது. என்ன அவசியம் அதற்கு?

ஆமாமாம், என்ன அவசியம்? பேர் வெட்டப்பட்ட பாத்திரம் போல, ஸ்விட்ச் போட்டாற்போல, பெண் திருமணம் நடந்த உடனே மனைவியாகி விட வேண்டும். பெண் என்பவள் மனைவியாக ஒரு டிரான்ஸிஷன் தேவையே இல்லை ...

இளக்காரம் எதற்கு? அப்படி ஆண் கணவனாக ஒரு டிரான்ஸிஷன் தேவைப்படுகிறதா என்ன?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அபத்தம், ஆண் கணவனாகிற பயிற்சிதான் அவன் பிறந்தது முதல் கொடுக்கப்படுகிறதே ! அம்மா பாலிலிருந்து பெண் நெருக்கம் அவனுக்குக் கற்பிக்கப்படுகிறது. புடவை வாசனை ஆணுக்குப் புதிதல்ல. பெண்ணுக்குத்தான் மனைவியாகச் சில அவகாசங்கள் தேவை. இதை எப்போது புரிந்து கொள்ளப் போகிறீர்கள் நீங்களெல்லாம்?

அம்மணி, எனக்குப் புரியவில்லை. என் மனைவிக்காக நீங்கள் வக்காலத்து வாங்குவது அதிசயமாயிருக்கிறது. உங்கள் கோபம் என் மனைவி மீது ஆரம்பிக்காமல் என் மீது திரும்பினதற்குக் காரணமென்ன? எங்கும் பெண்ணியம் எதிலும் பெண்ணியம் என்கிற கெட்ட வீச்சம் உங்களைப் போன்ற இல்லத்தரசிகளிடையும் பரவிவிட்டது தானோ?

காரணத்தைச் சொல்கிறேன். என் கணவர் மிக நல்லவர். சாதாரண ஈர்ப்பில் விழுபவரல்ல. ஒரு பெண்ணில் மிக உயர்ந்த அம்சங்களே அவரைக் கவர்ந்திருக்கக் கூடியவை. அத்தகைய ஒரு பெண்ணை இல்லறத்தின் வேலி தாண்டித் துரத்தியது உங்கள் துஷ்டத்தனமாகத்தான் இருக்க வேண்டும்.

அதற்காக நான் பெண் பார்த்தது முதல் ஆரம்பிக்க வேண்டுமா என் தவறுகளை?

ஆமாம், அங்கிருந்துதான் ஆரம்பித்தாக வேண்டும். பெண் மனசை வெற்றி கொள்ளத் துரும்பெடுத்துப் போடுவதில்லை நீங்கள். கழுத்தில் ஒரு பட்டயத்தைக் கட்டி இன்னையிலிருந்து இது நீ என்று ஒரு நிபந்தனை கூடிய வாழ்வைத் திணித்து, பிறகு அவளை இன்னாரென்று ஒரு நிமிடம் கூட கண்டுகொள்ள முயற்சி செய்வதில்லை. அக்கிரமமில்லையா இது?

நான் ஒருத்தனா இப்படிச் செய்த ஒரே ஆள்? காலம் காலமாக அத்தனை பேரும்.

மனைவி தற்கொலை முயற்சி செய்தாள். உண்டா? இல்லையா?

ஆமாம், வெளியில் தெரியாமல் பார்த்துக்கொள்ள உன்பாடு என் பாடாகி விட்டது.

அதற்கு உபயோகப்படுத்திய உங்கள் சாமர்த்தியங்களில் ஒரு பகுதியை நீங்கள் அவளின் காரணங்களைத் தெரிந்து கொள்ள செலவழித்திருக்கலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என்ன காரணம்? பெரிசாக? உதவாக்கரை விஷயங்களுக்கெல்லாம் பெண்களுக்கு டிப்ரஷன் வந்துவிடும். அதையெல்லாம் தெரிந்து கொள்ளப் புகுந்தால் பிழைப்பைக் கவனிப்பது எப்படி? குழம்பு ரசம் சகிக்கலை, எதிர்த்துப் பேசறதை விடு, அளவுக்கதிகமாக் கேள்வி கேக்காதே, அப்பா அம்மா வளர்த்த லட்சணம் . . . இப்படியெல்லாம் கொஞ்சம் போலக் கடுமையாப் பேசிவிடக்கூடாது. கோபம் உச்சமேறி ரெண்டு தட்டி தட்டி விடக்கூடாது. அதற்கெல்லாம் டிப்ரஷன் வந்து விடும்.

ஐயா, யோசியும். உங்களை யாராவது முடியைப் பிடித்து இழுத்துக் கூடத்தில் போட்டுக் காலால் உதைத்திருக்கிறார்களா? மூலையோடு நிறுத்தி அறைந்து காயப்படுத்தி இருக்கிறார்களா? பாத்ரூம் வாசலில் வழி மறித்து நின்று உங்கள் மேல் வெந்நீர் ஊற்றி உறியடி நடத்தியிருக்கிறார்களா?

ஓ! இதெல்லாம் நான் செய்தேன் என் மனைவிக்கு என்கிறீர்கள். வேலைக்குப் போய்வரும் புருஷனிடம் விதரணையாக இல்லாத மனைவியிடம் கோபத்தில் புருஷன் அப்படி நடந்து கொள்ள வேண்டிவரும்தான். அதெல்லாம்தான் டிப்ரஷனுக்குக் காரணம் என்கிறீர்கள். எனக்குக் கோபம் வராதமாதிரி அவள் நடந்து கொண்டிருக்க வேண்டும். எதற்கெல்லாம் உங்களுக்குக் கோபம் வரும் என்று ஒரு பட்டியல் போட்டுத் தந்ததுண்டா உங்கள் மனைவியிடம்?

இதற்கெல்லாம் உங்களுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருக்க வேண்டுமா என்ன? அப்படிப்பட்ட 'சும்ப'ப் பயல் நானில்லை.

ஓ ! இப்போது புரிகிறது. பட்டியல் போட ஒரு கோபமில்லாத சமயம் வாய்த்ததில்லை உங்களுக்கு. அப்படித்தானே?

வளர்த்துகிறீர்கள். என்னை அநாகரிகமாகப் பேசத் தூண்டுகிறீர்கள். நான் என் குழந்தைகளின் அப்பா, ஞாபகமிருக்கட்டும்.

ஆ ! ஆச்சரியம் ! ஸ்பூனில் எடுத்து விட்டுக் கொண்டால்கூடக் குழந்தை பிறக்கும். தெரியுமோ? மன்னிக்கணும். ஆத்திரத்தில் நானும் அநாகரிகத்தை எடுத்துக் கொண்டேன். அது கிடக்கட்டும், உங்கள் குழந்தைகளுக்காக நீங்கள் எந்தக் கோட்டைகளை முறித்திருக்கிறீர்கள்? ஒரு பரீட்சை, ஒரு போட்டி, ஒரு இண்டர்வ்யூ, ஒரு எக்ஸிபிஷன் கூடப் போயிருக்கிறீர்களா? சொல்லுங்களேன் பார்க்கலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதெல்லாம் செய்தால்தான் நல்ல தகப்பனா? குடும்பத்தை நான் ஒன்றும் தெருவில் விட்டு விடவில்லையே !

அதாவது நீங்கள் என்ன செய்தும் குடும்பம் தெருவுக்கு வரவில்லை என்கிறீர்கள். மனைவியை வேலைக்கல்லவா அனுப்பியிருந்தீர்கள்,

அ . . . அது நான் அனுப்பினது தானே? பொருளாதார சுதந்திரம் கிடைத்ததே அவளுக்கு?

அட அட ! அப்படியே அவள் தொடர்ந்து போக முடியாமல் பார்த்துக் கொண்டது? அடிக்கடி லீவ் போட் வைத்தது? அவளுக்கு ஆபீசில் பிரச்னைகளை வரவைத்தது?

அதெல்லாம் இந்தப் பெண்களுக்கு சாமர்த்தியம் போதாது. இரண்டு பக்கமும் பேலன்ஸ் பண்ணத் தெரியாமல் தவித்தால் அதற்கு நாங்கள் என்ன செய்வது? நல்ல பாதுகாப்பான வாழ்வைத்தானே தந்தேன் அவளுக்கு?

பிரயோசனம்? மனைவியைக்கூட அழைத்துப் போனதுண்டா ஒரு பார்ட்டிக்கு, ஒரு ஊருக்கு, ஒரு திருமணத்துக்கு? அதற்கெல்லாம் ஏது நேரம்?

அப்படியெல்லாம் குஷி, ஜாலி பிடிக்காது எனக்கு. பூஜை, புனஸ்காரம், ஸமஸ்காரம் என்று வீட்டுக் கடமைகளை விட்டவனில்லை நான்.

ஆமாமா, அதுகளில்தானே கூட இருக்கிறவளை வதைக்க முடியும்? மகா கடமையுண்டு ஒன்று நண்பரே ! மனைவியை மகிழ்விப்பது, பரவசப்படுத்துவது, சின்ன முயற்சி செய்ததுண்டா?

அதெல்லாம் அசிங்கம், குழந்தைகள் வளர, பொறுப்புகள் வளரக் கொஞ்சிக் கொண்டா திரிய முடியும்? பெண்டாட்டி தலைப்பைப் பிடித்துக் கொண்டு அலைபவன் பௌருஷம் இல்லாதவன்.

அப்படியா? அதாவது பெண் பார்த்து யார் மூலமோ பிடித்துவிட்டது என்று சொல்லியதோடு உங்க ரொமான்ஸ் பார்ட் தீர்ந்து போச்சு. அப்புறம் மனைவியின் கடமை பார்ட்தான். நீங்க உங்க கணவன் பதவியைத் தக்க வைத்துக் கொள்ள updation எதுவும் தேவை கிடையாது. அதன்

www.tamilarangam.net



தகுதிகளை அதிகரித்துக் கொள்ள என்னவும் செய்ய வேண்டியதில்லை. ஒரு டிரஸ் ஸென்ஸோ ஒரு ஹேர் ஸ்டைல் மாற்றமோ ஒரு எடை குறைப்போ எதுவுமே அநாவசியம். உடல் ஈர்ப்பு தேவையில்லை அப்படித்தானே?

நீங்கள் சொல்வது புரிகிறது. தாம்பத்தியம் உடம்பில் வளர்வதாக நான் நினைக்கவில்லை. அது குறித்துப் பெரிய புரிதல்களை, சர்ச்சைகளை என் மனைவியிடம் நான் வைத்துக் கொண்டதில்லை.

உலகத்தைச் சுற்று முற்றும் கண் திறந்து பார்த்ததேயில்லையா நீங்கள்? உடல் சார்ந்த வாழ்வுக்கான தூண்டல்கள் சூழலில் இருப்பதே தவறு என்பீர்கள் போலிருக்கிறது !

என்ன நீங்கள்? அநாவசியமாகப் பேசிக் கொண்டு? இந்த மாதிரி என் மனைவி என் முன் நின்று பேசியதே கிடையாது தெரியுமோ? கணவன் மனசுப்படி பதில் பதிவ்ரதை நடந்து கொள்ள வேண்டும். அவள் அப்படிப்பட்டவள்தான். என்னை மீறி எதையும் அவள் செய்தவளே அல்ல.

சிரிப்புத்தான் வருகிறது நண்பரே ! இப்போது நீங்கள் இதைச் சொல்வது . . .

ஆம்! சிரிப்பு வரும் உங்களுக்கு, இப்படிச் சிரிப்பாய்ச் சிரிக்க வைத்தவர் நீங்கள். எல்லா இடத்திலும் இணக்கமில்லாமல் நடந்து கொண்டு உங்கள் கணவரை 'மாடர்ன்' என்ற பெயரில் விலங்கு வாழ்க்கைக்கு விரட்டியிருக்கிறீர்கள். பிறத்தியான் பெண்டாட்டியைத் தேடுகிறான் ஒருத்தன் என்றால் அதற்கு யார் காரணம் சொல்லுங்கள்.

நிச்சயம் நான் காரணமில்லை.

அப்புறம்?

நீங்கள்தான்.

அவ்வளவு நம்பிக்கையா உங்களுக்கு உங்கள் அழகின் மீது?

அழகைக் கொண்டு உடைப்பில் போடுங்கள். எங்கள் திருமணம் ஒரு பெர்ஃபெக்ட் மேரேஜ். ஏழு வருஷம் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு லவ் பண்ணி மணந்தோம். மனசார விரும்பி இணைந்தோம்.

அப்ப உங்க கணவரின் துரோகம் இன்னமும் அயோக்கியத் தனமானது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இல்லை. அவர் பாவம், நெகிழ்ந்திருக்கிறார். நல்லவர். உங்களைப் போலப் பொறுப்பில்லாதவர்களின் மனைவி மாதிரி நல்லவர்களின் அன்பைப் பெறுவதில் ஆச்சரியமில்லை.

அதென்னஅப்படி நல்ல தன்மை அவரிடம்?

எத்தனையோ இருக்கிறது. ஒண்ணைச் சொல்றேன். நாங்க காதலிச்சப்ப ஒரு கட்டம் வந்தது. எங்க வீட்டில வரன் பார்க்க ஆரம்பிச்சாங்க. நான் அவரைத் துளைச்சு எடுத்தேன். 'என்ன சும்மா இருக்கீங்க'ன்னு. உடனேஅவர் வீட்டிலருந்து ஆளனுப்பிச்சாரு. எங்க வீட்டில முறுக்கிக் கொண்டார்கள். சாக்காக என்னை ஒன்றுமில்லாமல் அனுப்பி வைத்தார்கள். அவர் என்னைக் காட்டிக் கொடுக்கவில்லை கடைசிவரை தானாக ஆசைப்பட்ட மாதிரி எத்தனையோ விதமாக அவமானப்பட்டு என்னைக் கல்யாணம் பண்ணிக்கிட்டார். நாங்க பரஸ்பரம் இஷ்டப்பட்டதை நான் அப்புறம்கூடக் காட்டிக்கிடல.

ஸ்வாரஸ்யமா இருக்குதே ! அதிலே என்ன லாபம் உங்களுக்கு?

நல்லாக் கேட்டீங்க, ஒரு பொண்ணுக்கு மனம் போல மாங்கல்யம்னா புகுந்த வீட்டில இளப்பம். அதுவே புருஷனுக்குப் புடிச்சு அவன் வலிந்து பண்ணின கல்யாணம்னா பெருமை. பிறந்த வீட்டுச் சீர் தேவையில்லை. உனக்குப் பெண் கொடுத்ததே பெரிசு என்று பிறந்த வீடு வீம்பு பேசலாம். பழியெல்லாம் கணவனையே சாரும். ஏற்றக் குறைச்சலை அவன் யாரிடமும் சொல்லிக் கொள்ள முடியாது.

பயங்கரக் கணக்குதான்.

மாமியார் மாமனார் மச்சினர் நாத்தனார்களுக்கு நான் அனுசரணை இல்லை என்று ஒருநாளும் அவர்கள் என்னைத் தூற்றியதில்லை. என் புருஷன் அதற்கு இடம் வைத்ததில்லை. நல்ல தன்மையில்லையா அதெல்லாம்? அப்ப நீங்க நல்ல மருமகளா இல்லை. நல்ல மனைவியா மட்டும் இருந்திருக்கவா போறீங்க? யார் சொன்னது? என்னைவிட நல்ல மனைவி இருக்கவே முடியாது. அவருடைய தொழில் நேரம் போக மீதி நேரத்தில் வினாடி வினாடியாகப் பிரித்து எனக்குள் இருத்திக் கொள்வேன். எனக்கானதாக முன்கூட்டித் திட்டம் போடுவேன். அவர் செயல்களை நான் தீர்மானிப்பேன்.

அட ! அப்படிக்கூட இருக்கிறதா ஒன்று?

www.tamilarangam.net



ஆமா ! கணவனுக்கும் மனைவிக்கும் தனித்தனியாக என்று எதுவுமே இருக்கக்கூடாது. அக்கவுண்ட் ஜாயிண்ட், நேரம் ஜாயிண்ட், வாழ்க்கை ஜாயிண்ட், என்னைக் குழந்தைகளைப் பிரிந்து ஒரு இடம் போக முடியாது அவர், எனக்கு உடம்பு சரியில்லை என்று அவர் அக்கா பெண் திருமணத்தைத் தாய்மாமனாக அவர் அட்டெண்ட் செய்வதைக்கூட நிறுத்தியிருக்கிறேன். சனிக்கிழமை கடையை மூடிவிட்டு ரெண்டாவது மணிக்கு மதியம் வீட்டில் கால் வைத்தால் திங்கள் காலை ஒன்பது மணிக்குத்தான் பிஸினஸ் பற்றி நினைக்கலாம் அவர். சனி மாலை காய்கறிக்கு அவர் முதுகை ஒட்டிக் கொண்டே போவேன். ஞாயிறு பிக்னிக் போவோம் குடும்பத்துடன். புதன் இரவு தப்பாமல் லாங் டிரைவ் உண்டு. பசங்களை டாக்டரிடம், க்ளாஸ், பரீட்சை என்று எங்கு அழைத்துப் போவதானாலும் அவர் கண்டிப்பாக இருந்தாக வேண்டும். அப்புறம் ரிலேட்டிவ்ஸ் வரப்போக பஸ், ரயில், ஏர் டிக்கெட் வாங்க, கேன்ஸல் பண்ண . . . முக்காலும் என் ரிலேட்டிவ்ஸ் . . . எதிர் கொள்ள . . . . கொண்டுவிட எப்போதும் அவர்தான் வரவேண்டும். அட்டவணை போட்டு திருத்தலம் போவோம்.

'அத்தனைக்கும் செலவுகள் அதிகமிருக்குமே ! 'சேமிப்பிலும் வல்லவரோ நீங்கள்'

'சேமிக்கிற அளவுக்கு என்ன பெரிய வருமானம்? பணம் பற்றாக்குறைக்கெல்லாம் காடு கடத்தி விடுவேனே அவரை நான்?'

'புரியவில்லையே ! ஒரு வினாடி பிரியக் கூடாது என்கிற அன்பான மனைவியா நாடு கடத்த முடியும்?

'இது கூடப் புரியவில்லையா? பணம் வேண்டுமென்றால் அவனவன் அமெரிக்கா, அரேபியா, ஆப்பிரிக்கா என்று போவதில்லையா? ஊரைவிட்டுப் போவதைத்தான் அப்படிச் சொன்னேன். 'நார்த்' போவதென்றால் அவருக்கு ஆகாது. ஹிந்தி தெரியாது. சப்பாத்தி ஆகாது. ராஜஸ்தானில் மார்பிள் கட்டிங் வேலை வந்தது. ஆறு வருடம் பார்த்தார். கடுமையான வேலை. ஐந்நூறு சதம் லாபம். பிள்ளைகளைப் பிரிய முடியவில்லை என்று ஓடி வந்து விட்டார். அந்த வெயிலுக்கு என்னால் போக முடியவில்லை. மீண்டும் துரத்தினேன். அஸ்ஸாமில் தேயிலை ப்ராஜெக்ட் எடுத்துக் கொண்டார். பணம் வந்தது. கூடவே சர்க்கரை வியாதியும். ஊருக்கு வந்தபின்பு நன்கு வாழ முடிகிறது. அத்தனையும் என்னால். ஏகப்பட்ட மனைக்கட்டு, வீடு, வாசல், நகைகள், கார், பேங்க் பேலன்ஸ் இவ்வளவும் எப்படி? நான்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒண்டியாகச் சமாளித்து நிமிட நிமிடத்துக்கு அவரை அவர் பணத்தை என் கண்ட்ரோலில் வைத்து, உள்ளூரிலும் வெளியூரிலும் அவரிடம் பேசி, திட்டமிட்டு . . . நானா நல்ல மனைவியில்லை?

'அவ்வளவுக்கும் அவர் குடும்பத்தார் பக்கபலமா இருந்திருப்பாங்க போல'

'யார் சொன்னது? ஒருத்தரையும் பக்கத்தில் சேர்த்ததில்ல'

'உங்க வீட்டில'

எங்க வீட்டில நான் வெச்சது சட்டம். நான் சொன்னபடி நடந்துக்குவாங்க'

'உங்க பிள்ளைகளும் உங்க மாதிரியே . . .'

பின்னே . . . அவங்க நல்லாயிருக்கணும்னு எவ்வளவு தியாகம் செய்தேன் . . . மூணாவது பிள்ளை வந்திடக் கூடாதுன்னு கவனமா கட்டுப்பாட்டில இருந்து . . . இயற்கையா கட்டுப்பாடு . . . மாத்திரை ஆப்பரேஷன்னு போயி எனக்குத் தொந்தரவானா பிரச்னைன்னு . . . அவருக்கு அதிருப்திதான். நேச்சுரல் பிளானிங்னு சொன்னா விலகல் பயங்கர உளைச்சல் . . . அவ்வளவும் பிள்ளைகளுக்காக . . .

'பிள்ளைகளுக்கு மதிப்பு அன்பு உங்க மேலதான் இல்லையா?'

'அப்பா மேலதான் உயிர். வீட்டை விட்டு ஓடிப் போனான் என் பையன். அவன் விட்ட லெட்டர்ல கூட 'அப்பா பாவம்னு' எழுதினான்.

'என்ன இப்படி அலட்சியமாச் சொல்றீங்க ஓடிப் போன பையனைப் பத்தி'

என்ன செய்வது? பதினால வயசுல அவனுக்கு கெரகம் பத்தலைன்னு ஜோசியரே சொல்லியிருந்தாரு. ஒரு ஹோமம் பண்ண வேணும்னு சொல்லிக்கிட்டேயிருந்தேன். அவரு காதிலே போட்டுக்கிடலை. புதுசா சிகரெட் பிடிக்க ஆரம்பிச்சாரு. நான் ஆறு மாசம் அம்மா வீட்டில இருந்துட்டு வந்தேன் மனசை சேஞ்ச் பண்ணிக்க. அவரு என்னைத் தேத்திக்கிட்டுத்தான் இருந்தாரு, ஒரு ஹோமம் பண்ணியிருந்தா உனக்கு துக்கம் வந்திருக்காதுன்னு'. அவருக்கும் துக்கம் தானே அது? அவருக்கு ஸ்பைனல் கார்டு பிராப்ளம் வந்திடிச்சு, பயங்கரமா ஹெல்த் ஸ்பாயில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆயிடிச்சு, மனசுல வேதனைப் படற மாதிரி தெரியல, காண்பிக்கிற டைப் இல்ல.'

'என் மனைவி நான் நொடித்துப் போன சமயத்தில ரொம்ப ஆறுதலா இருந்தா. லைன்னு நெனக்கிறேன். பயங்கரமா டௌன் ஆயிட்டேன். ஷேர் எல்லாம் போய் திரும்பி எழுந்திருக்க மாட்டாம . . .

'அப்ப நீங்க வீட்டுக்குள்ள கவனம் செலுத்தியிருப்பீங்களே!'

'அதில்ல, நான் விடாம ரேஸுக்குப் போனேன், முதல்ல அவ நகைகளத்தான் வித்தேன், சீருக்கு நகை போடுவதே இந்த மாதிரி சந்தர்ப்பத்துக்குத்தானே? என் கஸின் சொன்னதக் கேட்டு அவ ஆபீஸுக்குப் போயி மேனேஜரெ அடிச்சேன், அவ வேலையை விட வெச்சேன்'.

'அப்படி என்ன சொன்னான் உங்க கஸின்?'

'படிச்ச பொம்பளகளெ அதுவும் அழகா இருக்கறவங்கள நம்பவே கூடாதுன்னான்.

'ஓஹோ ! சிரம திசையில மனசுக்கு டைவர்ஷன் வேணும் போலத்தான் இருக்கும். ராஜஸ்தானிலருந்து அவர் வந்த சமயம் தொழில் அமையல இங்கே, சினிமாவில நடிக்க எனக்கு வாய்ப்பு வந்தது, நான் சரி செய்யறேன் நெலமையை, எனக்கும் சம்பாதிக்க முடியும்னேன், பதில் சொல்லாம அடுத்த வாரம் அஸ்ஸாம்போயிட்டாரு'.

'மனைவி சினிமாவில நடிக்கிறது . . . அதுவும் தனி சிரம திசையில் பணத்துக்காக . . . போவது . . . யாருக்கும் பிடிக்காதுன்னு நெனக்கறேன்?

'பின்னே என்ன செய்ய முடியும்? என் நாத்தனாருக்கு முப்பத்திரண்டாகியும் கல்யாணம் ஆகவில்லை. என் பெண்ணுக்குப் பதினெட்டாவது வயதில் நல்லது பண்ணிக் காட்டுகிறேனா இல்லையா என்று சபதம் போட்டிருக்கிறேனே என் மாமியாரிடம்?

'தங்கை திருமணம் அண்ணன் பொறுப்பில்லையா?'

'பெத்தவங்க குத்துக்கல் மாதிரியிருக்கறப்ப அண்ணனுக் கென்னங்கறேன். என் புருஷன் என்னை மீறி எதுவும் சொல்லமாட்டாரே ! நல்லவேளை, அந்த நாத்தி செத்திடிச்சு'

www.tamilarangam.net



'எனக்குப்படுது, உங்க கணவருக்கு நீங்க பொருத்தமில்ல, உங்கள மாதிரி என் மனைவி இருந்திருந்தா. நான் கட்டையா எரிச்சிருப்பேன் அவளை. என் தங்கைகளை என்னைவிட அவ நல்லா பார்த்துக்கிடுவா. தன் நகையைப் போட்டு சின்னவ கல்யாணம் பண்ணினாள். உங்கள மாதிரிக்கூட பொம்பள இருப்பாளான்னு இருக்குது எனக்கு'

'வாயை மூடுங்க ... நீங்கள்தான் மோசமான கணவர், நல்லவ நல்லவங்கறீங்க . . . அவள இப்படி அடி மட்டமாக்கி நான் போட்ட கோடு தாண்டாத என் புருஷனைத் தலைகீழா மாத்த வெச்சிருக்கீங்க.

'நாம பிரச்னைய விட்டு ரொம்ப வெலகி வந்திட்டு ஒருத்தர ஒருத்தர் பழி சொல்றோம்னு படுது . . . உங்க கணவரும் என் மனைவியும் ஒருத்தரை ஒருத்தர் நேசிக்கிறாங்க . . . எதுவுமே தேவையில்லை . . . அன்புதான் பிரதானம்னு . . . நினைக்கிறதா நீங்க சொன்னீங்க . . . இப்ப அதுதான் பிரச்னை நமக்கு . . .'

'இப்படி யோசித்துப் பாருங்க, அவங்க ரெண்டு பேரும் திரும்பி வர்றாங்க, நாம வர வைக்கிறோம்னு வையிங்க, அவங்க எப்பவும் பழையபடி இருந்த மாதிரி நம்மால பார்த்துக்க முடியுமா? குத்திக் காட்டாம ஒரு வாழ்க்கை வாழ முடியுமா நம்மால . . .'

'கஷ்டம்தான் . . . ரொம்பக் கஷ்டம். எப்படி துரோகத்தை நெனச்சுப் பார்க்காம இருக்கமுடியும்?

'விடுங்க . . . நான் சொன்னதையும் நீங்க சொன்னதையும் சேர்த்துப் பார்க்கிறேன், ஒரு நிமிடம், நீங்களும் சரி, நானும் சரி அவங்க ரெண்டு பேருக்கு ஏற்றவங்க இல்ல. இனிமேல முயற்சி செய்து ஃபிட் ஆவதும், கஷ்டம்தான் . . . அவங்க தம் தகுதியில் இணைஞ்சிருக்காங்க, அவங்களாவது சந்தோஷமா இருக்கட்டுமே !'

* * *

*மதிப்பீடுகளில் குறைபாடும் வறுமை, மன வெறுமைகளும் சமூகத்தில் மானுடத்தை வருத்துகிற துயரங்கள். அவற்றின் பாதிப்பு வக்கிரமாகவும் சுயநலமாகவும் வடிந்து முறையே ஆணாதிக்க மனப்பான்மையாக ஆண்களிலும் பொய்க் கலாச்சாரப் பூச்சாகச் சில சமயம் போலி பெண்ணியமாகப் பெண்களிலும் வெளிப்படுகிறது.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆணாதிக்க வெறி படைத்த ஆண்களைப் போலவே இருவேறு அளவுகோல்களை வைத்துக் கொண்டு இயங்கும் பெண்களும் வெறுக்கத்தக்கவர்கள்.

பந்தங்களின் சுகச் சுமை ஒருபோதும் இருபாலருக்கும் சிலுவையாகி விடக் கூடாது. அதிலும் ஒருவர் மீது இன்னொருவர் சிலுவையாவது கூடவே கூடாது. திருமண பந்தத்துக்குள் பரஸ்பரம் காதலை வளர்க்கிற, வாழ்விக்கிற அன்றாடக் கடமை இருபாலருக்கும் சமம். ஏனெனில் தேவைகளும் நியாயங்களும் எல்லாருக்கும் பொதுதானே?

மேற்கண்ட கருத்துக்களின் நிமிண்டலில் கதை பிறந்தது, தீர்ப்பு என்ற தலைப்பில்.

எதிர் கோணத்திலிருந்து கதை சொல்லப்பட்டிருந்தாலும் கருத்தில், மீறல்களுக்கான சப்பைக்கட்டு கண்டிப்பாக இல்லை.

மீறல்களைத் தவிர்ப்பதற்கான அவசியங்களின் பிரக்ஞையைச் சம்பந்தப்பட்டவர்களுக்கும் சாமான்யர்களுக்கும் புகட்டுவது முக்கியம் என்று பட்டபோது கதையை மறு திசையிலிருந்து நகர்த்திச் செல்வது தேவையாயிற்று. நானறிந்த பெண்ணியம் Gender Equuality தான். ஆண் செய்யும் தவறுகளைப் பெண்ணும் செய்வது சம இருப்பு அல்ல. புரிதல்மூலம் தவறு கலைவது ஆரோக்கியம். இருபாலரும் ஒருவரையொருவர் மேன்மைப்படுத்துவது, சமமாக வளர்வது, பலங்களை பலவீனங்களை ஏற்பது, மதிப்பது, பின் நேசிப்பது, முடிவின்றி நேசிப்பது . . . பெண்ணியத்தின் லட்சியம் அதுவாகத்தான் இருக்க முடியும். பெண் பெண்மை களைவதோ ஆண்மை ஏறிட்டுக் கொள்வதோ ஆண் மென்மையாவதோ தேவையற்றவை. அவரவர் இடத்திலிருந்தே அந்தந்தக் குணங்களோடே பால் சமத்துவத்தைப் பெறுவது சாத்தியம்.

– மாலதி

E/VII/4 P & T Quarters
Kaval Byrasandra
R.T. Nagar Bangallore 52

www.tamilarangam.net



# விட்டு ... விடுதலையாகி ...

நனவில் கூடாத கனவுலக எண்ணங்கள் அலைகள் ஓயாத சம்சாரக் கடலில் மூழ்கித் தன் முகவரி மறந்த பெண்மை. அலமுவின் வெளியுலகப் பிரவேசம் அருமை விரிந்த உலகைக் கண்டு வியப்புற்று விரிந்த விழிகள் மூட மறந்த நிலை. கதை சொல்லும் பாங்கில் ஒரு நளினம்.

- நா. அனந்த பரமேஸ்வரி

பெண்ணுக்கு எதிலிருந்தெல்லாம் விடுதலை வேண்டும்? ஆணிடமிருந்தா? சமூகத்திலிருந்தா? என்ற கேள்விக்கு அப்பாற்பட்டு அவள் உடல் சார்ந்த சில கூறுகளுக்காகக் கிடைக்கும் சிறை வாழ்விலிருந்து தான் விடுதலை வேண்டும் என்று குரல் எழுப்புகிறார் ஆசிரியர். சிறுகதையின் நடையும், எண்ணப் பதிவுகளும் வெகு இயல்பு.

- ஹரி விஜயலட்சுமி

"அந்த 'ஷட்ட'ரைப் போட்டுக்கிறதுதானே ...! – பின் இருக்கையிலிருந்து எழுந்த குரல், உள்ளத்தில் பதிவாகியிருக்கவில்லை. பதிவானாலும் ... அதைப் பொருட்படுத்தாத ... பொருட்படுத்தத் தோன்றாத மனநிலை ! அடர்த்தியாய்ப் பரவும் குளிரில், பேருந்தின் விரைந்த ஓட்டம் ... உடம்பு முழுக்கப் பனி ஊசிகளைக் குத்தி உள்ளே இறக்கிக் கொண்டிருக்க ... அந்தச் சிலிர்ப்பும் ஓர் அனுபவமாகிறது. 'குள்ளக் குளிரக் குடைந்து' நீராடிய ஆண்டாளாய் ... விட்டதையெல்லாம் பிடிக்கும் தாகத் தவிப்போடு, வெளி மண்டலக் காற்றை ஆழ உள்வாங்கி, அதன் ரசனையில் கரைந்து அமிழ்ந்து போகிறது மனம்.

இந்தக் காற்றின் நுகர்வுக்காகக் காத்திருந்த காலங்கள் ...! குளிர்பனியின் மெய்தீண்டலைக்கூட ஆற அமர உள்வாங்கிக் கொள்ள முடியாமல் ... பரபரத்த வெம்மையுடன் தொலைந்துவிட்ட நாட்கள் !

"சாமி உண்டியல் எல்லாம் எடுத்து வச்சாச்சா?" – திரும்பவும் பின்னாலிருந்து குரல் !

வேறு எதற்காக இல்லாவிட்டாலும் ... இந்த மாதிரிப் பயணங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்காகவாவது, இந்த சாமி ... பூசை ... படையல், எல்லாவற்றுக்கும் நன்றி சொல்லத் தோன்றுகிறது.

www.tamilarangam.net



எட்டாம் வகுப்புப் படிக்கிறபோது, எவரோ எழுதிக் கொடுத்து உருப்போட்டிருந்த 'எனது இன்பப் பயணம்' கட்டுரையின் சில வார்த்தைகள் ... இன்னும்கூட உள்ளுக்குள்ளே உருண்டுகொண்டுதான் இருக்கின்றன. கட்டுரையின் சூடு ஆறியிராத உடனடித் தாக்கத்தோடு, அடுத்துவந்த பள்ளிச் சுற்றுலாவுக்குப் பணம் கேட்டு, அழுது அடம்பிடித்து ... அதற்காகவே அறைக்குள் அடைக்கவும் பட்டு, அன்று மாலையே, பயத்தாலோ ... பருவம் குதிர்ந்ததாலோ ... தான் 'பெண்' என்பதை உடம்பு கட்டியம் கூறிவிடப் பள்ளிப் பயணத்தின் பாதையும்கூட நிரந்தரமாய் மூடிப் போனது.

அந்த வேளையில், சீற்றச் சடவுடன் அம்மா சொன்ன அந்த வார்த்தைகள் ...

"கால்லே சக்கரத்தோடயே எப்பவும் அலையணும்னு ஒரு பொம்பளை நினைக்கக் கூடாதுடீ! ஸ்திரமா ஒரு இடத்திலே நின்னு நிலைக்கத்தான் இந்தப்பொறுப்பு ! அதைப் பொட்டிலே அடிச்சுப் புரிய வைக்கத்தான் ... சரியான சமயத்திலே உன்னை இப்படி முடக்கிப் போட்டிருக்கு ... அதைத் தெரிஞ்சுக்கோ முதல்லே ..."

அம்மா ... வெறும் பழக்கதோஷத்தில் ... ஒரு சம்பிரதாயத்திற்காக இப்படிச் சொல்லிவிட்டாளே தவிர, அவளுடைய ஆழ்மன ஓட்டம், அதற்கு முற்றிலும் மாறான வேறொரு தளத்திலேயே இயங்கிக் கொண்டிருந்தது என்பது சீக்கிரமே உணர்வாக ஒரு சந்தர்ப்பம் வாய்த்தது.

வாழ்க்கையிலேயே முதல் முறையாகக் குடும்பத்தோடு புகைவண்டி ஏறிப் பெரியம்மா பெண் உமாவின் கல்யாணத்திற்காகப் பயணித்த அந்தப் பொழுதில் ... பிறந்ததிலிருந்து இத்தனை வருஷம் பார்த்துப் பழகிய அம்மாவே காணாமல் போய் ... தனக்குள்ளே புதைந்து கிடந்த வேறொரு புதிய மனுஷியாக அல்லவா அவள் காட்சியளித்தாள் ...?

"ஜன்னலோரம் நின்னு அங்கே என்ன வேடிக்கை ...? முதல்லே ஜன்னல் கதவைச் சாத்து !"

"காக்கா குருவியெல்லாம் ஒரு அதிசயம்னு அதை வெறிச்சுக்கிட்டு நிக்கிறா பாரு ! இந்தாடீ ! உள்ளே வந்து பாத்திரத்தை ஒழிச்சுப் போட்டுட்டு மாவை வழிச்சு எடு".

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"ஏங்க ... வீட்டிலே நான் ஆக்கிக் கொட்டறது போதாதா? இதுங்களுக்கு நொறுக்குத்தீனி வாங்கிப் போட்டே வருமானத்திலே பாதியைத் தொலைச்சிடுவீங்கபோலிருக்கே ...?

– சிடுசிடுப்பின் நிழல்படியாத, சலிப்பின் தொனி கலவாத எந்தச் சொல்லையும், எவரிடமும் இதுவரை உச்சரித்து அறிந்திடாத அம்மாவிடம் ... அந்த நேரத்தில் மட்டும் நேர்ந்திருந்த ரசவாதம். நாரையும் கொக்கும் நகர்ந்து போகிற தந்திக் கம்பியும் விலகி இணைகிற தண்டவாளத் தடங்களும் ... எல்லாமே அதிசயமாய் ... அவற்றை விரித்த விழி விலகாமல் பார்க்க வேண்டுமென்பதற்காகவே ... ஜன்னலோர இருக்கையை யாருக்கும் விட்டுத்தராத ... குழந்தைத்தனமான அந்தப் பிடிவாதம் ! ரயில் பெட்டிக்குள் விற்பனையாகிற மக்கல் நாற்றமெடுக்கும் மலிவான பண்டங்களையும் கூட ரசித்துச் சுவைத்து ... அவள் களித்திருந்த அந்தத் தருணம் ...!

"ஹய் ...! அம்மா கூடச் சிரிக்கிறாங்க பாருடா! "

– குழந்தைகளின் கேலியும், கிண்டலும் உதட்டோரம் ஒரு நாணச் சுழிப்பைக் கவிதையாக்கி வடிக்க, அந்த அற்புதக் கணம் ... நித்தியத்துவம் பெற்ற ஒரு புகைப்படமாய் ... இன்னமும்கூட உள்ள அடுக்கிலே உறைந்துதான் கிடக்கிறது.

எண்ண ஓட்டத்தின் இனிய லயத்தை இடைவெட்டுகிறது... கரிசனம் கலந்த பின் இருக்கைக்குரல்.

"என்ன அலமு ... தூங்கவே இல்லையா? கொஞ்சமாவது தூங்கிக்கம்மா ! எத்தனை நாள் கனவு ...? எத்தனை வருஷத்து வேண்டுதல் பூர்த்தியாகப் போகுது ...! மனசு ... கொஞ்சம் பரபரக்கத்தான் செய்யும் ...! ஆனாலும் இடையிடையிலே தூங்கிக்க ...! அங்கே கோயிலுக்குப் போய் இறங்கினதிலேயிருந்து மூச்சுவிடக்கூட நேரமிருக்காது வரிசை வேற எவ்வளவு பெரிசா இருக்குமோ ... ! சிலசமயம் ... மணிக்கணக்கு ... நாள் கணக்கிலேகூட நிக்கணும்ங்கிறாங்க !"

கல்யாணம் செய்து வந்த புதிதில் ... இந்தக் கரிசனத்தில் பாதியையேனும் காட்ட முடிந்திருக்கிறதா?

மாட மாளிகை மாதிரி வீடுகளையெல்லாம் வந்த விலைக்குப் பிரித்து விற்றுவிட்டு, அண்ணன் ஒரு பக்கமும் தம்பி இன்னொரு பக்கமுமாய்க் காசு கொழுத்த பட்டணங்களைப் பார்க்கத் தொடங்கிவிட்ட காலத்திலும்கூட ... மாற்றங்களைக் கொஞ்சமும் அண்ட விட்டிருக்காத புகுந்த வீடு ! அங்கே ...

www.tamilarangam.net



எட்டு வரை படித்திருப்பதெல்லாம் எதற்காகவுமே உபயோகப்படாத ஒரு கூட்டுக்குடும்ப அடுக்களைக்குள்

"இந்தாடீ கடைசி இவளே ...."

என்ற மாமியாரின் செல்ல விழியுடன் ... 'அஞ்'சாவது மருமகளாய் .. ஒரு பெண்ணாய்க்கூட இல்லாமல், வெறும் எண்ணாய் மட்டுமே ஒடுங்கி ... எத்தனை யுகங்கள் ...!

அங்கே ... பிறந்த வீட்டில், மார்கழி பஜனை, விளக்கு பூஜை என்று சாமியைச் சாக்கு வைத்தாவது பெண்கள், வெளிக் காற்றை சுவாசிக்க வாய்ப்பைத் தேடிக் கொண்டு விடுவார்கள். இங்கோ ... வீடு கொள்ளாமல் புத்திர பாக்கியம் ததும்பி வழிய ... அதற்காகக்கூட அரசமரம் சுற்றவும் அங்கப் பிரதட்சணம் செய்யவும் தேவை ஏற்படாததால் ... கூடியவரை வீட்டுப்படியையே அதிகமாகத் தாண்டியிராத பத்தினித் தெய்வங்கள் ... இந்தக் குடும்பத்துப் பெண்கள் !

எப்போதாவது சுற்று வட்டாரத்தில் ... அதுவும் ஐந்தாறு மைல் தொலைவில், நெருங்கிய ... தூரத்து உறவுகளில் நேரும் விசேஷங்களுக்கு அபூர்வமாக அனைவரும் செல்ல நேரும் சந்தர்ப்பங்களிலும் வீட்டுக்காவல் ... கடைப் பிள்ளையின் தலையில்தான் வந்து விடியும்.

"இத பாருடா ! நீ சின்னவன் .... உனக்கு இன்னும் வயசு இருக்கு ! இப்ப நீ வரலைன்னா யாரும் தப்புச் சொல்லப் போறதில்லை ! நாங்க பெரியவங்க போகலைன்னாதான் குடும்பத்துக்கே பழியாப் போகும் ! வீட்டைப் பத்திரமாய்ப் பார்த்துக்க ! அதிலெல்லாம் உன் வீட்டுக்காரி அலமு படுசமார்த்தி ... நாங்க சொல்லணுமா என்ன?"

– உலகம் சுற்றிய விநாயகரின் திருப்தி, அந்த ஒற்றைச் சொல்லிலேயே சித்தித்துவிட, நாலுகைத் தாழ்வாரத்திற்கு நடுவே தெரியும் முற்றவெளியே ... பிரபஞ்சப் பெருவெளியாய் ...., அதுவே சில வேளைகளில் பாழ்வெளியுமாய் ... ஆகிப்போன காலங்கள் !

என்றோ ஒரு நாள் ! குடும்ப நபர்கள் எல்லோரும் போயே தீரவேண்டுமென்ற நிர்ப்பந்தமான சூழ்நிலை வாய்த்த அரிதான ஒருநேரம் ! கடிவாளம் இல்லாத குதிரையாய் ... மனசு தறிகெட்டுப் பறந்த வேளை ! சித்தமும், புத்தியும் உல்லாசமானதொரு ராக சஞ்சாரத்தில் இழைந்து தன்னையே இழந்த அந்த வேளையில் ஓர் அபசுரம் !

www.tamilarangam.net



"நல்லாய்த்தான் காரியத்தைக் கெடுத்தே போ ! நல்ல விஷயத்துக்குன்னு கிளம்பறப்ப ... இப்படிப்போய் மூலையிலே உட்கார்ந்திட்டியே ... ! இனிமே ... உனக்குத் துணையா இருக்க நாங்க ஆளைத் தேடியாகணும்" – சலித்துக் கொண்டபடி, பக்கத்து வீட்டுப் பெண் ஒருத்தியைத் துணைக்கு வைத்து விட்டு அனைவருமாய்க் கிளம்பிப் போகிறார்கள்.

வேண்டியது ... வேண்டாதது என்று எல்லா விஷயங்களையும் திறந்த வாய் மூடாமல் சளசளத்த அந்தப் பெண் ... ஒரு செய்தியை மட்டும் ரொம்பவும் ஆதங்கத்தோடு பகிர்ந்து கொள்கிறது.

"அக்கா ... உங்க வீட்டிலேயாச்சும் பரவாயில்லைக்கா ! நீங்க போக முடியாதபடி சூழ்நிலை அப்படி ஆகிப்போச்சு ...! அங்கே ... அந்த அய்யர் வீட்டிலே பாருங்க ! ஏதோ மடத்துச் சாமியைக் கூப்பிட்டுப் பாதபூசை செய்யறாங்களாம் ! அதுக்காக அவங்க பெத்த பொண்ணை ... அதுதாங்க்கா ... போனவருசம்கூட அதோட புருசன் செத்துப்போனானே ...! அதைக் கொண்டு போய் ஊர்க் கோடியிலே இருக்கிற சொந்தக்காரங்க வீட்டிலே விட்டுட்டுப் பாதபூசை செஞ்சிருக்காங்க ! ஏங்க்கா ... புருசன் செத்தப்புறம் முடியை எடுக்கலைன்னா ... மடத்துசாமி மூஞ்சியிலேயே முளிக்கக் கூடாதாமே ... அப்படியாக்கா ...!"

"இத பாரு .... ஊர் வம்பெல்லாம் நமக்கெதுக்கு?" – அப்போதைக்கு அவளை அடக்கி வைத்தாலும் ... இந்த இரண்டு சூழல்களுக்கும் வித்தியாசம் அதிகமில்லை என்பதும் ... இதற்கு இடையிலே ஊடாடிக் கொண்டிருக்கிற ஏதோ ஒரு ஒற்றுமை இழைதான் அவளை இப்படிப் பேசுமாறு தூண்டியிருக்கிறது என்பதும் நன்றாகவே புரிந்தது.

"காப்பி ஏதாச்சும் குடிக்கிறியா?" – பேருந்து, ஏதோ ஒரு தெருவோரக் கடையருகே நின்று கொண்டிருப்பது ... அப்போதுதான் உறைக்கிறது.

நள்ளிரவின் செறிவான இருட்டினூடே ... விழிகள் மட்டும் உயிர்ப்போடு ஒளிர்ந்தபடி, பாரவண்டிகளில் பூட்டப்பட்ட மாடுகள் அசைந்து நகர்கின்றன.

பிஞ்சுப் பருவத்தின் ஞாபக எச்சங்கள் ... இந்த வண்டி மாடுகள் ! உள்ளடங்கி, ஒதுங்கிப் போய்க் கிடக்கிற கிராமங்களிலிருந்தெல்லாம் ..., அழகர் ஆற்றில் இறங்கும் திருவிழாவுக்காக வண்டி கட்டிக்கொண்டு வந்து

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வைகைக் கரையில் குவியும் ஜனக் கூட்டம் ! மேம்பாலத்திற்குக் கீழே உள்ள கல் பாலத்தின் கோடியில், வண்டி மாடுகளைச் சாவதானமாக அவிழ்த்துப் போட்டுவிட்டு, அங்கேயே அடுப்பு வைத்துச் சோறு பொங்கிப் பசியாறும் மனிதத் திரள் ! அதில் தானும் ஓர் அங்கமாய்த் தாத்தா, பாட்டியின் கை பிடித்து நடந்தபடி – நகரமே அதிசயமாய் ..., நான்கு மாடிக் கட்டிடமெல்லாம் அற்புதமாய் வெறித்திருந்த கணங்கள் ! அந்த உணர்வெல்லாம், இன்றைக்குப் படிக்கவும் வேலைக்குப் போகவுமாய் பாதிநேரத்தைப் பயணத்திலேயே செலவழித்தாக வேண்டியிருக்கிற பட்டணத்துத் தலைமுறைக்குப் புரிந்து விடுமா என்ன?

எண்ணங்களை அசைபோட்டுப் போட்டுக் களைத்த மனசுக்கு இசைவாக இமைகளும் மூடிவிட ..., உறக்கம் கலைந்தபோது, பொழுது புலர்ந்து கொண்டிருக்க, மலைப்பாதையின் கொண்டை ஊசி வளைவுகளில், பேருந்து ஊர்ந்து செல்ல ஆரம்பித்திருக்கிறது. உச்சத்தை எட்டப் போகும் உற்சாகம் ... உள்ளுக்குள் குமிழியிட்டு வெடிக்கிறது.

"இத பாரு அலமு ! கல்யாணம் ஆனதிலேயிருந்து நான் உன்னை வெளியிலே, வாசல்லே எங்கேயுமே கூட்டிக்கிட்டுப் போகலைங்கிறது ... உனக்குள்ளே பெரிய குறையாவே நின்னு போச்சுங்கிறது எனக்குத் தெரியாத விஷயமில்லை ! என்ன செய்யறது? சம்சாரி குடும்பத்தோட ஓட்டம் அப்படி ... ! இப்பப் பாரு ! பிக்கல் பிடுங்கல் எதுவும் இல்லை ! நம்ம மூத்த பையனுக்குக் கல்யாணம்கூட ஆகிப் போச்சு ... ஆனா ... அவன் குழந்தையா இருந்தப்ப நாம வேண்டிக்கிட்ட நேர்த்திக் கடனைச் செலுத்த இன்னும்கூட வேளை வராம இத்தனை நாள் இருந்திருக்கோம் ! இப்பக் கிளம்பு ... ! நாம ரெண்டு பேருமா ... மலைக் கோயிலுக்குப் போய் அதை முடிச்சுக்கிட்டு வருவோம் !"

பிச்சைக்காரனுக்கு முன்பு இறைக்கப்பட்ட தங்கக் காசுகளாய் மலைப்பயணம் முடிவாகிவிட .... அதன் இறுதிக் கட்டமும் இப்போது நெருங்கிக் கொண்டிருக்கிறது.

திகைப்பையும் பிரமிப்பையும் சற்றே பயத்தையும் ஊட்டுகிற மலைத்தொடர்கள் ! ஆழ்ந்த அமைதியை உள்வாங்கியபடி... எதற்காகவோ... யார் வருகைக்காகவோ ஆண்டுக் கணக்காய்க் காத்திருக்கும் பச்சைப் பள்ளத்தாக்குகள் ! சில் வண்டின் ஓசையே மொத்த உலகின் நாதரீங்காரமாய்ப் பிற ஓசைகளெல்லாம் அடங்கியும் அவிந்தும் போய் மோனத் தவமியற்றும் சிகரங்கள் ! மூலமும் முடிவும் நடுவும்கூட மறைத்தபடி ... கண் மறைவாய்ச் சலசலக்கும் சிற்றோடைகள் !

www.tamilarangam.net



அருவி ...! அது எங்கே போனது ...? ஏதோ ... வயிரத்தைத் தொங்க விட்டமாதிரி இருக்குமாமே? மகன், தமிழ்ப் பாடத்தைச் சத்தமாய்ப் படித்தபோது, காதிலே விழுந்து, மனசிலே பதிந்து போன விஷயம் ! மலையரசி சூடிக் கொண்டிருக்கிற அந்த வயிரத் தொங்கட்டானைத் தேடித் தவிக்கிறது உள்ளம்.

"இந்த வேண்டுதலுக்கே – அருவிக் குளியல்தான் ரொம்ப முக்கியம் அலமு ! அருவியே ஒரு அம்மன்தான்னு இந்தப் பக்கம் நினைக்கறாங்க ! வெள்ளமாய்க் கொட்டற தண்ணியிலே தலை நனைச்சாலே நம்ம பாவமெல்லாம் பஞ்சாய்ப் போயிடும் ! குளிச்ச ஈரத்தோட ... தண்ணி சொட்டச் சொட்டக் கோயில் வரிசையிலே போய்ச் சேர்ந்துக்கிட்டோம்னா ... நாம சாமியைக் கும்பிடறதுக்குள்ளே துணியெல்லாம் 'வெட்'டுன்னு காய்ஞ்சு போகும் !"

– தான் சென்று வந்த புதுமை மாறாத கிளர்ச்சியோடு ஒரகத்தி சொல்லியிருந்த வார்த்தைகள் !

பெரியதொரு குலுக்கலோடு பேருந்து நிறுத்தப்படுகிறது.

"ம் ... ம் ... அருவிக் கரையெல்லாம் இறங்குங்க ...! இனிமே அடுத்தாப்பிலே பஸ் ஸ்டாண்டுதான் ...!"

– வானுக்கும், மண்ணுக்குமாய் விசுவ ரூபமெடுத்திருக்கும் அந்த வெள்ளை அற்புதத்தில் வசமிழந்து ... உச்சி ரோமம் முதல் உள்ளங்கால் நரம்பு வரை கூச்செறிகிறது. அருவிக்குச் சற்றே மேல்மட்டத்தில் அமைந்திருந்த கோயிலின் வாசல் நோக்கி ... எறும்புச் சாரியாய், மனித மந்தை !

சுளீரென்று ... அடிவயிற்றில் ... சூட்டுக் கோலால் சூடிழுத்த மாதிரி ... ஒரு வலிக்கீற்று ! சுதாரித்துக் கொண்டு எழுந்து கொள்ள முயலும்போதே தொடையிடுக்கில் பிசுபிசுப்புத் தட்ட மூச்சடைத்துப் போய் மூளையில் அறைகிறது யதார்த்தம் ! ஆறு மாத காலமாக, 'அது' அண்டவே இல்லையென்பதால், விட்டு விடுதலையாகி விட்டதாக எண்ணியதெல்லாம் வெறும் கானலா?

தொடங்கிய புள்ளியிலேயே மீண்டும் வந்து நின்றுவிட்டதைப் போன்றதோர் ஆயாச உணர்வு தலையெடுக்கத் தொடங்குகிறது. பரமபத ஆட்டத்தில், சறுக்கியும் ... ஏறியும் ... ஒரு வழியாகத்

www.tamilarangam.net



தொண்ணூற்றெட்டாவது கட்டத்தை எட்டுகையில் ... விழுங்கக் காத்திருக்கும் ... நீண்டு பருத்த மலைப்பாம்பு ! விஷ நாக்குகளின் கோர வீச்சுக்களோடு — அதன் பிரளய தாண்டவம் ...! இந்த முறையும் அதற்கு இரையாகவா ...?

"என்ன அலமு அசந்துபோய் உட்கார்ந்திட்டே — தலையைச் சுத்துதா என்ன?"

"அதெல்லாம் ஒண்ணும் இல்லீங்க ... ! அருவியைப் பார்த்ததிலே கொஞ்சம் அசந்துபோய் உட்கார்ந்திட்டேன் அவ்வளவுதான் ... ! நீங்க சாமானை இறக்குங்க !"

பயணிகளை உதிர்த்துவிட்டுப் பேருந்து இறங்கிப் போகிறது.

"என்னங்க ... ! நாம இங்கே மூணு நாள் தங்கப் போறோம் இல்லையா? அந்த மூணு நாளும் ... ஆசை தீர அருவியிலே குளிச்சிட்டுக் கோயிலுக்குப் போகணும்ங்க !"

- எம்.ஏ. சுசீலா

தமிழ்த் துறை,
பாத்திமா கல்லூரி,
மதுரை — 18.

www.tamilarangam.net



# ஆழம்

ஆழம் காணமுடியாததென்று குறிப்பிடும் பெண் மன ஆழத்தின் ஒரு பரிமாணத்தை வெளிப்படுத்துகிறது. வாத நோயின் பிடியில் சிக்கி ஓராண்டாகப் படுக்கையில் கிடக்கும் கணவனைக் "கவனிக்காமலே" கவனிக்கலாம் என்ற மனித உறவியலை நடைமுறை வாழ்க்கைச் சித்தரிப்பாகக் கதை வெளிப்படுத்துகிறது. கணவனை அலட்சியப் படுத்துவதான ஜானகியின் செயல்பாடுகளின் எதிர்வினைகள், கணவன் மீது குடும்பத்தாருக்குள்ள அன்பையும் கவனிப்பையும் அதிகப்படுத்து கிறதென்ற தலைகீழ் விகித உறவுச் சூழலை விளக்குகிறது. ஒவ்வொரு செயலுக்கும் அதற்கு இணையான எதிர்நிலை விள்ளவுச் செயல் உண்டு என்று நியூட்டன் குறிப்பிட்டது மனித மனத்திற்கும் பொருந்துமோ?

- ஹரி விஜயலட்சுமி

தேர்ந்ததொரு மனோதத்துவ நிபுணர் போன்று தன் குழந்தைகளையும் உள்ளாரையும் அறிந்து தன்னை இழிவுபடுத்தி மற்றவரை உயர்த்திக் கணவனைக் காக்கும் ஜானகியின் தாய்மை பாராட்டுக்குரியது.

- நா. அனந்த பரமேஸ்வரி

யாரோ தட்டி எழுப்பியது போல் வாரி சுருட்டிக் கொண்டு எழுந்தாள் ஜானகி. லைட்டைப் போட்டு மணியைப் பார்த்தவளுக்கு அதிர்ச்சி. மணி 6.10–ஐக் காட்டியது.

அட ராமா ... எப்படித் தூங்கியிருக்கிறேன். பக்கத்துக் கட்டிலைப் பார்த்தாள். 82 வயதான கணவன் ராமச்சந்திரன் விழித்துக் கொண்டு தான் இருந்தார். முகத்தில் எவ்விதமான சலனமும் இல்லை. இடக்கை மாத்திரம் போர்வையை இழுத்து விட்டுக்கொண்டே இருந்தது. பெராலிட்டிக் அட்டாக். கிட்டத்தட்ட ஒரு வருடமாக இப்படித்தான்.

அரக்கப்பரக்க வெளியே வந்து, பாத்ரூமில் பல் தேய்த்து, முகம் கழுவி, முந்தானையால் துடைத்துக் கொண்டே அறைக்குள் வந்தாள். அங்கிருந்த சிறிய கண்ணாடியில் முகம் பார்த்து, குங்குமத்தை நெற்றி நிறைய வைத்துக் கொண்டாள். கணவனுக்குத் துணி மாற்றி, போர்வையை நன்றாக இழுத்துப் போர்த்திவிட்டு வெளியே வந்தாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த நிமிடத்திலிருந்து அவளின் அன்றாட வேலைகள் தொடங்குகிறது. பாத்ரூமில் போய் வெந்நீர் அடுப்புப் பற்ற வைத்துவிட்டு, நேற்று பக்கத்து வீட்டிலிருந்து எடுத்து வைத்திருந்த சாணத்தை எடுத்து, வாளியில் உள்ள தண்ணீரில் கரைத்துக் கொண்டே, கேட்டைத் திறந்து வெளியே வந்தாள். மகன் ராகவன் பார்த்தால் சத்தம் போடுவான். அவள் சாணத்திற்காக ஒவ்வொரு வீட்டிற்கும் போய்க் கேட்பதைப் பொறுக்காமல் போர்ட்டிகோவிற்கு சலவைக் கற்களாகவே போட்டுவிட்டான். ஆனாலும் ஜானகி விடவில்லை. கேட்டைத் திறந்து கேட்டுக்கு வெளியே சாலைக்கும் காம்பவுண்டுக்கும் இடையே உள்ள சிறிய இடத்திலாவது சாணத்தைத் தெளித்துக் கோலத்தைப் போட்டு விட்டாள். குடியிருக்கும் வீட்டில் கோலம் இருக்க வேண்டுமாம்.

சாணி தெளித்துக் கூட்டிப் பச்சரிசி மாவில் மாவிலைக் கோலம் போட்டாள். தான் போட்டக் கோலத்தைத் தானே ரசித்துக் கொண்டிருந்த போது ... ஏதோ நிழலாடுவதைக் கண்டு திரும்பினாள். மருமகள் மைதிலி கையில் காப்பி டம்ளருடன் நின்றிருந்தாள். "மாமாவிற்குக் காப்பி ..." அவள் முடிக்கவில்லை. "அவருக்கென்ன அவசரம் இப்போ ... ஏதோ பழமொழி சொல்வார்கள். கெடக்கறதெல்லாம் கெடக்கட்டும், கெழவனைத் தூக்கி மனையில் வை என்று. நீ போய் குழந்தைகளையும் அவனையும் கவனி. ஆபீசிக்கு நேரமாகிவிடும் ..." சொல்லிக் கொண்டே காப்பி டம்ளரை தான் வாங்கிக் கொண்டு, மருமகளை உள்ளே அனுப்பினாள். அவள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டே போய்விட்டாள்.

ஜானகி தன் கணவனுக்குக் காப்பியைக் கொடுத்து விட்டு, வெளியே வரவும் ... தன் எட்டு வயது பேரன் முரளி தூக்க முடியாமல் ஒருபெரிய டூ இன் ஒன் டேப் ரெக்கார்டரைத் தூக்கிக் கொண்டு அறைக்கு வரவும் சரியாக இருந்தது.

"ஏய் எங்க எடுத்துகிட்டு போற ..." எங்கே கீழே போட்டுவிட்ப் போகிறானோ என்ற பதட்டத்தில் கத்தினாள்.

"பாட்டி, நேத்து ஸ்கூல்ல எங்க டீச்சர் வீட்ல இருக்கிற வயசானவங்களுக்கு உங்களால் முடிஞ்ச ஹெல்ப் பண்ணுங்கன்னு சொன்னாங்க. தாத்தா, பாவம் வயசானவர்தானே. என்ன வேணுமென்னு அவருக்கு கேட்கவும் முடியாது. இதோ இந்த கேசட்டிலே நிறைய சாமிப் பாட்டெல்லாம் இருக்கு. தாத்தா ரூம்ல வைச்சு இந்தக் கேசட்டை போடப்போறேன். தாத்தா ஜோரா கேக்கட்டும்." முகத்தில் ஏகப்பட்ட பெருமிதம்.

www.tamilarangam.net



"ஆமா ஒங்க தாத்தா சாமி பாட்டெல்லாம் கேட்டுட்டு நேரா சொர்க்கத்துக்கு போகப்போறாரு ... அம்மா பார்த்தா திட்டுவாங்க. இங்கே கொண்டா ..." என்று சொல்லிக் கொண்டே அவன் கையில் இருந்ததை மிகவும் சாதுர்யமாகப் பிடுங்கிக் கொண்டாள் ஜானகி.

"போ பாட்டி, நீ ரொம்ப மோசம்". கொக்காணி காட்டிக் கொண்டே அந்த இடத்தை விட்டு ஓடிவிட்டான் முரளி.

அடுத்த இரண்டு மணி நேரம் காலை நேரத்திற்கே உரிய பரபரப்பில் அந்த வீடு மூழ்கிவிட்டிருந்தது. 'இங்கே நேத்து வச்ச ஸ்கூட்டர் சாவி எங்கே தொலைந்தது' என்ற ராகவனின் உயர்த்திய குரலும் 'சனியன் இந்த டிபன் பாக்ஸை திறக்கவே முடியவில்லை' என்ற மைதிலியின் எரிச்சலும் 'என்னோட ஸ்கூல் பேட்ஜை இவன் எடுத்துக் கொண்டான்' என்ற பேத்தி பிரியாவின் அழுகையும் 'இது என்னோடது' 'நன்றாகப் பார்' என்ற முரளியின் தற்காப்பு நடவடிக்கையும் என அந்த வீடே அல்லோகலப்பட்டது.

அப்பாடா ஒரு வழியாக எல்லோரும் கிளம்பிப் போய்விட்டனர். அருகில் இருந்த ஷோபாவில் அமர்ந்து தன்னை கொஞ்ச நேரம் ஆசுவாசப்படுத்திக் கொண்டாள் ஜானகி. புயல் அடித்து ஓய்ந்தது போல் வீட்டில் ஓர் அமைதி. இனி மாலை வரை இப்படித்தான். வீட்டின் வெளிக்கதவை உள்பக்கமாகத் தாழ் போட்டாள். குக்கரில் இருந்த இட்லியை மூன்று எடுத்து தட்டில் வைத்துக் கொண்டு கொல்லைப்புறமாக வெளியே வந்தாள். கணவனின் அறைக்குள் நுழைந்து இட்லியைக் கொஞ்சம் கொஞ்சமாக ஊட்டத் தொடங்கினாள். 'வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு' என்ற திருவள்ளுவரின் வாசகம் இவருக்குத்தான் பொருத்தமாக இருக்கும். வேண்டும், வேண்டாம், பிடிக்கிறது, இல்லை என்று எதுவும் சொல்ல மாட்டார். சொல்ல அவரால் முடியாது.

ஒரு வருடத்திற்கு முன்னால் எப்படி இருந்தவர். காலம் செய்த கோலத்தை என்னவென்று சொல்வது. ராமச்சந்திரன் என்ற அவரது பெயரே பெரும்பாலும் யாருக்கும் தெரியாது. தியாகி என்றோ நாய்னா என்றோதான் கூப்பிடுவார்கள். சுதந்திரப் போராட்ட வீரர், சிறந்த தேசபக்தர். இப்பொழுது உள்ள அரசியல் கட்சிகள் எல்லாவற்றையும் சரமாரியாகச் சாடுவார். யாரும் அவரைக் கோபித்துக் கொள்ள மாட்டார்கள். மாறாக 'உண்மைதான், இந்தக் காலத்தில் இவரைப்போல தன்னலமற்ற தேசபக்தர்கள் யார் இருக்கிறார்கள்' என்று சொல்லிக் கொண்டே

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போய்விடுவார்கள். அந்த ஊரில் நடக்கும் நல்லது கெட்டது எல்லாவற்றிற்கும் முன்னால் நிற்பார். எப்பொழுதும் கதர் வேஷ்டி, காவிக் கலரில் முழுக்கைச் சட்டை, நெற்றியில் நாமம் என பளிச்சென்று இருப்பார்.

ஆசைக்கொரு பெண், ஆஸ்திக்கொரு ஆண் (ஆஸ்தி இல்லாவிட்டாலும்) எனக் கச்சிதமான குடும்பம். இரண்டு பேரையும் நன்றாக படிக்க வைத்து நல்ல இடத்தில் திருமணமும் செய்து வைத்து விட்டார். எல்லாக் கடமைகளையும் முடித்து 'அப்பாடா' என ஓய்வு எடுக்கும் சமயத்தில்தான் எழுந்து நடக்கக்கூட முடியாமல் நிரந்தர ஓய்வை அந்த ஆண்டவன் கொடுத்து விட்டான். 81 வயதுவரை அவர் டாக்டரிடம் போனதே இல்லை. அடிக்கடி 'மயக்கம் வருகிறது' என்று மாத்திரம் சொல்வார். அப்பொழுதெல்லாம் ஏதோ கை வைத்தியம் செய்து கொள்வார். அவரும் டாக்டரிடம் போய் காட்டியதில்லை. மற்றவர்களும் அதை ஒரு சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை.

ஒரு நாள் மயக்கம் வந்து ரோட்டிலேயே விழுந்து விட்டார். மூளையில் ரத்தக்குழாயில் அடைப்பாம். ஏதேதோ காரணங்கள். டெஸ்டுகள், மருந்துகள், மாத்திரைகள் .... இப்படிக் கடைசியில் படுத்தப் படுக்கையாகி விட்டார். கொஞ்ச நாட்கள் சிரமப்பட்டுப் பேசினார். ஆனால் யாருக்கும் எதுவும் புரியாது. இப்பொழுதெல்லாம் அதுவும் நின்றுவிட்டது. 'நாய்னாவிற்கா இப்படி ஆக வேண்டும். ஒரு ஈ எறும்புக்குக்கூட கெடுதல் செய்யவில்லை. ஆண்டவனுக்கு இரக்கமே இல்லையா?' இப்படிப்பட்ட விமர்சனங்களுடன் அந்த ஊரே கண்ணீர் வடித்தது. எல்லாமே படுக்கையில்தான். பின்னால் பாத்ரூம் பக்கத்தில் இருக்கும் தட்டுமுட்டு சாமான்கள் வைத்திருக்கும் அறையை ஒழித்து அவருடைய அறையாக மாற்றிவிட்டனர். ஊரெல்லாம் சுற்றியவரின் வாழ்க்கை கடைசியில் அந்த சிறிய அறையில் முடக்கப்பட்டு விட்டது. இரவில் ஜானகி அவருக்குத் துணையாக அந்த அறையிலேயே படுத்துக் கொள்வாள்.

ஒரு நீண்ட பெருமூச்சுடன் அந்த அறையை விட்டு வெளியே வந்தாள். பாத்திரம் தேய்த்து, வீடு துடைத்து, துணி துவைத்து, குளித்து முடித்து, ஊறவைத்த அரிசியைக் கழுவிக் கிரைண்டரில் போடத் தொடங்கினாள். காலிங்பெல்லின் சத்தம். கதவைத் திறந்தாள். வெளியே மகள் விஜயா நின்று கொண்டிருந்தாள். அவளை உள்ளூரிலேயே கல்யாணம் செய்து கொடுத்தது. பக்கத்துத் தெருவில்தான் அவள் வேலை செய்யும் அலுவலகம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"வா . . . வா . . . இந்நேரத்திற்கு . . ." முகத்தில் பெரிய கேள்விக்குறி . . .

"ஒன் அவர் பர்மிசன் போட்டுவிட்டு வந்தேன். நாய்னா எப்படி இருக்கிறார்? தம்பி ராகவன், மைதிலி, குழந்தைகள்? .... வேலைக்காரி என்ன இன்று மட்டமா ....." பதில் சொல்வதற்குக்கூட நேரம் கொடுக்காமல் கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனாள்.

"நாய்னாவுக்கு என்ன ... அப்படியேதான் இருக்கிறார். போன ஞாயிற்றுக்கிழமைதானே பார்த்துவிட்டு போனாய் அதற்குள் அதிசயம் ஏதாவது நடந்து எழுந்து நடந்து விடுவார் என்று பார்த்தாயா" சொல்லிக்கொண்டே சாப்பாடு போடுவதற்காகத் தட்டு எடுக்கப் போனாள்.

"சாப்பாடு இப்ப வேணாம். நான் நாய்னாவை குளிப்பாட்டப் போகிறேன்".

"உனக்கு வேற வேலையே இல்லை. ஞாயிற்றுக்கிழமை தானே குளிப்பாட்டியது. இப்ப என்ன அவசரம்".

"பெட்சோர் வந்திரும்மா".

"அதெல்லாம் ஒண்ணும் வராது. நான் தினமும் துடைத்து சுத்தமாகத் தான் வைத்திருக்கிறேன். எனக்கு வேற வேலை இருக்கு"

"உன்னை யார் கூப்பிட்டது ... நானே செய்து கொள்கிறேன்". கோபமாகச் சொல்லிக்கொண்டே வெளியே வந்தாள். 'ச்சே ... இந்த அம்மா ஏன்இப்படி ஆகிவிட்டாள். எல்லா வேலைகளையும் செய்ய நேரம் இருக்கும், முடியும். ஆனால் நாய்னாவை குளிப்பாட்ட மாத்திரம் முடியாது. 'மனதிற்குள் திட்டிக்கொண்டே அவரைக் குளிப்பாட்ட ஆயத்தம் செய்தாள்.

அவளும் ராகவனும் சிறிய குழந்தைகளாக இருக்கும் பொழுது நாய்னாதான் அவர்கள் இருவரையும் பெரும்பாலும் குளிப்பாட்டி விடுவார். கதர்க்கடையில்தான் சோப்பு வாங்குவார். அதை மூன்று துண்டுகளாக வெட்டி ஒரு துண்டை மாத்திரம்தான் சோப்புப் பெட்டியில் வைப்பார். பல்பொடியைச் சிறிய, சிறிய பொட்டலங்களாக மடித்து வைத்திருப்பார். காலையில் இரண்டு பேருக்கும் ஆளுக்கொரு பொட்டலம் கொடுத்து அருகிலிருக்கும் காவிரியாற்றுக்கு அழைத்துச் செல்வார். அவர்கள் இருவரையும் முதலில் குளிப்பாட்டித் துடைத்துக் கரையில் இருத்திவிட்டுப் பின்புதான் குளிக்கப் போவார். எத்தனையோ சோப்புகள் வாங்கினாலும்,

www.tamilarangam.net



சிறிய வயதில் உபயோகப்படுத்திய அந்த சோப்பின் வாசனை இன்னும் அவளுக்கு மறக்கவில்லை. அப்பா எது செய்தாலும் அதில் ஒரு பர்பெக்ஷன் இருக்கும். அதிகம் படிக்கவில்லை என்றாலும் அவரது பொது அறிவு, நாட்டின்மேல் அவருக்கு இருக்கும் பற்று அவளை வியக்க வைக்கும். அவரைக் குளிப்பாட்டும் போது, அவளையறியாமல் அவள் கண்களில் கண்ணீர் வழிந்தது.

அன்று வெள்ளிக்கிழமை, ஜானகிக்குக் கூடுதலான வேலை. மாலை 5 மணிக்குமேல் ஒவ்வொருவராக வீடு வந்து சேர்ந்தனர். ராகவன் வரும்பொழுதே யாரோ ஒருவரை ஸ்கூட்டரில் வைத்து அழைத்து வந்திருந்தான். வீட்டிற்கு உள்ளேகூட வராமல் நேராகத் தன் தந்தையின் அறைக்குள் அவரை அழைத்துப் போனான். சிறிது நேரம் அவருடன் பேசிக் கொண்டிருந்துவிட்டு பின்பு அவரை அனுப்பிவைத்தான்.

"ராகவா . . . ."

"ஏம்மா கூப்பிட்டியா?"

"அது யாருப்பா?"

"பிசியோதெரப்பிஸ்ட். நாய்னாவிற்கு வாரத்தில் இரண்டு தடவை எக்சைஸ் கொடுக்கச் சொல்லி இருக்கிறேன்."

"எவ்வளவு செலவு ஆகும்"

"வாரத்திற்கு 600 ரூபாய் ஆகும்."

"அப்போ மாதத்திற்கு 2500 ஆகும். இது செய்தால் பூரணமாக குணம் அடைந்துவிடுவாரா?

"அது முடியாதும்மா . . . . வயசாச்சில்ல. ஏதோ கொஞ்சம் எழுந்து உட்கார முயற்சி செய்லாம். யாரையாவது பிடித்துக்கொண்டு கொஞ்ச தூரம் நடக்கலாம்."

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். அந்த பணத்தைப் பேங்கில் போடு. குழந்தைகளுக்கு ஆகும். அவர் எழுந்து நடந்து என்ன செய்யப்போகிறார்."

"என்னம்மா சொல்றே . . . அவருக்கில்லாத பணம் எதுக்கம்மா?"

"செலவு செய்றதிலேயும் ஒரு அர்த்தம் இருக்கணும். வெட்டியா

www.tamilarangam.net



பணத்தைச் செலவு பண்ணாதே." தீர்மானமாகச் சொல்லிவிட்டு, அருகில் இருக்கும் கோவிலுக்குக் கிளம்பினாள்.

அம்மாவும் மகளும் ஏதோ சீரியஸாக பேசிக் கொண்டிருக்கும் சப்தத்தைக் கேட்டு, அடுக்களையில் இருந்து எட்டிப் பார்த்தாள் மைதிலி. இந்த வயதிலும் இந்த அம்மாவிற்கு என்ன லக்மிகரமான முகம். மாமா இறந்த பிறகு . . . அவளால் கற்பனை செய்துகூட பார்க்க முடியவில்லை.

"பாட்டி, சாமிகிட்ட என்ன வேண்டிக்கிவே. தாத்தாவுக்கு சீக்கிரம் குணமாகி எழுந்து நடக்கனும்னுதானே," பேத்தி பிரியா கேட்டாள்.

"இல்லம்மா, அவரை எப்போ ஒங்கிட்ட அழைச்சிகிட்டு போறேன்னு கேக்கப் போகிறேன்" சொல்லிக்கொண்டே நடந்தாள் ஜானகி.

கோயில் அன்று நல்ல கூட்டம். நேரமாகிவிடவே அருகில் இருக்கும் மகள் வீட்டிற்குப் போகாமல் நேராக வீட்டிற்கு வந்து விட்டாள். செருப்பைக் கழற்றிக் கொண்டிருந்தவள், ஹாலில் மகனும் மருமகளும் ஏதோ முக்கியமாகப் பேசிக்கொண்டிருக்கவே தன்னையறியாமல் நின்றாள்.

"ஆனாலும் ஒங்கம்மா ரொம்ப மோசம். எந்த பொம்பளையாவது புருஷன் சீக்கிரம் சாகனும்னு வேண்டிக்கிவேன்னு சொல்லுவாங்களா. வெள்ளிக்கிழமையும் அதுவுமா. நாம கொஞ்ச அலட்சியமா இருந்தாக்கூட நம்மை அதட்டி, உருட்டி, சில சமயங்களில் கெஞ்சியும்கூட, மாமாவிற்கு வேண்டியதை செய்யச் சொல்லனும். ஆனா உங்கம்மா நம்ப செஞ்சாக்கூட வேண்டாங்கிறாங்க. வயசானா புருஷன் மேல இருக்கிற பாசம்கூடவா போயிடும். அதிசயமா இருக்கு". வார்த்தைகளில் கிண்டலும் கேலியும்.

"எங்கம்மாவாவது இந்த அளவுக்குப் புருஷனைப் பாத்துக்கிறாங்க எனக்கெல்லாம் வயசாச்சின்னா நீ ஏதாவது என்னை ஓல்ட் ஏஜ் ஹோம்ல சேர்த்திடுவே. போய் வேலையைப் பார்" எரிந்து விழுந்தான் ராகவன். இருந்தாலும், அவன் மனதிலும் அந்த உறுத்தல் இல்லாமல் இல்லை. 'ஏன் அம்மா இப்படி இருக்கிறாள்'.

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த ஜானகி சத்தம் போடாமல் வெளியே வந்து போர்டிகோவில் இருந்த சேரில் அமர்ந்து கண்களை மூடிக்கொண்டாள். மருமகள் மீது அவளுக்குக் கோபம் வரவில்லை. மருமகள் மட்டுமல்ல யாருமே அப்படிதான் நினைப்பார்கள். ஏனென்றால் ...

பொதுவாகவே எல்லா பெண்களுமே பூவோடு, பொட்டோடு,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுமங்கலியாகச் சாக வேண்டும் என்றுதான் ஆசைப்படுவார்கள். காரணம் இந்தச் சமூகம் சுமங்கலிகளுக்குக் கொடுக்கும் தனி மரியாதை. ஆனால் அதில் எனக்கு உடன்பாடு இல்லை. வயதான காலத்தில் தாயை வைத்துக் கொள்ள எல்லாப் பிள்ளைகளும் முன்வருவார்கள். ஏனென்றால் அவள் ஒரு சம்பளமில்லாத அதுவும் ஒரு பொறுப்பான வேலைக்காரியாக மாறிவிடுகிறாள். ஆனால் ஆண்கள் அப்படி இல்லை. எத்தனை வயதானாலும் தங்களுடைய பழைய அந்தஸ்து சிறிதும் குறைக்கப் படுவதை அவர்கள் விரும்புவதில்லை. சிறிய வயதிலிருந்தே அப்படியே போற்றி வளர்க்கப்பட்டு வழக்கமானவர்கள். அதனால் அவர்களை வைத்துக் கொள்ளவும் பிள்ளைகள் தயங்குகிறார்கள். ஒரு சுமையாக நினைக்கிறார்கள்.

வாழ்விலும் தாழ்விலும் சுகத்திலும் துக்கத்திலும் பங்கெடுத்துக் கொள்கிறேன் என்று அக்னி சாட்சியாக கையைப் பிடித்து, வயதானக் காலத்தில் அவர்களைத் தவிக்க விட்டு, விட்டுத் தான் மட்டும் 'சுமங்கலி' என்ற பெருமையுடன் போக நினைப்பது சுத்த சுயநலம். எனக்குப் பிறகு என் கணவன் கஷ்டப்படுவதை, உதாசீனப்படுத்தப்படுவதை நான் விரும்பவில்லை. ஆகவேதான், நான் நன்றாக இருக்கும்போதே என் கணவன் நல்லவிதமாக போய்ச் சேர வேண்டும் என்று தினமும் ஆண்டவனை வேண்டிக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல என்னுடைய கணவனை அலட்சியப்படுத்துவது போல் நான் நடந்து கொள்வதற்கும் அவர் மீது உள்ள அபரிதமான அன்புதான் காரணம். ஏனென்றால் நான் அப்படி நடந்து கொள்ளும்பொழுதுதான் மற்றவர்கள் அவரை அலட்சியப்படுத்த மாட்டார்கள். அவரை இன்னும் அதிக அக்கறையுடன் கவனித்துக் கொள்வார்கள். எனக்குத் தெரியும். ராகவன் அடுத்த வாரமே ட்ரீட்மெண்ட் தொடங்கிவிடுவான். மகள் விஜயா பர்மிசன் என்ன, லீவே போட்டுவிட்டுத் தன் தந்தையைக் கவனித்துக் கொள்வாள்"

"ஆறு குளம், ஆழம் இல்லை. அது சேரும் இடம் ஆழம் இல்லை ஆழம் எது ஐயா? அந்த பொம்பள மனசுதான்யா?"

இளையராஜாவின் குரலைக் கேட்டுச் சிரித்தபடி, அதுவந்த தன் கணவனின் அறைக்குப் பிரசாதக் கூடையுடன் சென்றாள் ஜானகி.

– திருமதி. ரமணி பிரசாத்

68, கே.என்.கே. நகர்,
ரங்கநாதபுரம்,
சூலூர் – 641 402.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சும்மாதான் இருக்கா !

பெண்களை அமுக்கி வைக்கும் சூழல்களுள் ஓயாத வீட்டு வேலைகளுக்கு முக்கிய இடம் உண்டு. பிறந்த வீட்டில் வீட்டு வேலைகள், அம்மாவின் பொறுப்பு என்று இருப்பவர்களுக்கு புகுந்த வீட்டின் வேலை நெருக்கடி நுகத்தடியாக மாட்டிக் கொள்கிறது. சீதாவின் வேலைகளைப் பகிர்ந்து கொள்ளவோ, வேலை பளுவைப் புரிந்து கொள்ளவோ யாருமில்லை என்பதைவிட வீட்ல "சும்மாதான் இருக்கா" என்ற பட்டம் உணர்த்தும் முரண்பட்ட பொருள் இன்றைய இல்லத்தரசிகளின் நிலையின் பிரதிபலிப்பு.

- ஹரி விஜயலட்சுமி

கண் விழித்து முதல் கண் உறங்கும் வரை மூச்சுவிட மறந்து வேலைகளின் பளுவால் அழுந்திக் கிடக்கும் தன்னை, தன் கணவன் நண்பனிடம் "சும்மாதான் இருக்கா" என்று சொல்வது கேட்டு சீதா அதிர்ந்து நிற்பது வெகு யதார்த்தமாய் உள்ளது. வெளியில் வேலைக்குச் சென்றால்தான், பணம் சம்பாதித்தால்தான் வேலையா? வீட்டில் தன் கணவன், குழந்தைகளுக்காக வேலை செய்வது வேலை இல்லையா? சம்பளமில்லா விட்டால் மதிப்பில்லையா? ஆணின் இந்தப் பார்வைக் கோணம் என்று மாறும்? என ஆசிரியர் கேட்காமல் கேட்பது இயல்பாயுள்ளது.

நா. அனந்த பரமேஸ்வரி

வேலை, வேலை, வேலை.

மூச்சுவிட நேரமில்லை. எந்த நேரமும் ஏதாவது வேலைதான். 'அசடுக்கு அறுபது நாழியும் காரியம்' என்பார்களே, அந்த மாதிரிதான் ஆகி விட்டதோ?

'அம்மா ! பாலு வேணும்' புடவைத் தலைப்பை இழுத்தபடி அபிக்குட்டி.

'அட, கன்னுக்குட்டி தானா எழுந்து வந்துட்டதா?' அவளைத் தூக்கி அணைத்தபடி இரண்டு அடுப்பையும் சின்னதாக்கினேன். ஐந்து நிமிடம் போனால் குழந்தை அங்கேயே மூச்சா போய்விடுவாள். அடுப்படியில் துடைத்தெடுப்பது பெரும்பாடு. பாத்ரூம் அழைத்துச் சென்று, பல்லையும் துலக்கி விட்டேன். பாலைக் கொடுத்தபடி மணியைப் பார்த்தபோது அது கவலையே இன்றி ஏழரை காட்டியது. மனதிற்குள் பரபரப்பு. ஆனால்

www.tamilarangam.net



வெளியில் தெரியாது. எட்டு மணிக்குள் எல்லாம் ஆகிவிடுமா? கடவுளே ! காப்பாத்து.

'அம்மா . . . .'

'என்னடா?' முகமே திருப்பாமல் குரல் மட்டும் கொடுத்தேன்.

'ஆய் வர மாதிரி இருக்கு'

'அடக் கடவுளே !' கடவுளை எதற்குத்தான் கூப்பிடுவது என்ற விவஸ்தையே இல்லை.

'ஏன்னா ! கொஞ்சம் குழந்தையை டாய்லெட் கூட்டிண்டு போங்களேன்.'

'சீதா ! உனக்கு எந்த நேரம் எதைச் சொல்றதுன்னு கிடையாதா? இன்னும் இருபது நிமிஷத்துல நான் ஆபிசுல இருக்கணும். உன்ன மாதிரியா, எப்ப வேணா எதையும் செய்யலாங்கறதுக்கு.

எட்டு மணி ஆபிசுக்கு ஏழரை வரைக்கும் தூங்க வேண்டியது. யார் கேக்கறது? பதிலேதும் பேசாமல் அடுப்பை அணைத்துவிட்டுக், குழந்தையை அழைத்துச் சென்று கூட்டி வந்தேன்.

'அபிக்குட்டி ரொம்பச் சமத்தாம். அம்மா சமைப்பேனாம். பாப்பா விளையாடுமாம். 'நைசாக அவளைக் கீழே இறக்கிவிட்டு, அடுப்பைக் கவனித்தேன். வெண்டைக்காய் பச்சை நிறம் மாறாமல் உட்கார்ந்து கொண்டு என்னைப் பார்த்துச் சிரித்தது. இவர்கள் வீட்டில் எல்லோருக்கும் வெண்டைக்காய் கரு நிறமாய் மொறு மொறுவென்று இருக்க வேண்டும். இல்லையென்றால் என் மூஞ்சியில் துப்பாத குறைதான். அடுப்பைப் பெரிதாக்கி, கிண்டக் கிண்ட கறுப்புக் கறுப்பாய் வட்ட வட்டமாய் . . . .

ஊஞ்சல் சங்கிலி. எட்டு வயதில் நான் அழுதேன் என்று அடுத்த நாளே அப்பா வாங்கி வந்த ஊஞ்சல். அதன் பிறகு நான் விளையாடியது, சாப்பிட்டது, படித்தது, தூங்கியது எல்லாமே அந்த ஊஞ்சலில்தான். கல்லூரியில் படித்த நாட்களில் மாலை நான்கு மணிக்கு வீட்டிற்கு வந்தவுடன் அதில் படுத்துக்கொண்டு தலைமாட்டில் ரேடியோ. சிலோனில் சினிமாப் பாட்டு. ஆறு மணிக்கு அவர்களாய் வணக்கம் சொல்லி முடித்தால்தான்.

'சீதாக்கண்ணு ! ஏதாவது சாப்பிடேன். காலேலையும் எதையோக்

www.tamilarangam.net



கொறிச்சுட்டுப் போற. மத்யானம் இத்தனூன்டு டப்பாவிலே சாதம். பசிக்கவே பசிக்காதா?' அம்மாவின் பாசக் குரல்.

'அம்மா ! கொஞ்சம் சும்மா இரேன், S.P.B. குரல் என்னமாய் இழையறது பார் !'

'அந்தப் பாட்டைக் கேளு. வேண்டாங்கலே. அப்படியே இதையும் கொஞ்சம் சாப்பிட்டுக்கோ. நாளைக்கு உடம்புல தெம்பு வேண்டாமா?

அடை ஒரு நாள், அவல் ஒரு நாள். அம்மாவின் கை மணமே தனிதான். கொஞ்ச நேரம் பாட்டு. கொஞ்ச நேரம் படிப்பு. சிரித்துச் சிரித்துப் பேசிக் கொண்டே அப்பாவோடு சாப்பாடு. இப்பொழுதெல்லாம் நான் சிரிப்பதே இல்லை என்பது நினைவில் ஆடியது. தேதி என்ன? கிழமை என்ன? உலக நடப்பு என்ன? ஒன்றுமே தெரிவதில்லை. சிரிப்பும் கும்மாளமுமாய் அன்று வாழ்க்கைதான் எப்படி ரம்மியமாகக் கழிந்தது. காலை வேளையில் என்றைக்காவது அம்மா, 'சீதாக் கண்ணு ! ஒரு நிமிஷம் வந்து இந்தத் தேங்காயை அரைச்சுக் கொடேன். எனக்குக் கொஞ்சம் கை ஒழியல ! என்பாள். கைகளுக்கு ஓய்வில்லை என்ற அந்த வார்த்தையின் அர்த்தம் இப்பொழுதுதான் எனக்கு முழுதாகப் புரிகிறது. ஆனால் அன்றோ

'போம்மா ! உனக்கு வேற வேலையே கிடையாது. தேங்காய் இல்லாம ஒருநாளாவது உனக்குச் சமைக்கத் தெரியறதா? வதக்கி, வதக்கிப் பண்ணினாத்தான் ரொம்ப டேஸ்ட். குளிச்சு, ட்ரெஸ் பண்ணிண்டு நான் கிளம்பவே எனக்கு நேரமில்ல. இதுல நீ வேற.'

'நேரமாச்சுன்னா, நீ கிளம்பு சீதா, நான் பாத்துக்கறேன். 'இப்படிச் சொல்லும் அம்மா, எனக்கு இவரோடு கல்யாணம் நிச்சயமானவுடன், 'சீதா! இத்தனை நாளா நீ விளையாட்டா இருந்தாச்சு. இனிமே அப்டி இல்லை. அடுத்தாத்துக்குப் போற பொண்ணு. ஒன்னொன்னா காரியம் கத்துக்கணும். எங்கம்மா சொல்வா, காரியம் தெரிஞ்சுண்டு பண்ணாம இருக்கலாம். ஆனா தெரியாமலே இருந்திடப் படாதுன்னு. இன்னொன்னு கேட்டுக்கோ. பெரியவா காரியம் பண்ண, சின்னவா பாத்துண்டு நிக்கப்படாது. ஏனோ இவையெல்லாம் மந்திரம் போல் என் மனதில் பதிந்தது. கல்யாணமாகி வந்தவுடன் மாமியாரை உட்கார வைத்துக் காரியம் பண்ணத் தொடங்கினேன். இன்று எனக்கு உட்கார இல்லை, நிற்கவே நேரமில்லை. ஊஞ்சல் அசைந்து முன்னால் வந்தது . . .

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெண்டைக்காயைப் பாத்திரத்தில் எடுத்து வைத்து டப்பாக்களை ரெடி பண்ணத் தொடங்கினேன். என் கணவருக்கு, அவர் தம்பி ரகுவுக்கு, வேலைக்குச் செல்லும் அவர் மனைவி ராதாவுக்கு, என் பிள்ளை அருணுக்கு. ஒருவருக்கு டிபன். ஒருவருக்குப் பிசைந்த சாதம். ஒருவருக்குச் சாதமொன்றிலும் சிறு சிறு டப்பாக்களில் குழம்பும் கூட்டும். அருணுக்குச் சாப்பாடு தவிர கொறிப்பதற்கெனச் சாக்லேட், முறுக்கு எனத் தனி டப்பாவில். எடுத்து வைத்து முடிப்பதற்குள் ஒருவர் பின் ஒருவராய்ச் சாப்பிட உட்கார, பரிமாறும் வேலை. அவர்கள் எல்லோரும் சென்றபின் அபிக்குட்டியைக் குளிப்பாட்டி அதற்கு டிபன். அடுத்து மாமியார் பூஜை முடித்துவர, சிலநாள் டிபன் எடுப்பார். சில நாள் குடிக்கச் சூடாய் ஏதாவது கொடு, ஒரே திரியா சாப்பிட்டுக்கலாமென்பார். இதற்கு நடுவே நானும் ஓர் இயந்திரம்போல் குளித்து, காலை டிபன் எடுத்திருக்க வேண்டும்.

அம்மா வீட்டில் வீடு பெருக்கித் துடைக்க, பாத்திரம் தேய்க்க, துணி துவைக்க வேலையாள் உண்டு. இங்கு வந்தபோது, நான் என் மாமியாரிடம் 'வேலைக்கு ஆள் கிடையாதா?' என ஆச்சர்யமாய்க் கேட்க, அவர் என்னை ஒரு விநோத ஜந்துவைப் போல் பார்த்துவிட்டு,

பெருக்கித் துடைப்பா, தூசியும் துப்பட்டையும் அப்படியே இருக்கும். பாத்திரம் தேய்ச்சா பத்தும் பசையும் ஒட்டிண்டு இருக்கும். துணி தோய்க்கறதைப் பத்திச் சொல்லவே வேண்டாம். உன்னால முடியாதுன்னா சொல்லு. நானே ஒரு நிமிஷத்துல கிடு கிடுன்னு பண்ணிடுவேன்.' விக்கித்துப்போய் வேலையில் விழுந்தவள்தான் இன்றுவரை எழுந்திருக்கவே இல்லை. இந்த வேலைகளையெல்லாம் முடித்தால் மீண்டும் குழந்தைக்குச் சாப்பாடு, மாமியாரும் நானும் சாப்பிடுதல், இடத்தைச் சுத்தப்படுத்தல், அடுப்படியை மெழுகுதல். இப்படியே மூன்றுமணி ஆகிவிட இனி மாலை நேர டிபன் காப்பி. இரவில் போதாதவற்றுக்கு மீண்டும் சமையல், சாப்பாடு. விழுந்த பாத்திரங்களைத் தேய்த்தல். அடுப்படியைச் சுத்தம் செய்து, அடுத்த நாளுக்குத் தயாராக வைத்தல், எல்லோருக்கும் பாலைக் கொடுத்துவிட்டுப் படுக்கையில் விழும்போது ஒரு நாளும் மணி பதினொன்றுக்குக் குறையாது. உடனே தூங்க முடியுமா? குடும்பப் பிரச்சனைகள் பேசுதல். தாம்பத்ய உறவு. சீ ! என்ன வாழ்க்கை வேண்டியிருக்கு. இதுல நான் தோட்டத்தைச் சரியாகப் பராமரிப்பதில்லை என்ற குற்றச்சாட்டு வேறு. ஒருநாள் படுக்கையறையுள் நான் நுழைந்தவுடன் அவர் என்னிடம்.

'சீதா ! படித்தவள்தானே. ராதாவைப் போல் வேலைக்குப் போனால், குழந்தைகள் எதிர்காலம் பற்றி இன்னும் நன்னா யோசிக்கலாம்', என்றார்.

'ஆமாம், வாஸ்தவந்தான். அபிக்கு மூணு வயசாகி பள்ளிக்கூடத்துல

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போட்டுட்டாத் தாராளமாய்ப் போலாம். ஆனா ஒண்ணு, வீட்டிற்கு முழு நேர வேலையாள் போட்டுடணும், என்றேன்.

'என்ன சீதா இது? அம்மாவைப் பத்தி தெரிஞ்சுமா இப்படிப் பேசற.

'அப்ப, இதோடு இந்தப் பேச்சையே விட்டுடுங்கோ' முற்றுப்புள்ளியை நானே வைத்தேன்.

சாதாரண நாட்கள் கொஞ்சம் பரவாயில்லை. அதுவே விசேஷ நாட்கள், சினிமா, பிக்னிக் என்று வந்துவிட்டால் எனக்குத் தலையே சுற்றிவிடும். ரொம்பக் கவனமாக, டென்ஷன் ஆகாம வேலையை முடிக்கப் பார்த்தால் என் மாமியார் அவரிடம், 'ஏண்டா, ராமு எங்க வெளியில கிளம்பினாலும் நாம எல்லாரும் அஞ்சு நிமிஷம், பத்து நிமிஷம் முன்னாடியே கிளம்பிடறோம். சீதாவுக்கு மட்டும் ஏன்தான் இப்படி நேரமாறதோ. மசமசன்னு இல்லாம சுறுசுறுன்னு இருன்னு நீயாவது சொல்றதுதானே, என்று சொல்லும்போது எனக்கு அப்படியே எல்லாரையும் கடிச்சுக் குதறிடலாமுன்னு தோணும்.

விருந்தாளிகள் வந்துவிட்டாலும் திண்டாட்டம்தான்.

'வீடுன்னா மனுஷா வந்துண்டு போயிண்டு தான் இருப்பா,' – என் மாமியார்.

'சமாளிப்பதுதான் சமத்துக்கு அடையாளம்,' – இது என் கணவரின் கவிதை. இப்பொழுதும் யாரோ வந்துவிட்டார்கள். இவர் வாசற்புறம் சென்று கொண்டே,

'அடடே, மூர்த்தி ! வா ! வா ! பார்த்து எத்தனை வருஷமாச்சு.'

'ராமு சௌக்கியமா? அம்மா எப்படி இருக்கா? வொய்ப், குழந்தைகள் சௌக்கியமா?'

'எல்லாரும் சௌக்கியம்', அவரிடம் சொல்லிக் கொண்டே என்னிடம் வந்து 'டிபன் காப்பி கொண்டு வா ! சமையல் இன்னும் ஏதாவது விசேஷமாய்ப் பண்ணிடு. நான் இன்னிக்கு ஆபிசுக்குப் போகல, சொல்லிக் கொண்டே சென்று விட்டார்.

நெருங்கிய நண்பர் போலும். சிரித்துச் சிரித்துப் பேச்சு நீண்டு கொண்டே செல்கிறது. நண்பர் இவரிடம் கேட்கிறார்.

'உன் வொய்ப் கிராஜுவேட் இல்ல, வேலைக்குப் போறாங்கதானே?'

'இல்ல, இல்ல. சொல்லிப் பார்த்தேன். கேட்கல. வீட்ல சும்மாதான் இருக்கா !!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த மண்ணில் பெண்ணோடு வேலைப்பளு பிரிக்கவே முடியாமல் பின்னிப் பிணைந்து கிடக்கின்றது. வீட்டிலிருக்கும் பெண்ணாயினும் வேலை பார்க்கும் பெண்ணாயினும் வீட்டு வேலைகள் என்பன அவளுக்கே உரியன எனக் காலங்காலமாய்க் கற்பிக்கப்பட்டு வருகின்றது. வேலைப் பகிர்வு என்பது பல இல்லங்களில் இல்லை. ஓய்வு என்பது மாற்றுப் பணி என்பார்களே அந்த வகையிலாவது வெளியில் வேலைக்குச் செல்லும் பெண்ணிற்கு ஓர் ஆறுதலுண்டு. அங்கு அவள் பணிக்குப் பாராட்டுதலும்கூட சில நேரங்களில் கிடைக்கப் பெறுவதுண்டு. ஆனால் வீட்டில் ஓய்வின்றி, ஊதியமின்றி, அதனாலேயே மதிப்பின்றி பெண் ஓர் இயந்திரம் போல் இடையறாது உழைத்துக் கொண்டே இருக்கின்றாள். அதற்கு ஓர் அங்கீகாரம், ஓர் ஆறுதல் வார்த்தைகூட இன்றிப் போகும்போது அவள் படும்பாட்டையே எனது கதை சித்தரிக்க முயலுகின்றது.

உலகம் முழுவதும் ஒரு விஷயத்தில் ஒன்றுபட்டிருக்கிறது என்றால் அது பெண்ணை அடிமைப்படுத்தல் என்பதில்தான். பெண் படும் துன்பங்கள் என்பன அந்தந்தக் கலாச்சாரப் பண்பாட்டிற்கேற்பச் சற்றுக் கூடிக் குறைந்து அமைந்திருக்கலாம். அவ்வளவே வேறுபாடு. அல்லலுறுவதில் இந்தியப் பெண்களே முதல் நிலையில் இருக்கிறார்கள் என்பது அறிஞர் கருத்து. உலகில் வேறு எந்தப் பெண்ணிற்கும் இல்லாத வேறுபட்ட கொடுமைகள் இந்தியப் பெண்ணிற்கு மட்டுமே இழைக்கப்படுகின்றன. இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால் பிற நாடுகளில் தாம் அடிமைப்பட்டிருக்கிறோம் என்பதைப் பெண்களே உணர்ந்து பெண்ணுரிமைக்காகப் போராடத் தொடங்கினர். ஆனால் இந்தியாவிலோ ஆண்தான் அவள் அடிமை நிலை மாற முதன்முதலில் குரல் கொடுத்திருக்கின்றான். இரணியனிடமிருந்து பிரகலாதன் தோன்றியது போல ஆணிடமிருந்தே ஆணாதிக்கத்திற்கு எதிர்ப்பு வந்தது ஒரு நல்ல அறிகுறிதான். தான் அடிமைப்பட்டிருப்பதை இயல்பானதாய், ஆனந்தமாய் ஏற்றுக்கொண்ட பெண் இப்பொழுது அறியாமைத் துயிலிருந்து விழிப்புற்று சமநிலை நோக்கிப் புதிய பாதையில் அடியெடுத்து வைத்துவிட்டாள். இனி அவள் தான் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியையும் மிகக் கவனமாய் எடுத்து வைக்க வேண்டும். சிறிது தவறினும் மீண்டும் எழவே முடியாது.

– நா. அனுராதா

தமிழ்த் துறை,
பாத்திமா கல்லூரி,
மதுரை.

www.tamilarangam.net



# முதுமையில் ஒரு சாதனை

சமையல் அறையிலேயே தன் சாம்ராஜ்ஜியத்தை ஸ்தாபித்து, தனக்கென்று வேறெந்த அடையாளத்தையும் வேண்டுவதை எண்ணியும் பார்க்காத கோடானகோடி இந்தியப் பெண்களின் பிரதிநிதி கல்யாணி. ஒரு சிறு குழந்தையும்கூடத் தன் விருப்பத்தில் உறுதியாயிருப்பதிலிருந்து பாடம் கற்று வரும் கல்யாணி வீட்டை விற்பது பற்றிய தன் மறுப்பை - தன் கருத்தை முதன்முறையாக வெளியிடுகிறாள். நெடிய இல்லற வாழ்வு கணவரையும் பக்குவப்படுத்தியிருந்ததை உணர்ந்து கொள்ள இதுவே வாய்ப்பாகிறது. நடையும் வாழ்க்கைத் தத்துவங்களும் வெகு யதார்த்தம்.

- ஹரி விஜயலட்சுமி

" கல்யாணி ! கல்யாணி ! எனக்குப் பசிக்குது, முதல்ல சாப்பாடு போடு. ஆமா ! இன்னிக்கு என்ன மெனு?" என்று ஆர்வமுடன் கேட்ட கணவரைப் பார்த்து, "இதோ, வரேங்க. இன்னிக்கு உங்களுக்கு பிடிச்ச வெங்காய சாம்பார், வாழைக்காய் வறுவல்தான். அப்படியே ராமுவையும் கூப்பிடுங்க. அவனும் உங்களோடு சாப்பிடட்டும். எல்லாம் சூடா இருக்கு" என்று பரபரப்பாக அறிவித்தாள். கணவரும் மகனும் சாப்பிட ஆரம்பித்தவுடன் அவள் கவனம் முழுக்க அவர்களின் தட்டில்தான் இருந்தது. அதனால் அவர்களின் உரையாடல்கூட அவள் காதுகளில் விழவில்லை. அப்படி ஒரு உண்மையான அக்கறையுடனும் ஆவலுடனும் பரிமாறினாள் கல்யாணி. "அம்மா ! எனக்கு நாளைக்குக் கொழுக்கட்டை செஞ்சிடும்மா" என்று விண்ணப்பித்த மகனிடம் "சரிடா? கண்ணா" என்று ஆசையாகத் தட்டிக் கொடுத்தாள்.

கல்யாணிக்கு ஐம்பது வயது இருக்கும். திருமணமான நாள் முதல் இன்று வரை அவள் "கல்யாணி"யாக வாழ்ந்ததைவிட திரு. மாணிக்கம் அவர்களின் மனைவியாகவும், மகன் ராமுவின் தாயாகவும் மட்டும் வாழ்ந்து இருக்கிறாள். அப்படித்தான் அவள் இன்றும் வாழ்கிறாள். அவள் கடமைகளில் இருந்து அவள் ஒரு நாளும் தவறியதில்லை. கணவனின் தேவைகளையும் மகனின் தேவைகளையும் நிறைவேற்றுவதுதான் அவள் வாழ்க்கையே. "அம்மா ! நான் காலேஜுக்கு போயிட்டு வரேன்" என்ற மகனின் குரலுக்கு "சரிப்பா ! பார்த்துப் போயிட்டு வா" என்று ஆமோதித்து, காலையில் இருந்து பம்பரமாகச் சுழன்று வேலை செய்ததால் ஏற்பட்ட சோர்வினால், டைனிங் டேபிளில் அமர்ந்தாள். மகள் வேண்டாம் என்று ஒதுக்கிய தோசையையும் கணவர் "போதும்" என்று ஒதுக்கிய இரண்டு

www.tamilarangam.net



இட்லிகளையும் தனியாக, அமர்ந்து சாப்பிட்டுவிட்டு எழுந்தாள். மீண்டும் மதிய உணவிற்கான அடுத்தக் கட்ட வேலைகளில் மூழ்கிப்போனாள் கல்யாணி.

அவள் கணவர் மாணிக்கம் அரசாங்க அலுவலகத்தில், ஒரு நல்ல பதவியில் அமர்ந்திருந்தார். கைநிறைய சம்பாதித்தார். இது போதாதா கல்யாணிக்கு என்று கேட்கிறீர்களா? போதும் என்று தோன்றினால், நீங்கள் ஒரு பெண் அல்ல. போதாது என்று தோன்றினால், நீங்கள் சராசரி இந்திய ஆண்களுக்கு மத்தியில் சிக்கித் தவிக்கும் ஒரு சராசரி இந்தியப் பெண்தான். ஒரு அற்புதமான மனைவியின் அருமையைப் புரிந்து கொள்வதற்கு ஒரு அற்புதமான கணவராக இருக்க வேண்டும். கல்யாணி ஒரு அற்புதமான மனைவி. ஆனால் மாணிக்கம் ஒரு அற்புதமான கணவர் அல்ல !

அன்று மாலை கல்யாணி தொலைக்காட்சியில் சமையல் நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் பார்வைதான் தொலைக்காட்சியில் இருந்ததே தவிர, அவள் மனம் இரவு கணவருக்கும் மகனுக்கும் என்ன டிப்பன் தயாரிக்கலாம் என்ற யோசனையில் ஆழ்ந்திருந்தது. "கல்யாணி" என்ற குரலைக் கேட்டு வாசற்பக்கம் திரும்பிப் பார்த்தாள். அவள் கணவர் வேகமாக உள்ளே நுழைந்து சோபாவில் அமர்ந்து, விருட்டென்று, தொலைக்காட்சியில் ஓடிக்கொண்டிருந்த சமையல் நிகழ்ச்சியை, 'டக்' கென்று மாற்றினார். "என்னங்க ! முடியப்போகுது, அதுக்குள்ள மாத்திட்டீங்க" என்று அங்கலாய்த்தாள். மாணிக்கம் "இருக்கட்டும், இருக்கட்டும், எனக்கு தலை வலிக்குது, போய் ஒரு காபி கொண்டு வா" என்று கால்களை நீட்டி சாய்ந்து கொண்டார். கல்யாணி பதில் ஏதும் பேசாமல் சமையல் அறைக்குள் சென்றுவிட்டாள். இது அன்றாடம் அவர்கள் வீட்டில் நடக்கும் ஒரு செயல்தான். கணவனோ மகனோ வீட்டில் இருந்தால், அவளுக்குப் பிடித்த நிகழ்ச்சியைப் பார்த்ததாகச் சரித்திரமே இல்லை. இப்படித்தான் மகனும் பரபரப்பாக வருவான். கல்யாணி ஏதாவது பழைய படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தால் ரிமோட்டைப் பிடுங்கி, "என்ன மம்மி ! இதையெல்லாம் பார்த்துட்டு" என்று சலித்துக்கொண்டே ஏதாவது ஆங்கிலச் சானலுக்கு மாற்றிவிடுவான். இனி இங்கே அமர்ந்து என்ன செய்வது எனக் கல்யாணி எழுந்து அடுத்த அறைக்கு சென்றுவிடுவாள். எப்பொழுதும் ஒரு குடும்பத்தில் ஒரு கணவர் மனைவியை மதித்தால்தான், பிள்ளைகளும் மதிப்பார்கள். மாறாக, கணவர் தன் மனைவியை மரியாதைக் குறைவாக நடத்தினால், குந்தைகளும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விரைவிலேயே அதைப் பின்பற்றுவார்கள். சிறு பிராயத்தில் இருந்தே, தந்தையின் பேச்சும் செயல்களும் குழந்தைகளின் மனநிலை மீது ஒரு பெரிய பாதிப்பை உண்டாக்கும். இதோ, தன் தந்தை, மனைவி தனக்கு பிடித்த நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது, அதைத் தடுக்கும் வண்ணம், ரிமோட்டை மிக உரிமையாக பிடுங்கி மாற்றிவிடுவதை இவன் பலமுறை கண்கூடாகப் பார்த்திருக்கிறாள். அதையே மகனும் பின்பற்றுகிறான் போலும் !

சரி ! வீட்டுக்குள் தொலைக்காட்சி முன் அமர்ந்தால் இந்தப் பிரச்சனை என்றால், வெளியே போனாலும் இதே போன்ற பிரச்சனைதான். திடீரென்று ஒரு உற்சாகம் எழும்பி, அவள் கணவர் தியேட்டரில் போய் சினிமா பார்க்க வேண்டும் என்று விருப்பப்பட்டால், அவரது அபிமான நடிகரின் படத்துக்குத்தான் அழைத்துக்கொண்டு போவார், "உனக்கு என்ன படம் பிடிக்கும்?" என்று இந்த இருபத்தைந்து வருடங்களில் ஒருமுறை கூட அவளைக் கேட்டதில்லை. கல்யாணிக்குப் பாலசந்தர் படமென்றால் ஒரு ஆர்வம். ஆனால் அவளின் ஆசை நிறைவேறாது. சில சமயங்களில் சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்றுவதில்தான், பெரிய பெரிய சந்தோஷத்தை அடையலாம். தனக்குப் பிடித்த நிறம், தனக்குப் பிடித்த புடவை, தனக்குப் பிடித்த மலர், தனக்குப் பிடித்த நிகழ்ச்சி என்று பட்டியலை நீட்டிக்கொண்டே போகலாம். ஆனால் கல்யாணிக்கு இதுபோன்ற சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்றுவதில்கூட தடை இருந்தது. "இதென்ன கலர் ! இதென்ன புடவை" என்று சமயத்தில் சலித்துக் கொள்வார். இவ்வளவு ஏன்? ஹோட்டலுக்குப் போனால் கூட, அங்கும் தன் ஆதிக்கத்தைத் தொடர்ந்து நடத்துவார். அவருக்கு மசால் தோசை என்றால் பிடிக்கும். சரி! சாப்பிட்டுக் கொண்டு போகட்டும். யார் வேண்டாம் என்றது. அதில் பிரச்சனை ஒன்றும் இல்லைதான். ஆனால் தன் மனைவிக்கும் சேர்த்து, சர்வர் வந்து அருகில் நின்றதும் "ரெண்டு மசால் தோசை" என்று அறிவித்துவிடுவார். "நீ என்ன சாப்பிடற? உனக்கு என்ன வேண்டும்" என்ற கேள்விக்கு இடமே இல்லை. இருபத்தைந்து வருடங்களாக கணவருக்குப் பிடித்த உணவை மட்டுமே சமைத்துப் பரிமாறுகிற ஒரு மனைவிக்கு 'என்ன உணவு பிடிக்கும்?' என்று எத்தனை கணவன்மார்களுக்குத் தெரியும்? கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு ஒரு நிமிடம்கூட ஆகாதுதான்.

ஆயிரக்கணக்கான மைல்களுக்குப் அப்பால் உள்ள நாடுகளில் என்ன நடக்கிறது என்று தெரிந்து கொள்வதில் உள்ள ஆர்வம், அருகில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருக்கும் மனைவியைப் பற்றித் தெரிந்து கொள்வதில் இல்லை. ஏன்? அதைத் தெரிந்து கொள்வது தன் கடமைகளுள் ஒன்றாக அவர்கள் கருதுவதில்லை. திருமணமான புதிதில் அவள் தன் கணவனின் அலட்சியங்களைப் பொருட்படுத்தவில்லை. தன் கணவனுக்கு முக்கியத்துவம் கொடுப்பது தன் தலையாய கடமை என்று கருதினாள். கணவனின் மனம் நோகாமல் நடந்து கொள்வதில் மிகக் கவனமாகச் செயல்பட்டாள். அந்தக் கவனத்திற்கு முக்கியத்துவம் தந்தவள், வேறு பல விஷயங்களில் செலுத்த வேண்டிய கவனத்தைச் சிதற விட்டாள். தன் கணவனின் விருப்பங்கள் தன் முன் பூதாகரமாகத் தோன்றும் அதே சமயத்தில் தன்னுடைய தேவைகள், விருப்பங்கள் அனைத்தும் சிறிது சிறிதாக அவளை விட்டு விலகி, அப்படியே நாட்பட நாட்பட, கண்களுக்கே தெரியாத வண்ணம் மறைந்தே போய்விட்டன என்பதை அவள் சரியாக உணரவில்லை. தனக்குள் இருந்த தன் 'மனம்' அவளையும் அறியாமல் தற்கொலை செய்து கொண்டது என்பதை உணரும் பக்குவமும் முதிர்ச்சியும் அவளுக்கு இல்லை. "உனக்கு என்ன பிடிக்கும்?" என்ற கேள்விக்கே இடமில்லை. நாட்கள் நகர்ந்து, மாதங்கள் மறைந்து, வருடங்களும் விரைந்தோடி விட்டன.

மறுநாள். அவள் காலையில் கண்விழித்தவுடன், அவள் கண்முன்னே இருந்த தேதி, அவளுக்கு ஒரு சின்ன உற்சாகத்தை மூட்டியது. ஆம் ! அன்று அவர்கள் திருமண நாள். குளித்து முடித்தவள் கண்ணாடியின் முன் அமர்ந்தாள். அவள் முகத்தை உற்றுப் பார்த்தாள். தலையின் முன்பகுதியில் ஏகப்பட்ட நரைமுடி. கண்களைச் சுற்றிக் கருவளையம். அவள் முகத்தில் ஆங்காங்கே சுருக்கங்கள். அவளுக்கு அப்படி ஒன்றும் வயதாகிவிடவில்லை. அவள் சகவயதினர் பலர் இன்றும் முகப்பொலிவுடன் காணப்படுகிறார்கள். அவளின் இந்த தோற்றத்திற்குக் காரணம் அவளேதான். தன்னைக் கவனித்துக் கொள்வதில் தானே அலட்சியம் காட்டினால் பின், யார்தான் அக்கறைக் காட்டுவார்கள். மஹாபாரதத்தில் அர்ஜுனன் கண்களுக்குப் பறவை மட்டுமே தெரிந்ததுபோல, அவள் கண்களுக்கு அவள் கணவனும் குடும்பமும் மட்டும் தெரிந்தார்கள். அவள் மனமோ, ஆசையோ, தோற்றமோ, அவள் கண்களுக்கே தென்படவில்லை. என்னதான் திருமண நாள் என்ற மகிழ்ச்சி ஒருபுறம் இருந்தாலும், திருமணமாகி இருபத்தைந்து வருடங்கள் ஓடிவிட்டதே என்ற சோர்வு அவள் மனதை வாட்டியது. என்றும் இல்லாமல் இன்று அவள் முகத்தில் ஒரு முதிர்ச்சி காணப்பட்டதை அறிந்தாள். அந்த முதிர்ச்சி அவள் வெளித்தோற்றத்தைவிட அவள் உள்மனதை பற்றியதாகும்.

www.tamilarangam.net



தினமும் இன்று என்ன செய்யலாம், நாளை என்ன செய்யலாம் என்று சிந்தித்தே பழக்கப்பட்ட அவள் மனது அன்று, நேற்று என்ற கடந்த காலத்தில் என்ன செய்தோம் என்று ஒரு கேள்வியை எழுப்பியது. அவளுக்கு ஒரு கசப்பான உண்மை வெளிப்பட்டது. அவள் இத்தனை நாட்கள் திரு. மாணிக்கத்தின் மனைவியாக வாழ்ந்திருக்கிறாள். அவள் தாய் தந்தை பெயரிட்டு ஆசையாக வளர்த்த 'கல்யாணி'யாக அவள் வாழவேயில்லை. அவள் எதையோ தொலைத்துவிட்டதாகக் கருதினாள். அதை இங்கேதான் தொலைத்தாள் என்பதும் அவள் நன்கு அறிவாள். அது தொலைந்து போனதற்குத் தான் ஒருவிதத்தில் காரணமானவள்தான் என்பதை அவள் மனம் ஒருபுறம் உறுத்தியது.

அவள் எண்ணங்களைக் கலைக்கும் விதமாக வேலைக்காரி வள்ளி அறைக்குள் நுழைந்து, "ஏம்மா ! இன்னிக்கு உங்க கல்யாண நாள்தானே! போன வாரம் நீங்க சொன்னது எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு. நீங்க நல்லா இருக்கணும். அம்மா ! இன்னிக்கு கோயிலுக்கு போயிட்டு வாங்க, நான் வீட்டைப் பாத்துக்கறேன்" என்று முகம் மலர பேசியது அவள் மனதுக்கும் செவிகளுக்கும் இதமாக இருந்தது. அந்த வீட்டில் அவள் ஒருத்திதான் வாய் நிறைய அவளிடம் பேசுவாள். அவளுடைய சின்ன முகவாட்டத்தைக்கூட அவள் அறிந்து அனுசரணையாக விசாரிப்பாள். இருபத்தைந்து ஆண்டுகள் ஒன்றாக வாழ்ந்த கணவர் கண்டு பிடிக்க முடியாத முகமாற்றத்தையும் சோர்வையும் இருபத்தைந்தே மாதங்களுக்கு முன் அறிமுகமான வேலைக்காரி, நொடிப்பொழுதில் இனங்கண்டு விடுவாள். ஆக, அன்பு என்பது இரத்த சம்பந்தத்தினாலோ உறவு முறையினாலோ பழக்கத்தினாலோ கட்டாயம் உதிக்க வேண்டும் என்பதில்லை. இது ஒரு நல்ல மனதில் இருந்து சுரக்கும் ஒரு உணர்வு. இது சொல்லிக் கொடுத்தால் வருவதுமில்லை. சொல்லிக் கொடுக்காதால் வராமல் இருப்பதும் இல்லை.

அன்று கல்யாணிக்கு ஏனோ கணவனைக் "கோயிலுக்குப் போகலாம்" என்று அழைக்க மனம் வரவில்லை. ஆனால் கோயிலுக்குப் போக வேண்டும் என்று ஆசையாகவும் இருந்தது. வள்ளியை உடன் அழைத்துக்கொண்டு அருகில் இருந்த கோயிலுக்குச் சென்றாள். சுவாமி தரிசனம் முடிந்து இருவரும் மண்டபத்தில் அமர்ந்தார்கள். அங்கு சற்று தூரத்தில் ஒரு குடும்பம் மரத்தடியில் அமர்ந்து இருந்தது. கணவன், மனைவி, குழந்தை, இரு முதியவர்கள் என்று ஒரு நிறைந்த குடும்பமாக காட்சியளித்தது. அவர்களின் ஆடைகளும் பேச்சும் அவர்கள் சற்று வசதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குறைந்தவர்கள் என்று எடுத்துக்காட்டியது. கல்யாணி அவர்களைத் தொடர்ந்து கவனித்து வந்தாள். அந்தக் குழந்தைக்கு ஒரு வயது இருக்கும் எனத் தோன்றியது. கறுப்பாக இருந்தாலும் துறுதுறுப்பாக இருந்ததால், பலரின் கவனத்தைக் கவர்ந்தது. குழந்தை அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தது. அதன் பெற்றோர் அதை இழுத்துப் பிடிப்பதிலும் தூக்குவதிலும் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். அதன் செயலைத் தடுத்தார்களே தவிர, குழந்தை எதை நாடுகிறது என்பதை அவர்கள் அறிய முற்படவில்லை. ஆனால் எங்கோ அமர்ந்திருந்த கல்யாணிக்குக் குழந்தைக்கு என்ன வேண்டும் என்று புரிந்தது. குழந்தை மரத்தில் பூத்துக் குலுங்கிய மலர்களைத் தான் நாடியது. குழந்தையின் பிடிவாதம் சற்று நேரத்தில் அழுகையாக மாறியது. அதன் பெற்றோர் கூடையில் இருந்து வேறு பல பொருட்களைக் கொடுத்தும், குழந்தை அதைத் தொடக்கூட மறுத்தது. மாறாக, மரத்தின் மேலே தன் பிஞ்சுக் கைகளைக் காட்டியது. அதன் செய்கையிலிருந்து குழந்தை மலரைத்தான் நாடுகிறது என்பதை இப்போது அறிந்த பெற்றோர், தரையில் கிடந்த மலர்களை அதன் கைகளில் திணித்தனர். குழந்தையோ மீண்டும் வீறிட்டு அழுதது. ஆம் ! அக் குழந்தைக்கு மரத்தில் பூத்துக் குலுங்கும் மலர்தான் வேண்டுமே தவிர, கீழே சிதறிக்கிடக்கும் மலர்கள் அல்ல என்பதைத் தெள்ளத் தெளிவாக விளக்கிய செயல் கல்யாணியை வெகுவாகக் கவர்ந்தது. ஒரு வழியாக, குழந்தையின் தந்தையும் மரத்தின் கிளைகளைச் சாய்த்து மலர்களைப் பறித்து அக் குழந்தைக்குக் கொடுத்தார். பின்புதான் குழந்தை அழுகையை நிறுத்தியது. கல்யாணி, இந்த வயதிலும் அந்தக் குழந்தையிடமிருந்து ஏதோ ஒரு பாடம் கற்றுக் கொண்டவளாக வீடு திரும்பினாள்.

அன்று இரவு உணவுக்குப்பின், கல்யாணியை அழைத்த அவள் கணவர், "உன்கிட்ட ஒரு முக்கியமான விஷயம் சொல்லணும். நான் ஒரு முடிவு செஞ்சிருக்கேன். பையன் அமெரிக்காவில் மேல் படிப்பை முடிக்கப் போகிறான். அவனுக்கு அங்கு நிச்சயம் வேலை கிடைத்துவிடும். அதனால் இந்த வீட்டை விற்க ஏற்பாடு செய்துள்ளேன். நாம் சீக்கிரமே அங்கேயே போய்த் தங்கிவிடலாம் என்று முடிவு செய்திருக்கிறேன். அன்று தீர்மானமாகப் பேசினார். அந்தப் பேச்சில் ஒரு ஆலோசனை இல்லை. ஒரு கேள்வி இல்லை. அது ஒரு அறிக்கையாகத்தான் இருந்தது. கல்யாணிக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவள் அசையாத பதுமையாக அமர்ந்திருந்தாள். அவள் மனம் அலைமோதியது "இது என்ன முடிவு ! திடீரென்று வெளிநாடு செல்ல வேண்டும். அங்கேயே தங்கிவிட வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக இந்த அருமையான வீட்டை விற்க வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவளுக்கு அதில் துளிகூட விருப்பமில்லை. எவ்வளவு பெரிய முடிவு. எவ்வளவு சாதாரணமாக அறிவிக்கிறார். தான் ஒரு ஜீவன் அந்த வீட்டில் இருப்பதே அவருக்குத் தெரியவில்லையா? ஒரு சின்ன அபிப்ராயம்கூடக் கேட்க வேண்டும் என்று தோன்றவில்லையே? அவர் என்ன சொன்னாலும், அவளின் மௌனத்தை சம்மதமாகப் பெற்று பழகிவிட்ட அவருக்கு கேட்க வேண்டும் என்று ஏன் தோன்ற வேண்டும்? ஆரம்பத்தில் இருந்தே அவர் விருப்பம்தான் இவள் விருப்பம், அவர் முடிவு தான் இவள் முடிவு, ஏன் அவருக்குப் பிடித்த உணவுகூட இவளுக்குப் பிடிக்க வேண்டும் என்ற வட்டத்துக்குள்ளேயே வாழ்ந்துவிட்டாள். இரும்பு வேலிகளாய் தனக்குத்தானே ஒரு சிறையை அமைத்துவிட்டாள். இன்று, அதில் இருந்து வெளிவர முடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறாள். அந்த இரும்பு வேலிகளை தகர்த்தெறியும் மனோபலமும் உடல் பலமும் இந்த வயதில் கண்டிப்பாக அவளுக்கு இல்லை. கோயிலில் அவள் பார்த்த குழந்தை அவளுக்கு நினைவு வந்தது. வாய் பேசமுடியாத ஒரு சின்னஞ்சிறு குழந்தைகூட தனக்கு எது வேண்டுமோ, அது எதை விரும்பியதோ, அதைப் பெறும் ஒரு திறமை பெற்றிருந்தது. ஆனால் சகல பகுத்தறிவும் நிறைந்து முதிர்ந்த இவளுக்குத் தன் விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்ளத் தெரியவில்லை. தன் வாழ்க்கையைத் தானே வழி நடத்தத் தெரியவில்லை. அவள் வாழ்க்கை அவளுக்கு மட்டுமே சொந்தமானது. அவள் மனமும் அவளுக்கு மட்டுமே சொந்தமானது. அவள் தவறாகச் சிந்தித்தாலும்கூட அவளுக்காக, அவள்தானே சிந்திக்க வேண்டும்; முடிவெடுக்க வேண்டும். தனக்குப் பிடித்ததெல்லாம் தன் மனைவிக்கும் பிடிக்க வேண்டும் என்பது அநேக ஆண்களின் மனோபாவம். அன்பினால் அனுசரணையாக இருக்கலாமே தவிர அடிமையாக அல்ல. ஆனால் கல்யாணியோ, அன்பு, அனுசரணை என்ற எல்லைகளை எல்லாம் தாண்டி அடிமை என்ற வட்டத்துக்குள் விழுந்துவிட்டாள்.

கல்யாணியினால் கண்டிப்பாக அவள் கணவனின் முடிவை ஏற்றுக் கொள்ள முடியாது. இது அவள் அபிப்ராயம் அல்ல. முடிவு. பெண்களுக்கு, எப்பொழுதும், மனதிற்குள் ஒரு முடிவு எடுப்பது சுலபமான காரியம். ஆனால், வெளிப்படுத்துவதோடு நில்லாமல், அந்த முடிவிலேயே உறுதியாக நின்று வெற்றியும் அடைவதுதானே கடினமானது. இதுவரை கல்யாணி சுலபமான காரியத்தைதான் செய்து முடித்திருக்கிறாள். இனி, அந்த கடினமான காரியத்தையும் செய்து முடித்தால்தானே அவளுக்கு முழு வெற்றி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அன்று இரவு அவளுக்கு உறக்கம் கொள்ளவில்லை. மறுநாள் விடிந்ததும் கணவரிடம் "அவளுடைய முடிவை ஏற்க வேண்டியது" என்று தீர்மானமாகச் சொல்லிவிட வேண்டும். அந்த முடிவு எடுத்தவுடன் அவளுக்கு ஒரு அச்ச உணர்வு தோன்றியது. இத்தனை காலம் அவர் பாதையிலேயே போய்விட்டு, இனிமேல், இந்த வயதில் அந்தப் பாதையை விட்டு விலகுவதா? விலகுவதோடுமட்டுமில்லாமல் புதிதாக ஒரு பாதையைத் தனக்கென்று உருவாக்குவதா? சே ! வேண்டாம். இனி நமக்கு என்ன இருக்கிறது வாழ்க்கையில்? நமக்கும் வயதாகிவிட்டது, நமக்கென்று தனியாக ஆசாபாசம் எதற்கு? அவர் விருப்பம்போலவே இருந்துவிடலாமா – என்றெல்லாம் மனதின் ஒரு பகுதி அவளைத் தடுத்துக்கொண்டே இருந்தது.

இப்படிப் பலதரப்பட்ட சிந்தனைகள் அவள் மனதில் ஒரு போராட்டத்தையே நடத்திக் கொண்டிருந்தன. அந்தப் போராட்டம் அவளை, மறுநாள் தன் அன்றாட வேலைகளில் ஈடுபடக்கூட விடவில்லை. அந்தப் போராட்டத்திற்கு முடிவு கட்டும் விதத்தில், கல்யாணி, வரவேற்பறையில் அமர்ந்து இருந்த கணவனிடம் சென்று, அருகில் நின்றவள், ஒரு நொடி தயங்கினாள். பின்னர், தன் மனப்போராட்டத்திற்கு முடிவுகட்ட வேண்டும் என்று, "நான் ஒரு முடிவு எடுத்திருக்கிறேன். எனக்கு இந்த வீட்டை விட்டுவர பிடிக்கலே. நான் இங்கதான் இருக்க ஆசைப்படுறேன். எனக்கு இதுலதான் சந்தோஷம் இருக்கு" என்று தன் வாழ்நாளில் முதன்முதலாகத் தன் கருத்துக்களை வெளியிட்டாள். அவர் அதற்கு என்ன பதில் தருவார் என எதிர்பார்க்காமல், அவ்விடத்தைவிட்டு நகர்ந்தாள். அவர் கோபப்படுவாரோ என்றுகூட மனதிற்குள் அஞ்சினாள்.

மனைவியின் பேச்சைக் கேட்டவர் முதலில் ஆச்சரியப்பட்டார். தன் மனைவி வாழ்நாளில் முதன்முதலாக "நான், எனக்கு" என்று பேசியதை இப்போதுதான் கேட்கிறார். அந்த வார்த்தைகள் ஏனோ அவருக்கு கோபத்தை வரவழைக்கவில்லை. அந்தப் பேச்சில் தவறு இருப்பதாகவும் அவருக்குத் தோன்றவில்லை. அந்த வார்த்தைகளில் பணிவு இருந்ததே தவிர, பிடிவாதம் இல்லை. அது அவளுடைய வெளிப்படையான கருத்துத்தான் எனத் தோன்றியது. எப்பொழுதும் உடனே முடிவெடுப்பவர், அன்று சிந்திக்க வேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டார். அன்று முழுவதும் சிந்தனையில் ஆழ்ந்தவருக்கு பலவித எண்ணங்கள் தோன்றின.

கல்யாணிக்கோ, அவளின் பேச்சு ஒரு புது உற்சாகத்தை அளித்தது. அவளின் மாறுதல் அவளுக்கே சற்று ஆறுதலாக இருந்தது. அவள் கருத்தை வெளியிட்டதால்தான், அவருக்குச் சிந்திக்கும் வாய்ப்புக்

www.tamilarangam.net



கிடைத்தது. அவர் அதை ஏற்றுக் கொள்ளலாம்; ஏற்றுக் கொள்ளாமலும் இருக்கலாம். ஆனால் ஒரு கருத்தை வெளியிடும்போதுதான் அதை ஏற்றுக் கொள்ள ஒரு வாய்ப்புக் கிடைக்கும். இன்றுதான் கல்யாணி அதற்கு ஒரு வாய்ப்பு கொடுத்திருக்கிறார். இன்றுதான், அவரைச் சிந்திக்கச் செய்யவும் ஒரு வாய்ப்பு அளித்திருக்கிறாள். தன் கணவரிடம் அவள் தன் கருத்துகளை இதுவரை வெளியிட்டிருந்தால், அதன் எதிர்விளைவு எப்படி இருக்கும் என்று அறிந்திருப்பாள். அவளுக்கென்று ஒரு மனம் உள்ளதை அவள் உணர்ந்திருந்தால்தானே, அதை பிறருக்கு உணர்த்த முடியும்? கணவர் தன் கருத்தை ஏற்றுக் கொள்ள மாட்டார் என்றே அவள் உள்மனது அவளுக்கு உணர்த்தியது.

கல்யாணியின் கணவருக்கோ, சிந்தனை செய்வது புதிதல்ல. ஆனால் மனைவியின் வார்த்தைகளை மனதில் வைத்து, அதற்கு முக்கியத்துவம் அளித்து சிந்திப்பதுதான் புதுமையாகத் தோன்றியது. இளமையைவிட முதுமையில்தான் ஒரு ஆணிற்கு மனைவியின் துணை வேண்டும். கல்யாணி இல்லாமல் தான் மட்டும் வாழ்வது சாத்தியமில்லை என்பதை உணர்ந்தார். அவளை வற்புறுத்தி அழைத்துச் செல்வது கடினமான காரியம் அல்ல. ஆனால் அவளை வற்புறுத்தாமல் இருப்பது தான் கடினமான காரியம். இப்போது அவர் அந்த கடினமான காரியத்தைத்தான் செயல்படுத்த விரும்பினார்.

கல்யாணியின் வெற்றி அவருக்கு தோல்வியும் அல்ல. அவரின் வெற்றி கல்யாணிக்குத் தோல்வியும் அல்ல. வெற்றி, தோல்வி என்பது இருவருக்கும் கிடையாது. இங்கே கல்யாணியின் வெற்றி என்பது அவளின் கருத்துக்களை அவள் வெளியிட்டதுதான். கணவரின் பாதையில் அவரைப் பின் தொடர்வது நல்லதுதான். ஆனால் தனக்கென்று ஒரு பாதை உள்ளது என்பதை உணர்த்துவது அதைவிட நல்லது. இளமையில் ஒரு பாதையை வகுத்துக் கொள்வது சுலபம். ஆனால் முதுமையில் அதையே சாதிப்பது புதுமை ! புரட்சி ! இது கல்யாணிக்கு முடிவல்ல, ஆரம்பம்.

- சாதனா ராதாகிருஷ்ணன்

எண். 68, சின்ன சுப்பண்ணன் வீதி,
கே.கே. புதூர்,
கோவை – 641 038.

www.tamilarangam.net



# அவள், அவன், அது !

பெண்ணும் அல்லாமல் ஆணும் அல்லாமல் அலியாகப் பிறப்பது அக் குழந்தையின் குற்றமா? சமூகம் அவர்களை ஏன் ஒதுக்குகிறது? அவர்களும் மனிதர்கள்தானே? அவர்களுக்கும் மனம் உண்டே? அலிகள் அநாதைகளாகும் காரணத்தை இலேசாகத் தொட்டுக் காட்டுகின்றார் ஆசிரியர். விஸ்வம் போன்று எத்தனையோ பேர் மனதில் இரக்கமின்றி தம் குழந்தைகளையே வெளியேற்றும் கொடூரம் தாங்க இயலாதது.

- நா. அனந்த பரமேஸ்வரி

அலிகளாகப் பிறப்பது அவர்கள் விரும்பி ஏற்ற பிறப்பல்ல. அது இயற்கையின் வஞ்சனை. தந்தை ஆணும் பெண்ணுமற்ற குழந்தையைப் புறக்கணிக்கும் நெஞ்சு உரம் பெறலாம். தாய்ப் பாசம் தாங்குமா? கணவனை விடவும் அவளுக்கு குழந்தைதான் முக்கியம். சமுதாயம் இயற்கையால் ஊனமுற்ற இவர்களைக் கருணையோடும் அங்கீகாரத் தோடும் ஏற்க வேண்டும் என்பது கதாசிரியரின் ஆரோக்கியமான சமூகச் சிந்தனை.

- ஹரி விஜயலட்சுமி

இன்று மிக முக்கியமான முடிவு எடுக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறாள் சுதா.

எல்லோருக்கும் நடப்பது போன்றுதான் அவளுக்கும் திருமணம் நடந்தது. சராசரிக்கும் சற்று உயர்வாய்க் கணவன் அமைந்ததில் பூரித்துதான் போனாள் அவள்.

அவளைச் சுற்றிச் சுற்றி வந்தான் விஸ்வம். ஆனால் ரெங்கு பிறந்தபிறகு எல்லாம் தலைகீழாய் மாறிவிட்டது.

முதல் குழந்தை ஆணாய்ப் பிறந்ததில் விஸ்வத்திற்குக் கொள்ளைப் பெருமிதம். பட்டாளமாய் நண்பர்களை அழைத்துவந்து விருந்து வைத்தான். ரெங்குவை என்னேரமும் தோளில் சுமந்துத் திரிந்தான்.

ஆனால் ரெங்கு வளர வளர பிரச்சினையும் வளர்ந்தது. ரெங்குவின் நடவடிக்கைகளில் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பெண்மை வெளிப்படத் தொடங்கியது. ரெங்கு ஆணாகவும் இல்லாமல், பெண்ணாகவும் இல்லாமல் . . . .

இதை உணர்ந்ததும் சுதா மிகவும் உடைந்து போனாள்.

www.tamilarangam.net



ஆனால் ஆறுதலைக் கூறவேண்டிய விஸ்வம் வெறுப்பை உமிழ்ந்தான்.

தினம் தினம் யுத்தம் நடந்தது.
இன்றும் அப்படித்தான்.
சுதா என்ன முடிவு எடுத்திருக்கே. – விஸ்வம்.
எதைப்பற்றி?
ரெங்குவைப் பற்றி !
ரெங்குக்கு என்ன?

என்ன தெரியாத மாதிரி கேக்குற ! இனியும் என்னால பொறுக்க முடியாது. உடனடியா ஒரு முடிவு எடு. ரெங்குவ ஒரு அனாதை ஆசிரமத்துல விட்டுவிடுவோம். அவனுக்கு ஆகிற செலவ மாசாமாசம் நான் கொடுத்திடுறேன். பெத்த கடனுக்கு இதுதான் என்னால செய்ய முடியும்.

என்ன பேசறீங்க நீங்க? குத்துக் கல்லா நாம இருக்கும்போது ஏன் ரெங்குவ ஆசிரமத்துல விடணும்.

ரெங்குவ என் பிள்ளைன்னு என்னால வெளில சொல்லிக்க முடியல. புதுசா என்ன பார்க்கறவங்க, உங்களுக்கு என்ன குழந்தைன்னு கேட்டா ... நான் ஆணுன்னு சொல்றதா இல்ல பொண்ணுன்னு சொல்றதா? இந்த சமூகத்துல எனக்குன்னு ஒரு தனி மரியாத, மதிப்பு இருக்கு. அது ரெங்குவால குறையறத நான் விரும்பல.

உங்க மதிப்பு குறையுங்குறதுக்காக ரெங்குவ ஆசிரமத்துலவிட நான் சம்மதிக்க மாட்டேன். இப்படியெல்லாம் நீங்க பேசுறத என்னால சகிச்சிக்க முடியல. நீங்க இப்போ முன்ன மாதிரியில்லே. சுத்தமா மாறிட்டீங்க. என்மேல அன்பா இருந்ததெல்லாம் வெறும் நடிப்பா?

இல்ல சுதா இல்ல. ஏன் என்ன புரிஞ்சுக்க மாட்டேங்குற? உன்மேல இப்பவும் நான் ப்ரியமாத்தான் இருக்கறேன். ஆனா ரெங்கு விஷயத்துல மட்டும் நான் சொல்றத கேளு. அது செய்த பாவத்துக்கு நாம ஏன் பழியாகணும் !

பாவத்தக் குழந்த மட்டும் செய்யலங்க. நாமளும்தான் செஞ்சிருக்கோம். அதான் நமக்குக் குழந்தையாப் பிறந்திருக்கு. அதப் புரிஞ்சுக்குங்க முதல்ல.

அதெல்லாம் புரிஞ்சுக்கிற நிலைமைல நான் இல்ல. ரெங்குவ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆசிரமத்துல சேர்க்கறதுக்கு நான் எல்லா ஏற்பாடும் செஞ்சிட்டேன். இதுக்கே நான் எவ்வளவு கஷ்டப்பட்டேன்னு எனக்குதான் தெரியும். இந்தா ஆசிரமத்து அட்ரஸ். நான் சாயங்காலம் வரும்போது ரெங்கு இங்க இருக்கக்கூடாது. அவ்வளவுதான்.

சுதா எவ்வளவு எடுத்துச் சொல்லியும் கேட்காமல் விஸ்வம் போயேவிட்டான்.

என்ன முடிவு எடுப்பது எனத் தெரியாமல் அவள் உள்ளம் துடித்தது.

இதெல்லாம் தெரியாமல் ரெங்கு பொம்மை வைத்து விளையாடிக் கொண்டிருந்தது.

கடவுளே ! எனக்கு ஏன் இந்த கதி?

சுதாவின் உள்ளம் குமறியது. சிறிது நேரத்தில் ஒரு முடிவுக்கு வந்தவளாய், கண்களைத் துடைத்துக் கொண்டு, ஒரு பேப்பரையும், பேனாவையும் எடுத்து ஏதோ எழுதத் தொடங்கினாள்.

விஸ்வத்திற்கு,

சுதா எழுதுவது. என்னைப்பற்றி முழுவதும் அறிந்தவர் நீங்கள்.

கல்யாணத்திற்கு முன் எவ்வளவோ சந்தோஷமாய் இருந்தேன். பாட்டு, டான்ஸ், ஹிந்தி, கம்பியூட்டர் என்று என்னென்ன உண்டோ அத்தனையும் நான் கற்றுக்கொள்ள என்னைத் தூண்டியவள் என் அம்மா. எல்லாத்துலேயேயும் ஆர்வத்தை ஏற்படுத்தியவள் என் அம்மா.

சில சமயங்களில், இதெல்லாம் கத்துக்கிட்டு என்ன செய்யப் போகிறோம்? ஏன் இவ்வளவு கஷ்டப்படணும் என்று நான் கேட்டாலும், இப்படி கஷ்டப்பட்டால் பின்னாடி நல்லா இருக்கலாம் என்று சொல்லி சொல்லி ஒவ்வொன்றையும் கற்றுக்கொள்ள வைத்தவள் அவள். இதனால்தான் என்னவோ, பள்ளியிலும் சரி, காலேஜிலும் சரி, சுதா என்றால் ஒரு மதிப்பும் மரியாதையும் இருந்தது. சிலர் என்னை நவரச நாயகி என்று கிண்டல் செய்ததும் உண்டு.

எந்த போட்டியானாலும் சரி தைரியமாய்க் கலந்து கொள்வேன். தோல்வி என்பதையே அறியாதவள் நான்.

எனக்குள் இத்தனை திறமைகள் இருந்தும், அதெல்லாம் வெளிக்காட்டிக் கொள்ளாமல் உங்களுக்கு நல்ல மனைவியாய் இதுநாள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வரை இருந்துதான் வருகிறேன். இது, நான் உங்களுக்கு கொடுத்த மரியாதை.

ஆனால் நீங்கள்?

என்னைப் பற்றி முழுதும் தெரிந்தும், எனக்குள்ளிருக்கும் திறமையை வெளிப்படுத்தவோ, அதை வளர்த்துக் கொள்ளவோ ஒரு வாய்ப்புக்கூட கொடுக்காதவர் நீங்கள்.

வீட்டையும் பார்த்துக்கிட்டு, அவசர அவசரமா ஆபீசுக்கும் நீ போறதப் பார்த்தா எனக்கு கஷ்டமா இருக்குன்னு சொன்னப்போ, என் மேல எவ்ளோ அக்கறைன்னு கர்வப்பட்டு வேலய விட்டேன். ஆனா அதுவும் ஒரு சுயநலம்தான்னு இப்போதுதான் புரியுது.

இப்படியெல்லாம் இதுவரை நினைத்ததில்லை. ஆனால் இந்த நிமிடம் நினைக்க வைத்துவிட்டீர்கள்.

உங்களைப் போன்றவர்களுக்கு மனைவியும் குழந்தையும் சமூக அந்தஸ்தை, மதிப்பை கொடுப்பவர்களாய் இருக்க வேண்டும். அப்படி இல்லையெனில் தூக்கி எறிந்துவிடுவீர்கள்.

நாளைக்கு எனக்கு ஏதாவது என்றால்கூட என்னையும் தூக்கியெறியத் தயங்கமாட்டீர்கள்.

இதுவரை உங்கள் வீட்டில் ஒரு ஷோக்கேஸ் பொம்மையாய் இருந்திருக்கிறேன் என்பதை இப்போதுதான் உணருகிறேன்.

இதற்கு முன் சராசரி கணவனைவிட உயரத்தில் உங்களை வைத்து பூரித்துக் கொண்டிருந்தேன். ஆனாலும் ரெங்கு விஷயத்தில் உங்கள் சாயம் வெளுத்துவிட்டது. இப்போது சராசரியிலிருந்துகூட மிகவும் கீழே போய்விட்டீர்கள்.

எனக்கு, என் எண்ணங்களுக்கு, என் வார்த்தைகளுக்கு மதிப்பளிக்காத, மரியாதையளிக்காத ஒருவருக்காக என் திறமைகளைச் சாகடித்துவிட்டேன் என்று நினைக்கும்போது மிகவும் வருத்தப்படுகிறேன்.

இனியும் உங்களுடன் இணைந்துவாழ என்னால் முடியாது. எனவே உங்களை விட்டுப் பிரிகிறேன். இன்று நான் தோற்றுவிட்டதாக தோன்றலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாழ்க்கைச் சுழற்சியில் நிச்சயம், மறுபடியும் நான் உங்களைச் சந்திப்பேன், உங்களின் மனைவியாக அல்ல, ரெங்குவின் அப்பாவாக !

இப்படிக்கு,
சுதா.

இப்போது சுதாவும், ரெங்குவும் எங்கே, எப்படி இருக்கிறார்கள் எனத் தெரியவில்லை. ஆனால் இன்னேரம் நிச்சயம் அவள் வெற்றிமாலை சூடியிருப்பாள் என்று மட்டும் நம்மால் யூகிக்க முடிகிறது.

* * *

*பெரும்பாலும், பல குடும்பங்களில் எந்தவொரு பிரச்சனைக்கும் 'முடிவு' எடுப்பது ஓர் ஆண்தான். அந்த முடிவுக்குப் பின்னால் ஒரு பெண்ணின் மன உணர்வுகள், எண்ணங்கள், சிந்தனைகள், திறமைகள் சிதைக்கப்பட்டாலும் அதைப் பற்றி அந்த ஆணுக்கு அக்கறையில்லை. இப்படிப்பட்ட ஓர் ஆணின் சுயநலச் சூழலில் சிக்கி மாண்டு விடாமல் மீண்டு வந்த ஒரு பெண்ணின் கதை தான் "அவள், அவன், அது!"*

*பெண் இன்று எல்லா துறைகளிலும் மிகச் சிறப்பாக முன்னேறிக் கொண்டிருக்கிறாள் என்று பெருமிதம் கொள்ளும் அதே வேளையில், இன்றும்கூட ஒரு சில ஆண்களின் ஆணவப் பிடியில் சிக்கிப் பல பெண்கள் அவமானப்படுவதையும் வேதனையில் வெம்பி மனதில் புழுங்குவதையும் காணும் போது நமக்குள் பொங்கி வரும் இன்பம் அடங்கிவிடுகிறது.*

*அந்த ஆணவம் நிறைந்த ஆண் கணவனாக மட்டுமல்ல, தந்தையாக, அண்ணனாக, தம்பியாக, ஏன் சக ஊழியனாகக்கூட இருக்கலாம். இப்படிப்பட்ட ஆண்கள், பெண்ணைத் தனக்காகப் படைக்கப்பட்ட ஓர் உயிர் என்று நினைக்கிறார்களே தவிர, அவளுக்குள்ளும் இருக்கும் உணர்வுகளைப் புரிந்து கொள்ள முயற்சி செய்வதில்லை. இவர்கள் பெண்ணின் மன உணர்வுகளைக் கொல்லும் குற்றவாளிகள். இவர்களுக்குத் தண்டனை தருவது யார்?*

- இரா. கயல்விழி

22, அண்டோரா தெரு,
மன்னார்குடி – 614 001.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அம்மாவோடு

குழந்தையோடு குழந்தையாய் . . . அதன் பார்வையில் அதன் எண்ணங்களை வடித்திருக்கிறார் ஆசிரியர். குழந்தையின் பிரபஞ்சமாக இருக்கிற தாயிடம் அதற்குள்ள எவ்வளவோ எதிர்பார்ப்புகள் ... ஏக்கங்கள் ... அதற்குரிய முதன்மைகள் . . . தான் விரும்பிய வெள்ளைக் காரை வாங்கித் தராத அம்மாவிற்குத் தன் வருத்தத்தை எப்படி எல்லாம் உணர்த்தலாம்? ஐஸ்கிரீம் சாப்பிட மறுக்கலாம் - குழந்தை உளவியலின் அழகிய வெளிப்பாடு.

- ஹரி விஜயலட்சுமி

ப்ரெட் எனக்குப் பிடிக்கவே பிடிக்காதுதான். ஆனா அம்மா, "சீக்கிரம் சாப்பிடு, வெளில போலாம்"னு சொன்னதால அவசர அவசரமா ப்ரெட்டை முழுங்கிட்டு பாலையும் குடிச்சிட்டேன்.

அம்மாகூட வெளில போறதுன்னாலே எனக்கு ரொம்ப ஜாலிதான். அம்மா என்னை அடிக்கடி வெளில கூட்டிட்டுப் போயிடுவாங்க. அம்மாவுக்கும் வெளில போறதுன்னா ரொம்பப் புடிக்கும்னு நெனக்கறேன்.

அம்மா வெளில போலான்னு சொன்னாலும் கதை சொல்றேன்னு சொன்னாலும் நான் சீக்கிரம் சீக்கிரமா சாப்பிடுவேன். வெளில நடந்து போகும்போதேகூட சில நாள் அம்மா கதை சொல்வாங்க.

"இன்னைக்கு எங்கேம்மா போப்போறோம்?"னு ரெண்டு மூணு முறை அம்மாவை கேட்டுட்டேன். அம்மா "கிளம்பேன் சொல்றேன்" அப்படின்னு சொல்லிட்டாங்க.

அம்மா அழகா ஒரு புடவை கட்டிக்கிட்டு எனக்கும் ட்ரெஸ் மாத்தி விட்டாங்க. நான் அவசர அவசரம்மா சட்டையை இழுத்து விட்டுக்கிட்டு தலையைக் கூட சரியா வாரிக்காம ஷு போட்டுக்க ஓடினேன்.

"பஸ்லயாம்மா போகப்போறோம்?"னு கேட்டேன்.

"இல்லை"ன்னு சொல்லிட்டு அம்மா அழகாச் சிரிச்சாங்க.

பஸ்ல போறதே எனக்குப் பிடிக்காது. பஸ்ல போகும்போது அம்மாவோட சரியாவேப் பேச முடியாது. ஏதாவது கேட்டாக்கூட "கத்தாதடா. மெதுவா பேசுடா" அப்படின்னு சொல்வாங்க அம்மா. பஸ்ஸோட சத்தத்துல எப்படி மெதுவா பேச முடியும்?

www.tamilarangam.net



நடந்து போறதுதான் எனக்கு ரொம்பப் பிடிக்கும். அம்மா கையப் பிடிச்சிக்கிட்டுக் குதிச்சுக் குதிச்சு நடப்பேன். ரோட்ல ரொம்ப குதிச்சா அம்மாக்குக் கோபம் வரும். ஆனா நான் என்ன கேட்டாலும் அம்மா பதில் சொல்வாங்க.

ஏன் ரோட்ல ஸ்பீட் ப்ரேக் இருக்குன்னு கேட்டா சொல்வாங்க. தண்ணி லாரிலேர்ந்து இவ்ளோ தண்ணி கீழே கொட்டிக்கிட்டே போகுதேன்னு கேப்பேன். ரோட்ல நடுல நிக்கற போலீஸ்கிட்ட துப்பாக்கியே இல்லையே எப்படி திருடன பிடிப்பார்னு கேப்பேன். எல்லாத்துக்கும் அம்மா பதில் சொல்வாங்க.

எங்கேயாவது கோழியெல்லாம் பாத்தா நானும் அம்மாவும் கொஞ்ச நேரம் நின்று வேடிக்கை பார்ப்போம்.

ஒருநாள் அப்படிதான் ஒரு பெரிய பில்டிங் கட்டற எடத்துல நின்று வேடிக்கை பார்த்தோம். பெரிய புல்டோசர் மண்ண அள்ளி அள்ளி இன்னொரு பக்கம் கொட்டறத ரொம்ப நேரம் பாத்துக்கிட்டே இருந்தோம். எவ்ளோ பலம் அந்த புல்டோசருக்கு ! அப்புறம் டைமாயிடுச்சுன்னு வேறெங்கயும் போகாம வீட்டுக்குத் திரும்ப வந்துட்டோம்.

ரொம்பக் கூட்டமில்லாத தெருல நடக்கும்போது அம்மா "கைய விட்டுட்டு நடடா. தனியா நடக்கப் பழகிக்கணும்" அப்படின்னு சொல்வாங்க. எனக்கொண்ணும் கைய விட்டுட்டு நடக்கறதுக்குப் பயமில்லை. மெயின் ரோடுல கூடத்தான் நடக்கத் தெரியும் எனக்கு. ஆனா அம்மா கையப் பிடிச்சிக்கிட்டே நடந்தாத்தான் ஜாலியா இருக்கும்.

இன்னைக்கு நானும் அம்மாவும் ரொம்ப தூரம் நடந்தோம். நிறைய கடையெல்லாம் வேடிக்கை பாத்துக்கிட்டே வந்தோம். பொம்மைக் கடையெல்லாம் கூட இருந்தது. ஆனா இன்னைக்கு அம்மா கட்டாயம் பொம்மை வாங்கித்தர மாட்டாங்க. ஏன்னா போனவாரம்தான் ஒரு ரோபோ பொம்மை வாங்கித் தந்தாங்க.

ஒரு ஐஸ்கிரீம் கடை, ஒரு ஹோட்டல் இதெல்லாம் தாண்டினப்பறம் அந்தப் பெரிய கடைகிட்ட வந்தவுடனே அம்மா நின்னாங்க.

அந்தக் கடைக்குப் பெரிய பெரிய படிக்கட்டு நிறைய இருந்தது. படியேறினா பெரிய கண்ணாடிக் கதவு இருக்கும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தக் கடைக்கு நான் முன்னாடியே ரெண்டு மூணு முறை அம்மாவோட வந்திருக்கேனே ! கண்ணாடிக் கதவுவழியா உள்ளே பாத்தேன். ஆங் . . . . அம்மா இந்தக் கடைல என்ன வாங்க வந்திருக்காங்கன்னு எனக்குத் தெரிஞ்சிடுச்சு.

Greetings

சித்திக்கு Birthday வந்தப்ப, விஜி ஆண்ட்டிக்கு Birthday வந்தப்பல்லாம் அம்மா என்னை இங்கே கூட்டிட்டு வந்திருக்காங்க.

ரொம்பப் பெரிய கடை இது. இங்க க்ரீட்டிங்ஸ் மட்டும் இல்ல. நிறைய புக்ஸ்கூட இருக்கும். ஸ்டோரி புக்ஸ் எல்லாம் இருக்கும். கேஸட், பொம்மைங்க எல்லாம் இருக்கும். அழகழகான படமெல்லாம் இருக்கும். பூப்போட்ட கண்ணாடி டம்ளர், கலர் கலரா பீங்கான்ல கப் அண்ட் சாஸர், மயில் மாதிரி, பூனை மாதிரி, முயல் மாதிரி ஜாடியெல்லாம் இருக்கும்.

இந்தக் கடைல எல்லாமே அழகழகா இருக்கும். ரொம்ப அழகா அடுக்கி வெச்சிருப்பாங்க.

ஆனா எனக்கு அந்தக் கடைக்குள்ள போகவேப் புடிக்கல. அம்மா கைய விட்டுட்டு மெதுவா படிக்கட்ல ஏறினேன்.

நாங்க கதவுகிட்ட போனவுடனே உள்ளே நின்னுக்கிட்டிருந்த போலீஸ்காரர் எங்களுக்காகக் கதவைத் திறந்து விட்டார். இந்த மாதிரி கேட் கிட்ட நிக்கறவங்க போலீஸ்காரங்க இல்லைன்னு என் ஃப்ரெண்ட் ராஜ்குமார் சொல்றான்.

உள்ளே போனவுடனே பயங்கர ஜில்லுனு இருந்தது. "ஏ.ஸி." அப்படின்னு அம்மா சொல்வாங்க. "எங்கம்மா ஏ.ஸி. போட்டிருக்காங்க. எனக்கு ஏ.ஸி.யைக் காட்டும்மா" ன்னு சொன்னா "பேசாம இருடா"ன்னு சொல்லிடுவாங்க அம்மா.

இந்தக் கடைக்குள்ள நுழைஞ்சவுடனே அம்மா நான் எது கேட்டாலும் சரியாவே பதில் சொல்ல மாட்டாங்க. அந்த Greeting Card எல்லாம் இருக்கற rack பக்கத்துல போய் நின்னுக்கிட்டு ஒவ்வொண்ணா எடுத்து படிச்சிட்டு இருப்பாங்க.

பர்த்டே வந்தா கேக்தானே வெட்டணும்! Greetings எதுக்கு வாங்கணும்? எனக்குப் புரியவேயில்லை.

www.tamilarangam.net



ஒருநாள் அம்மாகிட்ட கேட்டதுக்கு "வேற ஊர்ல இருக்கவுங்களுக்கு Happy Birthday நேர்ல சொல்ல முடியாதுல்ல? அதனால இதுல அனுப்பணும்" அப்படின்னாங்க.

பாட்டிகூட அம்மாவ திட்டுவாங்க. "நல்லா Greetings பைத்தியம் பிடிச்சிருக்குடி உங்களுக்கெல்லாம். மாத்தி மாத்தி greetings அனுப்பிக்கறதுதான் வேல. போதாதுக்கு வீட்டுக்குள்ளயே வேற greetings குடுத்துக்கறீங்க. இப்படிக் கொண்டு அட்டைல காசக் கரியாக்கறீங்களே!" அப்படின்னு நல்லா திட்டு விழும் அம்மாக்கு.

அம்மா க்ரீட்டிங்ஸ் வாங்கினா வாங்கிக்கட்டும். ஆனா க்ரீட்டிங்ஸ் பாக்க ஆரம்பிச்சிட்டா என்கிட்ட சரியாப் பேசமாட்டாங்க. அதுதான் எனக்குப் பிடிக்கவே பிடிக்காது.

காய்கறிக்கடை மளிகைக் கடைல எல்லாம், "இது என்ன? இது என்ன விலை? இது இவ்ளோ குடுன்னெல்லாம் எல்லாரும் கடைக்காரன்கிட்ட பேசிக்கிட்டேயிருப்பாங்க. ஒரே சத்தமாயிருக்கும் கடைல. ஆனா இங்க யாரும் யார்கிட்டயும் பேசறதில்ல. ஏதோ இங்லீஸ் பாட்டுமட்டும் மெதுவா பாடிக்கிட்டேயிருக்கும். கடைல மத்தபடி ஒரு சத்தமும் இருக்காது.

குறுக்கும் மறுக்குமா அலமாரியா வெச்சி, அங்கங்க யாராவது நிப்பாங்க. பணம் குடுக்கற எடத்துல கம்ப்யூட்டர் முன்னால ரெண்டு மூணு பேரு. அவங்க எல்லாருமே பொம்மைங்களா என்ன? யாருமே பேசறதில்லை; சிரிக்கறதுமில்ல.

வாங்க வர்றவங்களும் அப்படித்தான். பொம்மை மாதிரி அங்கங்க நின்னு books ஐ புரட்டறாங்க. பொம்மைங்கள எடுத்துத் திருப்பித் திருப்பிப் பாக்கறாங்க. அப்படியே பேசினாலும் ரொம்ப, ரொம்ப மெதுவா பேசறாங்க.

ஒருநாள் அப்படித்தான் அம்மா Greetings பாத்துக்கிட்டு இருந்தப்ப நான் இந்தப் பக்கமா நின்னுக்கிட்டு, தரையில சறுக்கி விளையாடிக்கிட்டிருந்தேன். தலை அவ்ளோ வழுவழுப்பா – கால லேசா தேச்சாலே போதும் சறுக்கிக்கிட்டே போற மாதிரியிருந்தது. வழுக்கி வழுக்கி விளையாடிக்கிட்டே அம்மாகிட்ட போனப்ப கொஞ்சம் வேகமா சறுக்கி தரையில விழுந்தேன். ஆனாலும் எனக்கு அது ஜாலியாத்தான் இருந்துச்சு. அதனால சத்தமா சிரிச்சிட்டேன். ரெண்டு மூணு பேர் திரும்பி வேற பார்த்துட்டாங்க.

www.tamilarangam.net



அப்ப அம்மா முகத்துல வந்த கோபம் இருக்கே! அய்யோ . . . ! நான் பயந்துபோய் சிரிக்கறத நிறுத்திட்டேன். ஆனாலும் அம்மா என்கிட்ட குனிஞ்சு, என் காதப் புடிச்சி தூக்கி, பல்லக் கடிச்சிக்கிட்டு, மெதுவா "கொஞ்ச நேரம் பேசாம இருக்கியா, இல்ல திருகட்டுமா காதை?" அப்படின்னு சொன்னப்ப ஒரே அழுகை அழுகையா வந்தது எனக்கு. பேசாம அம்மாகிட்டயே நின்னுட்டிருந்தேன் அன்னைக்கு.

அம்மாவைவிடக் கூட உயரமா ஒரு பொம்மை இருக்கு அந்தக் கடைல. இவ்ளோ பெரிய்ய teddy bear –ஐ நான் எந்தக் கடைலயுமே பாத்ததில்ல. அப்புறம் பஞ்சு மிட்டாய் கலர்ல நிஜம் மாதிரியே கறுப்பு கண்ணோட ஒரு நாய்க்குட்டி பொம்மை இருக்கு. இதையெல்லாம் பாத்துட்டு "அம்மா இங்க பாரேன்!" அப்படின்னு நான் அம்மாவைக் கூப்பிட்டா, உடனே கோவமா கிட்ட வருவாங்க அம்மா.

அப்புறம், "ப்ளீஸ்டா கொஞ்சநேரம் கத்தாதயேன். எதுவாயிருந்தாலும் வீட்ல வந்து சொல்லு" அப்படின்னு கெஞ்சறா மாதிரி ஆனா கோவமா சொல்லிட்டு மறுபடியும் க்ரீட்டிங்ஸ் பாக்க போயிடுவாங்க.

இந்த பொம்மையெல்லாம் இங்கதான இருக்கு? வீட்லவந்து எப்படி நான் அம்மாக்குக் காட்ட முடியும்?

ஏதாவது பொம்மையை வாங்கித் தரச்சொல்லிக் கேட்டாலும் "வேணாம். இதே பொம்மைய நான் உனக்கு வேற கடைல வாங்கித் தரேன். இங்க ரொம்ப விலை" அப்படின்னு சொல்லிடுவாங்க. அப்ப க்ரீட்டிங்ஸ் மட்டும் ரொம்ப விலையில்லையா?

யாருக்கு இப்ப பர்த்டே வருதுன்னு தெரியலை.

நானும் இன்னைக்கு அம்மாகூட நின்னு கொஞ்சநேரம் greetings card எல்லாம் பாத்துக்கிட்டிருந்தேன். அழகழகா பூப்போட்டது, பொம்மை போட்டது எல்லாம் இருந்தது. சில cards என்னோட டிராயிங் நோட் அளவுக்குப் பெருசா இருந்தது.

ஒரே போரடிச்சது எனக்கு. "அம்மா போலாம்மா"ன்னேன். அம்மா திரும்பிப் பாத்து முறைச்சாங்க.

அப்புறம் "அந்தப் பக்கம் பொம்மையெல்லாம் இருக்குப் போய் பார்த்துக்கிட்டிரு. இதோ வந்துடறேன்" அப்படின்னாங்க.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"அப்பன்னா எனக்கு ஒரு பொம்மை வாங்கித் தருவியா" அப்படின்னு கேட்டேன்.

அம்மா பதிலே சொல்லாம மாத்தி மாத்தி greetings card -ஐ பிரிச்சி படிச்சிக்கிட்டேயிருந்தாங்க. இதுதான் எனக்கு அம்மாகிட்ட புடிக்காதது.

நான் அந்தப் பக்கம் போனேன். நிறைய கார் பொம்மைங்க இருந்தது. எத்தனை வித விதமான காருங்க, ஜீப்புங்க. அய்யோ அந்த வெள்ளைக் கார் ரொம்ப அழகா இருக்கே ! எடுத்துப் பாக்கலாமான்னு அதுகிட்டபோய் கைய நீட்டினேன்.

திடீர்னு எங்கிருந்தோ ஒரு ஆள் என் பக்கத்துல வந்து நின்னார். நான் பயந்துபோய் அவரைப் பார்த்தேன். உதட்டுமேல விரல வெச்சு. ஷ்ஷ் ... "னு சொல்லிட்டுப் போயிட்டார்.

சரி போகும்போது இந்த வெள்ளக் கார மட்டும் வாங்கித் தரச் சொல்லணும். அம்மாக்கிட்ட ப்ளீஸ்மான்னு கேட்டா சில சமயம் வாங்கித் தந்துடுவாங்க.

சரின்னு புக்ஸ் இருந்த பக்கம் போனேன். எவ்ளோ கதைப் புத்தகங்கள். abcd புக்ஸ். மிருகங்கள், பறவைங்க புக்ஸ். கொஞ்சம் உயரத்துல இருந்த ஒரு புக்கோட அட்டைல கிருஷ்ணன் படம் மாதிரி தெரிஞ்சது. கைல புல்லாங்குழல் வெச்சிக்கிட்ருக்கற கிருஷ்ணன் படம் எனக்கு ரொம்பப் புடிக்கும். அதனால அந்தப் புக்க எட்டி எடுக்கப் பாத்தேன். அப்ப நான் தவறிப்போய் அந்த அலமாரி மேல விழுந்து, அதுவும் ஆடினதால கீழ விழுந்துட்டேன். அலமாரியிலருந்து நெறய books கீழ விழுந்துடுச்சி.

சத்தங்கேட்டு திரும்பிப் பார்த்துட்டு அம்மா என்கிட்ட ஓடி வந்தாங்க. ரொம்ப பயந்துட்டேன் நான். தரையிலருந்து எழுந்துக்கவே இல்லை. அம்மா என்னைக் கட்டாயம் அடிக்கப் போறாங்க. யாராவது பக்கத்துல நிக்கறாங்களான்னு புாத்தேன். நல்ல வேளை யாரும் இல்ல.

அம்மா வேகமா வந்து என் தோளைப் பிடிச்சி இழுத்துக் கோவமாத் தூக்கினாங்க. பல்லைக் கடிச்சிக்கிட்டு, கண்ணை உருட்டி, "கொஞ்ச நேரம் பேசாம இருக்க மாட்டியே"ன்னு சொன்னாங்க.

www.tamilarangam.net



அதுக்குள்ள அந்த கடைக்காரர் வந்து "இட்ஸ் ஒகே மேடம். நீங்க போங்க"ன்னு சொன்னார்.

அம்மா என்னைக் கையப் பிடிச்சி தர தரன்னு இழுத்துக்கிட்டுப் பணம் கட்டற எடத்துக்கு வந்துட்டாங்க.

அய்யோ அந்த வெள்ளைக் கார். அம்மா வேற கோவமா இருக்காங்க. இப்பக் கேக்கவே முடியாது. அம்மா புடிச்சி இழுத்ததுனால தோள் வேற ரொம்ப வலிச்சது.

வெளில வரும்போது மறுபடியும் அந்தப் போலீஸ்காரர் எங்களுக்குக் கதவைத் திறந்து விட்டார்.

படிக்கட்டு இறங்கி ரோடுக்கு வந்தவுடனே அம்மா என் கையைப் பிடிச்சிக்கிட்டாங்க. கொஞ்ச தூரம் போனப்பறம் "ஐஸ்க்ரீம் சாப்பிடலாமா கண்ணா"ன்னு கேட்டாங்க.

நான் வேணாம்னு தலயாட்டிட்டு அம்மா கைய மெதுவா விட்டுட்டு நடந்து போனேன்!

* * *

*"அம்மாவோடு" எழுதி முடிக்கப்பட்ட ஒரு கதையை – அது கருக்கொள்ள காரணமாயிருந்த அனுபவத்தை, ஓர் இடைவேளைக்குப் பிறகு அசைபோட்டுப் பார்ப்பது என்பது மறுபடியும் நம்மை அந்த உணர்வுநிலைக்குக் கொண்டு சென்றுவிடுகிற அற்புதத்தை நிகழ்த்துகிறது. கதைக்குக் காரணமான மன நெகிழ்ச்சிகளை, கோபங்களை, துயரங்களை, உணர்வுப் பெருக்குகளை மறுபடியும் அனுபவிக்கச் செய்கிறது. சமயங்களில் அதையும் தாண்டி, அதைப் பதிவு செய்து விட்டதோடு நம் கடமை முடிந்து விட்டதா என்கிற கேள்வியையும் எழுப்பி சிந்திக்கச் செய்கிறது.*

*இச் சிறுகதையைப் பொறுத்தவரை, இதன் பின்புலம் என்று சொல்லப் போனால் நகரில் நாகரிகம் என்ற பெயரில் நாம் பார்க்க நேரிடுகிற இயந்திரத்தனம் என்னில் ஏற்படுத்திய பாதிப்புதான் என்று சொல்ல வேண்டும். அதிநாகரிகத்தனமாய் வடிவமைக்கப்பட்ட பணக்காரத்தனம் பளிச்சிடும் கடைகள், சிற்றுண்டி சாலைகள், சில பொழுதுபோக்கு மையங்கள், குழந்தைகளுக்கான சில விளையாட்டு பயிலரங்குகள் – இங்கெல்லாம் அவசியம் காரணமாகவோ நிர்ப்பந்தம் காரணமாகவோ*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமயங்களில் தவிர்க்க முடியாத தூண்டுதல் காரணமாகவோ நுழைய நேரிடுகிற மத்திய தர மக்கள், அந்த சூழ்நிலைகளில் ஒரு துருத்தலாகவே தங்களை உணர்கிறார்கள். நாகரிகம் என்ற பெயரில் தங்களை ஒடுக்கிக் கொண்டு, இயல்பான சந்தோஷங்களைப் பணம் செலவு செய்து, இழந்துவிட்டு வருகிறார்கள். அல்லது அவையே சந்தோஷம் என்ற மாயையில் சிக்கிக் கொண்டு விடுகிறார்கள்.

இப்படிப்பட்ட ஓரிடம்தான் நான் வாழ்த்து அட்டைகள் வாங்கச் செல்கிற ஒரு கடையும் அக்கடையின் சூழ்நிலை காரணமாகவும் அட்டைகள் தேர்வு செய்கிற ஆர்வத்தாலும் குழந்தையின் மீதான என் கவனம் குறைவது குறித்த குற்றவுணர்வு, கடையை விட்டு வெளியே வந்தவுடன் ஏற்படுவது வழக்கம் எனக்கு, ஒவ்வொரு முறையும்.

மொட்டை மாடியாய் இருந்தாலும் சரி, மிகத் தொலைவு நடக்க வேண்டிய இடமாயிருந்தாலும் சரி, துள்ளிக் குதித்து சந்தோஷமாய் வருகிற குழந்தை குறிப்பிட்ட கடைக்கு செல்வதில் மட்டும் ஆர்வமற்று இருப்பதைக் கவனித்தேன். மெல்லப் பேசியபோது அதற்கான காரணம் சிந்தலும் சிதறலுமாய் வெளிப்பட்டது. அப்போது பளிச்சிட்டதுதான் இந்த எண்ணம் – குழந்தையின் வாய்வழியாக, என்னை உறுத்திக் கொண்டிருந்த வறட்டு நாகரிகத்தைப் பதிவு செய்யலாமே என்பது. எழுதி முடித்தபோதுதான் தெரிந்தது, நான் எழுத நினைத்ததைவிடவும் குழந்தையின் உணர்வுகளே பிரதானமாய் பதிவாகியிருப்பது.

- அருள் செல்வி

563/6, 12 வது தெரு,
ICF தெற்கு காலனி,
சென்னை – 600 038.

www.tamilarangam.net



# மனிதநேயம்

மலை மேல மாடு மேயுது ... பொன்னம்மா புல்லுக் கட்ட தூக்கிட்டுப் போறாளே ... போறாளே ...

போற வழியில பெரியப் பெரிய நாவ மரம். அதுக்கடியில பெரியப் பெரிய கொய்யாச் செடி அதன் மேல பெரியப் பெரிய கோவாக் கொடி ... அதில பெரியப் பெரிய வௌவாலு ...

"பாட்டி ... பாட்டி ... ஒத்த அரளி பூப்பூத்திருக்கு. வாங்க, கிட்டப் போயி பாத்திட்டு வரலாம் ... பாட்டி ... பாட்டி ..."

அந்தச் சிறுசுவின் அசைவில் முத்தாயீ உயிர் பெற்றிருந்தால்தானே பதில் சொல்லுவாள்.

வெறித்தப் பார்வை. சுவரெல்லாம் முத்தாயீ. தரையெல்லாம் முத்தாயீ. கோலங்கண்ட இடமெல்லாம் முத்தாயீ ... ஏன் இப்படி ஆகிப் போனாள்.

அவளுக்குத் துக்கமோ, பைத்தியமோ இல்லை. மனசு கொஞ்சம் கொதிப்படைஞ்சி போச்சி. தான் ஆலமரமா அரவணைச்சி வாழ்ந்துக் கிட்டிருக்கோம் என்ற பெருமையில நிமிர்ந்து நடந்துக்கிட்டிருந்தவளை, உரிமைங்கிற கட்டையப் போட்டு ... *சீ* ... நீ ஒத்த அரளிதான். ரொம்பப் பீத்திக்காதேனு சொன்னாங்க. அந்த அதிர்ச்சியில மனசு பேதலிச்சிப் போச்சி.

முத்தாயீ, இந்த வீட்டுக்கு மண்ணு கொட்டினவள். சாணிப் போட்டு மெழுகினவள். காரை போட்டவள். தன் ஆசைகளால் ஒரு கோழி, குஞ்சிக்குக்கூட வருத்தம் வரக்கூடாதென்று அத்தனையையும் அடுக்களையின் அடிப்பானையில் போட்டு அடுக்கி வைத்து விட்டவள். நல்லது, கெட்டது எதைப் பேசினாலும் அண்ணன், தம்பி குடும்பத்தில் சிக்கலென்று வாயடைத்துக் கிடந்தவள். தன் உடம்பெல்லாம் இந்த வீட்டு உப்பென்று நன்றிக் கடன்பட்டவள் ...

அவள் கனவில்கூட நேற்று வந்த அதிர்ச்சி, சங்கடம் வந்ததில்லையே. எப்படி தாங்குவாள் ...

திடீரென்று ...

www.tamilarangam.net



மழைச் சாரல். சற்றே ஒதுங்கலாமென்று குருமூர்த்தி வீட்டு திண்ணைக்குப் போனாள். அங்கே இவளையே ஒதுக்கச் சதி நடக்குமென்று எந்தப் பல்லியும் குறி சொல்லலையே ...

என்ன செய்வாள் பாவம் ...

திண்ணையில உட்கார்ந்திருந்த பெரிய மனுசனுங்க குருமூர்த்தியும் ராமமூர்த்தியும் வெத்தலப் பெட்டிய நகர்த்தி, நகர்த்தி பேசிக்கிட்ட விசயத்தை – ஏதோ ! யோசனையா கேட்டுக்கிட்டு நின்னா ... முத்தாயீ.

"ஆயிரம் சொல்லுங்க குரு. இந்த வயசில இந்தப் புத்தி ஆகாது. அதுங்க சின்னஞ்சிறுசுகள், நாம இருக்க வேண்டிய இடத்தில இருக்கறதுதான் மரியாதை."

ஆமாம்மா ... இனிமேலதான் நல்ல புத்தி வரப்போகுதாக்கும். அந்த காலத்திலேயே அறிவு இல்லை. கட்டிகிட்டவன் சீராவச்சி பிழைக்கலைனாலும், கொடுத்த இடத்திலேயே வாழ்ந்திருக்கணும் ... என்றார் குரு.

அடேங்கப்பா, எந்தக் கதையப் பேசு. நீர் பாரும் நீரு இவ கல்யாணத்தப்ப இவளுக்குப் பத்துப், பனிரெண்டு வயசுதான் இருக்கும். அம்மாக்காரி உறவு உடக் கூடாதுன்னு தம்பிக்கே கட்டி வச்சா ... தம்பிக்காரனோ அவன் அந்தஸ்துக்கான ஒன்ன தனக்கு ஏற்பாடு செஞ்சி வச்சிருந்திருக்கான் ...

அப்புறம், என்னாச்சி ....

என்னாகும், தொட்டுத் தாலி கட்டினதோட சரி, பொண்டாட்டிய அக்கா வீட்டிலேயே விட்டுட்டார். ஆனா, பழைய சொந்தத்த விடல. வருவார், போவார் இந்தம்மாக்கூட பேச்சி வார்த்தையே இல்லே ....

– வெத்திலைக்குச் சுண்ணாம்பு சேர்ந்திருச்சி போல. 'உஷ்' என்ற குரு சற்று உரக்கப் பேச ஆரம்பித்தார்.

இந்தம்மா அவரு சொந்தத்தில ஒட்டலையா?

உம் ... அதெப்படி ஒட்ட முடியும். புருசனே ஒத்துக்கல, அவரு அண்ணன், அண்ணி, மகன்கள்தான். அதிலும் பாருங்க ... அவரோட பெரிய மருமக தூரத்து உறவு. தன் புருஷனைவிட முத்தாயீ சின்னவனு தெரிஞ்சப் பிறகு கிட்ட அண்ட விடுவாளா?

www.tamilarangam.net



அப்படிச் சொல்லு ... கதைய ...

மூத்தாரு மகன் பெரியவன் பிள்ளைங்க ஆளாகி அத்தனையும் அங்கங்கே செட்டிலாகி விட்டதுகள். இப்ப இந்தம்மா லொள்ளு பண்ணினா ... சேத்துப்பாங்களா? நீங்களே சொல்லுங்க ... என்றார் ராமமூர்த்தி ...

முத்தாயிக்கு லேசாய் உறைத்தது. இவனுங்க யாரு நியாயத்தைப் பேசறாங்க ... நாம இதுவரை வீட்டு நியாயத்தை யாருகிட்டேயும் சொன்னதில்லையே, ஏதோ, லொள்ளு, கிள்ளுனு பேசறாங்களே, இருக்கட்டும் சரியா கேட்டுட்டு ஒரு பிடி பிடிச்சிறலாம் என்று முத்தாயி நினைத்தாள்.

ஏன்? அவ புருசன் சொத்து, சொகம் இருக்குமில்லே ...

சொத்தெல்லாம் குதிரைமேல ஓட விட்டுட்டார். சொகத்தையெல்லாம் இன்னொருத்திக்குப் பங்கு வச்சிட்டார். ரெண்டு பேரும் போனப் பின்னால இந்தம்மாளுக்கு ஏது அதெல்லாம்.

அப்ப இந்தம்மாளுக்கு என்னதான் வழி ...

இந்தறிவு வயசுலேயே இருந்திருக்கணும். உடம்பு நல்லா உழைக்கும் போது அண்ணன், தம்பிக்கும் அவங்க பிள்ளைகளுக்கும் மாடாய் உழைச்சிதான் போட்டாள் ....

அவங்களும், இவள அத்தை, அத்தையினு உசிராதான் வச்சிருந்தாங்க ... எதுவானாலும் அத்தைக்கு அடுத்துதான் அம்மாங்கிற மதிப்பெல்லாம் நிறையவே கொடுத்தாங்க ...

பின்ன இந்த சிக்கல் என்னாத்துக்கு. அவங்களாப் பார்த்து தூக்கி போட வேண்டியதுதானே ...

ஐயா, குரு. அங்கதான் சிக்கலே. உழைப்பத் தின்ன சொந்தம் யாரு அம்மா, அண்ணன், தம்பிங்க, அவங்க பொண்டாட்டி, பிள்ளைங்க ... இன்னைக்குச் சிக்கல் யாருது .. தம்பி மருமகளுக்கு. அவள் நன்றிப் பாப்பாளா? உரிமையப் பாப்பாளா?

நல்லா சொன்னீங்க ... நியாயம். எல்லாந் தெரிஞ்சிருந்தும், நாம பெரியவன் பிள்ளை கிட்டப் போயி, "உங்க சின்னப்பாட்டி முத்தாயியை

www.tamilarangam.net



உங்களோடவே வச்சி காப்பாத்துங்க, அது உங்க பொறுப்புனு" எப்படி சொல்ல முடியும்.

நானும், அதத்தான் குரு யோசிக்கறேன். ஒரு பத்து வருசத்துக்கு முன்னக்கூட, பேத்திக்கூட இருந்துக்கட்டும், வந்திட சொல்லுங்கனு மகன் கூப்பிட்டனுப்பியப்ப ... இதே, முத்தாயி எங்கிட்டேயே, என்னா ... திமிரு பேச்சி பேசினாத் தெரியுமா?

அவளச் சொல்லியும் தப்பில்லை. அறியா வயசில கல்யாணம், ஒரு நாக்கூட வாழல, தன் கூடப் பிறந்தவங்களை தவிர வேற உலகமே இல்லேனு வாழ்ந்தவள, திடிரூனு ஒட்டு உறவு இல்லாத மூத்தாரு பேத்திங்க கூட இருக்கவானு கூப்பிட்டா ... வரமுடியுமா?

இன்னைக்கு அந்த நிலம வந்திருச்சில்லே ...

– என்னாத்த பண்ண முடியும். அத்தை, அத்தையினு வளர்ந்ததுகளுக்கு அதுஅது குடும்ப பாரமே தாங்கல. இவள, எங்க தாங்கறது. அந்த வீட்டுக்கு வந்த மருமகளுங்களும் மாமியார், மாமனாரையே தனியா வைக்கும்போது அத்தைகெங்க இடம்.

முடிவா ... இவளுக்கு என்ன செய்யலாம்.

நமக்கு இது தேவையில்லை ... ஊருக்கு பெரிய மனுசங்க. நாம, இந்த மரியாதையை விடமுடியாது. எங்கேயோ கண்காணாத திக்கிலிருந்து வாழ வந்த பொண்ணு, நம்ம கால பிடிச்சி அழறா ...

"ஐயா, எங்க வீட்டுக்காரரோட அத்தை வீட்டோட இருந்துக்கிட்டு ரொம்ப தொல்லை கொடுக்கறா ... தினமும் அவளால, நான் அடி உதை வாங்கி சாகறேன். இதுக்கு ஒரு வழி நீங்களெல்லாம் சேர்ந்து செய்யலேனா, நான் உத்திரத்தில தொங்கிடுவேனு". அழுதிட்டு போறாளே! அவளுக்காக வேணும் ஒரு முடிவு செஞ்சாகணும் என்றார் ராமமூர்த்தி.

சரிங்க ... இந்தம்மா, முறைப்படி பார்த்தா மகனுங்க கிட்டே இருக்கணும். பெத்த பிள்ளைங்க் இல்லே, பங்காளீனு சொல்லிக்க இருந்த மூத்தார் பிள்ளையும் இல்லே, பேரன்மாருங்க கிட்டதான் பேசி முடிவு பண்ணனும் ...

இருவரும் எழுந்து விட்டனர் ... திண்ணை தேயுதோ, இல்லையோ, வெத்திலை பாக்கு தீர்ந்துவிட்டது. இனி நியாயமும் தீர்ந்து விடும்.

www.tamilarangam.net



– முத்தாயீக்குதான் புரியவே இல்லை. தனக்கு பின்னால் ஏதோ சதி நடக்கிறது. அது யாரால் என்று மட்டும் உணர முடிகிறது. ஏன்? எதனால் என்று பிடிபடவில்லை.

–இந்த பெரிய மனுசங்க தங்களது கெளரவத்த தக்க வைச்சிக்கணும். அதுக்கு இந்த மாதிரி குடும்ப பிரச்சனைகள் அப்பப்ப வரணும். முன்ன மாதிரி பெரிசுகள மதிச்சி யாரும் பொறுப்பு தரதில்லை. என்னவோ ரொம்ப நாளைக்குப் பிறகு முத்தாயீ குருமூர்த்தியைப் பெரிய மனுசனாக்குவதில் இஷ்டமே இல்லை. இத நாமளே முடிச்சி வைக்கணும். முத்தாயீ பேரன் பெரிய ஆபிசர் வச்சி வைக்கணும். எதுக்காவது உதவும் என்று நினைத்தான். குருவிற்கும் அந்த எண்ணம்தான் ...

அதே நினைப்போடு கிளம்பிய ராமமூர்த்தி முத்தாயீயைப் பார்த்து விட்டார் ...

'வாம்மா ... முத்தாயீ ... எப்ப வந்தே என்றார்'. இப்பதான் மாமா ... என்ற முத்தாயீ குரலில் கமறல் வெடித்தது. இதுவரை காதில் கேட்டதை ஜீரணிக்க முடியலையே. எப்படித் தெளிவாய்ச் சொல்லுவாள்.

'எப்படி இருக்கேம்மா' ...

'நல்லாதான் இருக்கேன் மாமா ... என் தம்பி மருமக உயிரையே வச்சிருக்கா ... தங்கமா பாத்துக்கறா ... ஒரு குறையும் இல்லே ... என்றாள்.

ராமமூர்த்தி விழித்தார் ... தம்பி மருமக கிழவிய வெளியேத்த நினைக்கிறாள். இவளோ, குட்டுவிடாமப் பேசுறாளே ... நாம நினைக்கிற மாதிரி சிக்கல் மீன் வலை இல்லை. சிலந்தி வலை. சரி மோதி பார்ப்போம் என்று தூண்டியலைப் போட்டார்.

கிடக்கட்டும் முத்தாயீ ... முன்ன மாதிரி இந்தக் காலப் பிள்ளைகள் இல்லே. தனியா இருக்கணும். இரண்டு, மூணு படி அரிசி வெந்த பானையை வீசிட்டு, அரை படி, கால் படி குக்கரை வச்சி இறக்கத்தான் விரும்புதுங்க .... நீ என்னா சொல்றே ... என்றார்.

"அதென்னவோ மாமா, அந்தப் புகைச்சலெல்லாம் நான் அனுபவிக்கல ... அந்தக் காலத்தில இருந்து இந்த நேரம் வரை மேல் வேலைதான் என்னுடையது. ஆக்கிப் போட்டா தின்பேன் அவ்வளவுதான். இப்படிக்கூட தம்பி பேரனை பள்ளிக்கூடத்திலேர்ந்து கூட்டிட்டு வரத்தான்

www.tamilarangam.net



போயிகிட்டிருக்கேன். மழை வரவும் ஒதுங்கி நின்னேன் ... அவ்வளவுதான் எனக்குத் தெரியும் என்றாள் முத்தாயீ. போச்சுடா ... ஆபீசர் பேரன் சேர்த்துக் கொள்கிறேன் என்றாலும் இவ ஒத்துக் கொள்ள மாட்டாள் போலிருக்கே ... ப் ... ஆ ... கொட்டி விட்டுத் தொடர்ந்தார்.

'முத்தாயீ ... நான் ஒண்ணு சொன்னா ... வருத்தப்பட மாட்டியே ...' என்று கேட்டார்.

'சொல்லுங்க ... மாமா. நான் மரக்கட்டை. என் வாழ்க்கையிலே வருத்தங்கறதுக்கும் இடமில்லே ... சந்தோசத்துக்கும் இடமில்லை' .. என்றாள்.

– உண்மைதான். முத்தாயீ அழுது யாரும் பார்த்ததில்லை. கல்யாணம், காரியம் எதிலும் முத்தாயீயை ஒதுக்கியதில்லை. அவளும் அதிகாரமாய் நுழைந்ததும் இல்லை. நாலுபேரு இருந்தா பழைய கதையப் பேசிச் சிரிப்பாங்க ... அதில் முத்தாயீயும் இருப்பாள். சிரித்ததில்லை சிரிப்பதாய் நடித்தாள். அவளே அறியாமலே அவள் போடும் வேசத்தை வெளிச்சம் போட்டுக் காட்டும் முக சோகம்.

மேற்கொண்டு எப்படி ஆரம்பிப்பது. ராமமூர்த்தி முழித்தார். ஆட்டைக் கடிச்சி, மாட்டைக் கடிச்சி, மனுசனக் கடிச்ச மாதிரி, எதை எதையோ பேசிக் கடைசியாய்த் தம்பி மருமகள் வேண்டிக்கிட்டதை நேரடியாக சொல்லிவிட்டார்.

முத்தாயீ மீண்டும் இடிந்து போனாள். தனக்குண்டான சொந்தம் தன் கூடப் பிறந்தவர்களும் அவர்கள் பிள்ளைகள் மட்டும்தான் என்றிருந்தவளுக்கு அந்த வழியும் அடைகிறது என்றால் துடித்துப் போக மாட்டாளா? இவ்வளவு பெரிய ஊர். ஊரெல்லாம் சொந்தம். நல்லது, கெட்டதில் சோறு தின்ன ஜாதி ஜனம். தனக்குனு ... ஒரே, ஒரு ஜீவன கைகாட்ட முடியவில்லையே! எப்படியோ வீடு வந்து சேர்ந்தாள்.

அம்மா, செத்தப்ப நினைக்காத நெனைப்பு ... அண்ணன், தம்பி சாவுல வராத துக்கம் கட்டியவன் செத்தபோது உணராடி துடிப்பு ... முத்தாயீக்கு ...

மலை உச்சியில அழகாய்ப் பூத்துக் குலுங்கும் ஒத்தைச் செவ்வரளி பூத்தா என்ன? பூக்காட்டி என்ன? தனி மரமா நிக்குதே! நாம அப்படியா? நாலு பிறப்போட வந்தவ, எனக்கென்ன ஆலமரம் என்றிருந்த முத்தாயீ ...

www.tamilarangam.net



எனக்குனு புருசன் புள்ளை இல்லே ... தொணையும் இல்லை. ராசாத்திப் பிழைப்பு. அம்மாங்கறதவிட அத்தையே அம்மாவா மாறுறது யாருக்கு வாய்க்கும் என்று இருமாந்த முத்தாயீ ... தளர்ந்து போனாள்.

முடிவிற்காய்த் திணறினாள். இவங்க சொல்றது போல அழைக்காத உடமைக்காரங்ககிட்டப் போயீ விழுந்து சாகலாமா? இல்லை ... காலங்காலமாய் உழைத்து ஓடாய்ப் போன, உறவாய் நினைத்த இவர்களிடமே மண்டியிட்டுச் சாகலாமா? எது நமக்குச் சொந்தம் ... குழம்பியும் போனாள். என் தப்பு என்ன என்ற கேள்வியுடன் தொக்கி நின்றாள்.

அவளுக்குள் ஒரு உயிர்த்துடிப்பு. நான் பிறந்த வீடு. நான் வளர்ந்த வீடு. நான் வாழ்ந்த வீடு. நான் வாழும் வீடு ... உறவுகள் வந்து வந்து போய்விட்டது. டஜன் கணக்கில் திருமணங்களும் விழாக்களும் சாவுகளும் என்னைக் கடந்து போய்விட்டது. இதுவரை எதையும் கடக்காத நான் ஏன் இப்போது கடக்க வேண்டும். நான் ஏன் வெளியேற வேண்டும். என்னைப் பிடிக்காதவர்கள் இங்கிருந்து போகட்டும் ... இது, இனி முத்தாயீக்குச் சொந்தமென நிரூபிக்க வேண்டும் ... தெம்பாய் எழுந்தாள் ... எல்லாப் பொருளிலும் பளிச்சென்று தெரிந்தது. முத்தாயீ ... முத்தாயீ ... முத்தாயீ எழுதி, எழுதி ஓய்ந்தாள் ....

இதோ ! வாழாத வாழ்விற்கு மேளமடித்துவிட்டுப் போனவன், எண்ணங்கள் சாகாத சாவிற்கு மேளமடிக்க வந்து விட்டான்.

பின்னாலே வந்து கொண்டிருக்கிறது ... முத்தாயீக்கு பிறந்த இடத்துக் கோடியும், புகுந்த இடத்துக் கோடியும் ...

***

*பெண்கள் மற்றும் குழந்தைகள் சமூக நல மையத்தின் இயக்குனர் மற்றும் பெண்ணியம் சான்றிதழ் படிப்பு முடித்தவள் என்ற முறையில் பெண் விடுதலை என்பது பொதுவுடைமைச் சமூகத்தில் மட்டுமே முழுமையாகச் சாதிக்க முடியும் என்று கூற விரும்புகிறேன். அதன் முதல் கட்டமாகச் சமூக முன்னேற்றங்களில் (கல்வி, அரசியல், பதவி . . .) சம உரிமை வழங்குவதுடன், ஆணாதிக்க கருத்துக்களை ஒழிக்கப் போராட வேண்டியுள்ளது. இக் கருத்து ஆண்களிடம் மட்டுமில்லை பெண்களிடமும் மிகுந்துள்ளது. காலங்காலமாய் ஒடுக்கியவர் மாறுவது என்பதும் ஒடுக்கப்பட்டவர் உடனடியாக தன் நிலை உணர்ந்து நிமிருதல் என்பதிலும் நீண்டகாலத் தொடர்போராட்டம் அவசியமாகிறது.*

www.tamilarangam.net



ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்ற மனிதர் மாய்ந்து விட்டார். விளைவு குடும்ப சுமை, வேலை சுமை என இரு சுமைகளைச் சுமக்க வேண்டியவளாகி விட்டாள். அதன் பலன் சுமைகளின் பளுவை உணர்ந்து அதை குறைக்கக் குரல் கொடுக்கிறாள். இம் முன்னேற்றத்தைச் சமூக நலனில் அக்கறைக் கொண்ட மனிதர்கள் ஏற்றுக் கொண்டு தோள் கொடுக்கிறார்கள். புரியாதவர்கள் பேயாகவும் பிசாசாகவும் சித்தரிக்கிறார்கள். குறிப்பாக பெண்களின் பிரச்சனைகள் என்றதும் வரதட்சணை, கணவன், அவன் வீட்டாரின் கொடுமை என்பதே பட்டியலிடப்படுகிறது. இதில் விதவைகள் குறை சில நேரங்களில் பேசப்பட்டாலும், குழந்தை இல்லாதவர்கள், விவாகரத்தானவர்கள், கை விடப்பட்டவர்களுக்கானப் பிரச்சனைகளைத் தொடுவது மிகக் குறைவாகவே உள்ளது. அந்த ஏக்கத்தின் சிறு துளிதான் வாழாமல் தாய் வீட்டில் தங்கிவிட்ட முத்தாயியின் கதை. தாய் மகளை அனுசரிக்கிறாள், உடன் பிறப்புகள் அனுசரிக்கலாம், அவர்களின் பிள்ளைகளும் அத்தை என உருகலாம். ஆனால் அடுத்த தலைமுறை இன்றைய சூழலில் மூன்றாம் நபரை (கணவனின் அத்தை, இரண்டாம் சொந்தமாகி விடுகிறது) தன்னுடன் அங்கீகரிக்க மறுப்பதை வெளிப்படுத்தும் முயற்சியே மனித நேயம். வாழும்போது போடாத சோத்தை, கொடுக்காத பந்தத்தை, படையலில் போட்டு பழகி விட்ட நாம் கை விடப்பட்டவளுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்ய தவறுவதுடன், அவள் உணர்வை மிதித்து அவளது சமூக அங்கத்தையே மறுத்து விடுகிறோம். அதை உணர்த்த எடுத்த ஆயுதமே இக் கதை.

- நா. சுப்புலட்சுமி

21 பி, சீனிவாசன் நகர்,
திருப்பத்தூர்
வேலூர் (மா).

www.tamilarangam.net



# நட்பு

அழைப்பு மணி ஒலி கேட்டுக் கதவைத் திறந்தாள் அர்ச்சனா.

சிரித்தபடி நின்றிருந்தாள் தோழி அகிலா.

"வா அகிலா ! உற்சாகமாய் வரவேற்று உள்ளே அழைத்துச் சென்று உட்கார வைத்தவள்,

"ஒரு நிமிஷம் அகிலா. இதோ வந்துடறேன். அடுப்புல பால் வச்சிருந்தேன். பொங்கிடப் போகுது."

காஸை நிறுத்திப் பாலை இறக்கி மூடிவைத்துத் திரும்பியவள் முன் சுவாதீனமாய் வந்து நிற்கிறாள் அகிலா.

"இந்தா அர்ச்சனா. கேரட் அல்வா செஞ்சேன். ஐஸ்வர்யாவுக்குப் பிடிக்குமேன்னு கொண்டு வந்தேன். கையிலிருந்த பாத்திரத்தை மேடைமேல் வைக்கிறாள்.

"இதுக்காகவா வந்தே?"

"இல்லே. இன்னிக்கு ஸ்கூல் ஃபீஸ் கட்ட லாஸ்ட் டேட் ஆச்சே. அதான் கட்டிட்டு அப்படியே இதையும் கொடுத்துட்டுப் போகலாம்னு?

"ஆமா அகிலா உன் வீட்டுக்காரர் இல்லியா. இன்னிக்கு அவருக்கு செகண்ட் ஷிப்ட்தானே?"

"மதுரையில ஒரு கல்யாணம். நேத்து நைட் கிளம்பிப் போனார். ஆறுமணிக்கு மேலதான் வருவாருன்னு நினைக்கிறேன்".

"சரி வா டிபன் சாப்பிடலாம்."

"நா சாப்பிட்டுதான் அர்ச்சனா கிளம்பினேன்".

"குழந்தைங்களை ஸ்கூலுக்கு அனுப்பிட்டு வர்ர அவசரத்துல என்ன சாப்பிட்டிருப்பேன்னு எனக்குத் தெரியாதா என்ன? சுடச்சுட இட்லியும் சாம்பாரும் ரெடியா இருக்கு. நானும் இன்னும் சாப்பிடல. என்னோட உட்கார்ந்து ரெண்டே ரெண்டு இட்லி சாப்பிடு".

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உள்ளே சென்றவள் இரண்டு தட்டுகளில் இட்லி வைத்து சாம்பார் ஊற்றி எடுத்து வருகிறாள். "பாத்தியா, இதான் உங்கிட்ட ரெண்டே ரெண்டுன்னு சொல்லிட்டு இப்ப நாலு இட்லி வச்சிக்கிட்டு வந்திருக்கே பாரு."

"ப்சு, பேசாம சாப்பிடு. ஒண்ணும் வெய்ட் போட்டுட மாட்டே"

செல்லமாய் அதட்டியவள், "ஏன் அகிலா நீ மட்டும் அன்னிக்குப் பார்த்தாப்ல அழகா ஸ்லிம்மா அப்படியே இருக்கிறே எப்படி? என்னைப் பாரு. மாசத்துக்கு ஒரு கிலோன்னு ஏறிக்கிட்டே போறேன். இப்படியே போனா வெடிச்சிதான் போகப் போறேன்னு கிண்டல் பண்றாரு உங்கண்ணன்."

பருத்த உடல் குலுங்கச் சிரிக்கிறாள். அகிலாவும் சேர்ந்து சிரிக்கிறாள். பேச்சும் சிரிப்புமாய் சாப்பாடும் தொடர்கிறது.

அர்ச்சனாவின் கணவன் ஆனந்தும் அகிலாவின் கணவர் சரவணனும் ஆருயிர் நண்பர்கள். இருவரும் ஒன்றாக ஐ.டி.ஐ. முடித்து ஒரே இடத்தில் ஒன்றாகவே வேலைக்குச் சேர்ந்தவர்கள்.

ஆரம்பத்தில் ஒரே அறையில் தங்கி, ஒன்றாக சமைத்துச் சாப்பிட்டு ஒரே பாயில் படுத்து உறங்கியவர்கள். பணி நிரந்தரம் பெற்று இருவருக்கும் திருமணமான பின்பும் அவர்களிடையே இருந்த நட்பின் நெருக்கம் அதிகமாயிற்றே தவிர குறையவில்லை. அதற்குக் காரணம் இருவரது மனைவியரும் இவர்களது நட்பைப் புரிந்து கொண்டு பழகியதுதான்.

ஆனந்திற்கு ஒரு பெண் குழந்தை. ஐஸ்வர்யா ஏழாவது படிக்கிறாள். சரவணனின் குழந்தைகள் மகேஷ், மஞ்சு. மகேஷ் எட்டாம் வகுப்பும் மஞ்சு ஐந்தாம் வகுப்பும் படிக்கிறார்கள்.

ஆனந்தின் வீட்டிலிருந்து சரவணன் வீடு சற்று தூரத்தில் இருக்கிறது. அருகிலேயே வந்துவிட முயற்சி செய்து கொண்டிருக்கிறான் சரவணன்.

"நேரமாகுது. நா கிளம்பறேன் அர்ச்சனா", அகிலா எழ,

"இரேன் அகிலா. உனக்கும் சேத்தே சமைச்சிடறேன். எடுத்துக்கிட்டுப் போயிடலாம். குழந்தைங்க வர்ர நேரத்துக்கு போனாப் போறாதா?"

www.tamilarangam.net



"இல்ல அர்ச்சனா. இருட்டிக்கிட்டு வருது பாரு. துணியெல்லாம் துவைச்சி வெளியில போட்டுட்டு வந்திருக்கேன். மழை வந்தா எல்லாம் நனைஞ்சிடும். வண்டிதானே. பத்தே நிமிஷம். வீடு போய்ச் சேர்ந்திடுவேன்".

"சரி இரு வர்றேன்" வேகமாய் உள்ளே போனவள் சில மாங்காய்களையும் எலுமிச்சம்பழங்களையும் எடுத்து வந்து கூடையில் போடுகிறாள்.

"நேத்துதான் பறிச்சு வச்சேன். அவருகிட்ட குடுத்தனுப்பலாம்னு இருந்தேன். நல்லவேளை நீயே வந்துட்டே. சரி சரி. நீ கிளம்பு. மழை வந்துடப் போகுது".

விடைபெற்று வண்டியில் ஏறிக் கிளப்பிச் செல்கிறாள் அகிலா.

ஒரு வாரம் வழக்கம்போல் ஓடியது. அன்று ஆனந்த் பர்ஸ்ட் ஷிப்ட் சென்றிருந்தான். ஐஸ்வர்யாவைப் பள்ளிக்கு அனுப்பிய பிறகு துணிகளைப் பொறுக்கிப் போட்டுக்கொண்டு துவைக்க உட்காருகிறாள். துணிகளை நனைத்து சோப்புப் போட ஆரம்பித்தவள் படபடவெனக் கதவு தட்டும் சப்தம் கேட்டு விரைகிறாள்.

கதவைத் திறந்தவள் முன் . . . ஆனந்த்.

கலைந்து கிடந்த தலை. கசங்கி இருந்த ஆடை, சிவந்து வீங்கிய கண்களுமாகப் படபடப்புடன் அவன் நின்றிருந்த கோலம் ஏதோ விபரீதம் என்பதை அவளுக்கு உணர்த்துகிறது.

"என்னங்க? என்ன ஆச்சு?"

"சரவணன் போய்விட்டான்". அவன் கூறிய ஒற்றைவரிச் செய்தி அவளை அப்படியே உறைய வைக்கிறது.

"எப்படிங்க?"

"தெரியலியே". கண்கள் கலங்க உதட்டைப் பிதுக்குகிறான். வீட்டைப் பூட்டிக் கொண்டு கணவனின் பின்னே அமர வண்டி சீறிப் பாய்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவளைக் கண்டதும் ஓடிவந்து கட்டிப் பிடித்துக் கொண்டு கதறுகிறாள் அகிலா. அழுவதைத் தவிர வேறென்ன செய்ய முடியும். இவளும் சேர்ந்து அழுகிறாள்.

அருகிலிருந்த மற்ற நண்பர்கள் நடந்ததைக் கூறுகின்றனர். ராத்திரியே லேசா நெஞ்சு வலிச்சிருக்கு. சாதாரண வலிதான்னு அலட்சியமா இருந்திருக்கான். நேரம் ஆக ஆக வலி அதிகமாகவே மனைவியை எழுப்பி விஷயத்தைக் கூறி டாக்டரிடம் கிளம்புவதற்குள் எல்லாம் முடிந்துவிட்டது.

என்ன பேசி என்ன? இனி சரவணன் இல்லை என்பதுதான் நிஜம். சரவணனின் காரியங்கள் எல்லாம் முடிந்துவிட்டன.

யார் இருந்தாலென்ன போனாலென்ன என்ற வேகத்தில் நாட்கள் இறக்கை கட்டிக்கொண்டு பறந்தன.

சோகச் சித்திரமாய்க் காட்சியளிக்கிறாள் அகிலா. ஆனந்தும் அர்ச்சனாவும் அவ்வப்போது போய்ப் பார்த்து ஆறுதல் கூறி வந்தார்கள். தன்னால் முடியவில்லை என்றால் ஆனந்தையாவது அனுப்பிப் போய் பார்த்து வரச்சொல்வாள். ஞாயிற்றுக்கிழமை என்றால் மகேஷ், மஞ்சுவை அழைத்து வரச் செய்வாள்.

சரவணன் வேலை பார்த்த இடத்திலேயே வேலை போட்டுக் கொடுக்க போய்வந்து கொண்டிருக்கிறாள் அகிலா.

அன்று பக்கத்து வீட்டு மல்லிகா இவளைத் தேடி வந்து பேச்சுக் கொடுக்கிறாள்.

"நீ இவ்வளவு அப்பாவியா இருப்பேன்னு நா நினைக்கவே இல்லே அர்ச்சனா."

"என்னக்கா சொல்றீங்க?" புரியாமல் விழித்தவளிடம்,

"எல்லாம் அந்த அகிலாவப் பத்திதான் சொல்றேன். ஏதோ புருஷன் போய்ட்டான். பாவம்னு பழகின தோஷத்துக்குக் கூட இருந்து எல்லாத்தையும் பாத்தீங்க சரி. இப்போ வயித்துப் பாட்டுக்கு ஒரு வேலையும் கிடைச்சிப் போச்சி. அத்தோட விட்டுட வேண்டியதுதானே".

www.tamilarangam.net



"என்னக்கா இப்படி சொல்றீங்க? நாங்க எப்படிப் . . .

"எப்படிப் பழகினோம்னு சொல்ல வர்ரே, அதானே. அடியே அப்ப அவ புருஷன் இருந்தான். இப்போ. அப்படியா? அவளுக்கோ சின்ன வயசு. சிக்குன்னு சின்னப் பொண்ணாட்டம் அழகா வேற இருக்கா. உம் புருஷனும் ஆம்பளதானே. பஞ்சையும் நெருப்பையும் பக்கத்துல பக்கத்துல வச்சா . . . " கொக்கி போட்டு இழுத்து நிறுத்த,

"சே... சே... அகிலாவப் பத்தி அப்படியெல்லாம் சொல்லாதீங்கக்கா. அதுவுமில்லாம எம் புருஷனப்பத்தி எனக்குத் தெரியாதா என்ன?" வார்த்தைகள் சரத்தின்றி வருகின்றன அகிலாவிடமிருந்து.

"என்னவோம்மா. நா சொல்றத சொல்லிட்டேன். அப்படி எதுவும் நடக்காம இருந்தா சரி. பின்னால நீ வருத்தப்படக் கூடாது பாரு. அதுக்காகத்தான் எச்சரிச்சு வைக்கிறேன். நா வர்றேன்". வந்த வேலை முடிந்த திருப்தியில் எழுந்து செல்கிறாள் மல்லிகா.

மல்லிகா வைத்துச் சென்ற சிறு பொறி புகைந்து, கனன்று கொஞ்சம் கொஞ்சமாகக் கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது. அதற்குத் தகுந்தாற்போல் அடுத்தடுத்து நடைபெற்ற ஓரிரு நிகழ்ச்சிகள். சந்தேகம் கொண்ட மனது இதற்கும் அதற்கும் முடிச்சுப் போட்டுப் பார்த்துத் தன் சந்தேகம் சரிதான் என ஊர்ஜிதப்படுத்திக் கொண்டது.

அன்று பணி முடித்து வந்த ஆனந்தன் குளித்து முடித்து சாப்பிட அமர்கிறான்.

பரிமாறியபடியே மெல்லப் பேச்சை ஆரம்பிக்கிறாள் அர்ச்சனா.

"என்னங்க நேத்து அகிலா வீட்டுக்குப் போனீங்களா?"

"இல்லையே எதுக்குக் கேக்கறே?"

"பின்னே உங்களையும் அகிலாவையும் டி.வி. கடைல பார்த்ததா சொன்னாங்களே"

"யார் சொன்னது?"

"யாரோ சொன்னாங்க. அது எதுக்கு உங்களுக்கு? உண்மையா, இல்லையா அதைச் சொல்லுங்க முதல்ல."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"நீ சொன்னதுல பாதிதான் உண்மை. நேத்துக் கடைத்தெருவுக்கு போனப்ப டிவி. கடைல நின்னுக்கிட்டிருந்த அகிலாவைப் பார்த்தேன். கிட்ட போயி என்னன்னு விசாரிச்சேன். டி.வி.யிலே ஏதோ ப்ராப்ளம். மெக்கானிக்க கையோட அழைச்சிட்டுப் போகலாமேன்னு வந்ததா சொன்னா. அவ்வளவுதான்."

"சரி. இதை ஏன் எங்கிட்ட சொல்லல."

"சொல்லனும்னுதான் நினைச்சேன். வேற வேலைல மறந்துட்டேன்."

"மறந்துட்டீங்களா? இல்லே மறைச்சுட்டீங்களா?"

சாப்பாட்டில் கைவைத்தவன் அவளை உற்றுப் பார்க்கிறான்.

அவளது பேச்சு செல்லும் திசை இப்போதுதான் பிடிபடுகிறது அவனுக்கு.

"அண்ணாவாம் . . . அண்ணா . . . ."

தேளாய்க் கொட்டுகின்றன. அர்ச்சனாவின் வார்த்தைகள்.

மேலே பேச்சை வளர்ப்பது உசிதமல்ல என எண்ணியவனாய்க் கையைக் கழுவிப் படுக்கையில் சென்று விழுகிறான். இதயத்தை யாரோ பிசைவது போலிருக்கிறது.

நாட்கள் நகர்கின்றன. அன்று தங்கள் வீட்டுக் காம்பவுண்ட் சுவற்றுக்கருகில் நின்றபடி மல்லிகாவிடம் பேசிக் கொண்டிருக்கிறாள் அர்ச்சனா?

கேட் திறக்கும் சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்க்க, வந்தது ராமநாதன். அவளது கணவனுடன் பணிபுரிபவன்.

"வாங்க. அவர் பர்ஸ்ட் ஷிப்ட் போயிருக்காரு."

வந்தவனின் முகத்தில் எதையோ சொல்ல வந்த தயக்கம்.

"என்ன விஷயங்க? ஏதாவது சொல்லனும்னா சொல்லுங்க. அவர் வந்ததும் சொல்லிடறேன்."

www.tamilarangam.net



தயங்கித் தயங்கி அவன் சொன்ன விஷயம் அவள் தலையில் பேரிடியாய் இறங்குகிறது.

காலையில் கேன்டீனில் சாப்பிட்டுவிட்டுப் பேசிக்கொண்டிருந்த ஆனந்தன் திடீரென நெஞ்சைப் பிடித்துக்கொண்டு கீழே விழுந்துவிட்டான். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயிருக்கிறார்கள்.

அர்ச்சனாவிற்குப் படபடவென வருகிறது. இப்போது என்ன செய்வது? எப்படிப் போவது?

"நீ கிளம்பு அர்ச்சனா நா பார்த்துக்கறேன்." மல்லிகா கூற, வந்தவனின் பின்னே வண்டியில் ஏறி அமர்கிறாள்.

வண்டி ஓடிக்கொண்டிருக்க, பொங்கி வந்த அழுகையை அடக்கியபடி எல்லா தெய்வங்களையும் வேண்டுகிறாள். கடவுளே அவரைக் காப்பாற்று. நான் யாருக்கும் ஒரு பாவமும் செய்யவில்லையே ! என் மனம் புலம்பும்பொழுதே அகிலாவைப்பற்றிப் பேசிய பேச்சுகள் நினைவில் வந்து மோதுகின்றன.

கடவுளே! அந்த அப்பாவிப் பெண்ணின் பாவத்தைக் கொட்டிக் கொண்டதற்குத் தண்டனை கொடுத்து விடாதே. உள்ளம் ஓலமிட்டது.

ஆஸ்பத்திரியை அடைந்து வண்டி நின்றதும் புயலென உள்ளே பாய்கிறாள் அர்ச்சனா.

எதிரில் அகிலா . . .

"அழாதே அர்ச்சனா. அண்ணனுக்கு ஒண்ணும் இல்லே. வா. உள்ள வந்து பாரு."

கிழிந்த நாராய்த் துவண்டுபோய்ப் படுக்கையில் கிடந்தவனைப் பார்க்கையில் அழுகை பீறிடுகிறது. பாவி எல்லாம் என்னால்தான் குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கிறது.

பயப்படும்படியாக ஒன்றுமில்லை. எதற்கும் நாலு நாள் இருந்து பார்த்துக் கொண்டு போவது நல்லது என டாக்டர் கூறிவிட்டார்.

நான்கு நாட்களும் அகிலாதான் ஆஸ்பத்திரிக்கும் வீட்டிற்குமாய் அல்லாடுகிறாள். ஐஸ்வர்யாவைச் சமாதானப்படுத்திப் பள்ளிக்கு அனுப்பி,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தன் குழந்தைகளையும் கவனித்துக் கொண்டு, இடையில் அர்ச்சனாவை வீட்டிற்கு அழைத்துப்போய் குளிக்கச் செய்து ... எனப் பம்பரமாய்ச் சுழல்கிறாள்.

ஆனந்த் டிஸ்சார்ஜ் ஆகி வீட்டிற்கு வந்தாயிற்று. கிடந்த துணிகளைத் துவைத்துப் போட்டுவிட்டு, சமைத்து வைத்துவிட்டுத் தன் வீட்டிற்குக் கிளம்புகிறாள் அகிலா.

"வீட்ல போட்டது போட்டபடி கிடக்கும். நா கிளம்பறேன் அர்ச்சனா" என்றவள்,

"இதோ பாருங்கண்ணா. நீங்க கொஞ்ச நாளைக்கு கம்ப்ளீட் ரெஸ்ட்ல இருக்கறது நல்லது. வேலைக்குப் போயிட்டு வர்றதோட பேசாம படுத்து ரெஸ்ட் எடுங்க. எதுனா ஜாமான் வாங்கணுமா, ஸ்கூல் ஃபீஸ் கட்டணுமா, மருந்து மாத்திரை வாங்கணுமா, எதுவா இருந்தாலும் ஒரு ஃபோன் பண்ணுங்க. நா ஓடி வந்துடறேன். என்ன அர்ச்சனா, சொல்றது புரியுதா. அப்புறம் மறக்காம மாத்திரை, மருந்தெல்லாம் ஒழுங்கா கொடுத்திடு."

உரிமையுடன் அதட்டியவளை நிமிர்ந்து பார்க்க முடியாமல் கண்களில் நீர் நிறைகிறது.

"அசடு. அதான் அண்ணனுக்கு ஒண்ணுமில்லேன்னு டாக்டர் சொல்லிட்டாருல்ல. அழாதே கண்ணத் தொடச்சிக்கோ. நா வேண்டின கடவுள் நம்மளக் கைவிடல". அவள் பேசப்பேச உள்ளுக்குள்ளேயே நொறுங்கிப் போகிறாள் அர்ச்சனா.

அகிலாவை அனுப்பிவிட்டுக் கணவனிடம் வருகிறாள்.

ஆனந்தின் பார்வை அவளை ஊசியாய்த் துளைக்கிறது.

"எனக்கு இப்படி ஆனதுகூட ஒருவிதத்துல நல்லதுக்குத்தான்னு நினைக்கிறேன். என்ன அர்ச்சனா?"

"என்னை மன்னிச்சிடுங்க". குரல் தழுதழுக்கிறது.

"இதோ பாரு அர்ச்சனா,

நேத்து அகிலாவுக்கு வந்த நிலைமை இன்னிக்கு உனக்கு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வந்திருக்கலாம் இது இயற்கை. தவறுன்னு தெரிஞ்சே செய்யறவங்க சிலர். வேற வழியில்லாம செய்யறவங்க சிலர். சந்தர்ப்ப சூழ்நிலையால செய்யறவங்க சிலர். எந்த நேரத்துலயும் தவறாம இருக்கறவங்க சிலர். அதனால எல்லோரையும் எப்பவும் ஒரே கண்ணோட்டத்தோடயே பார்க்கக் கூடாது.

ஒருத்தரோட சந்தோஷத்துல யார் வேணும்னாலும் பங்கெடுத்துக்கலாம். துன்பத்துல பங்கெடுத்துக்கறதுதான் உண்மையான நட்புக்கு அடையாளம். நான் ஒரு உண்மையான நண்பனா இருக்க விரும்பறேன்.

சரவணன் செத்திருக்கலாம். ஆனா எங்களோட நட்பு வாழணும். ப்ளீஸ் அர்ச்சனா."

ஆனந்தின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் நெஞ்சில் ஆணியாய் அறைய, தன் தவறை உணர்ந்தவளாய் மெல்ல அவன் மார்பில் தலை சாய்கிறாள்.

"ஸ் . . . ஆ . . ."

என்னங்க மறுபடியும் நெஞ்சை வலிக்குதா? அர்ச்சனா பதறி எழ,

"இது சுகமான வலி"

கண்ணடித்துச் சிரித்தவனைச் செல்லமாய் முறைக்கிறாள் அர்ச்சனா.

* * *

*காதலைவிடப் புனிதமானது, உயர்வானது நட்பு. 'அகம் நக' எனும் வள்ளுவர் கூறும் நட்பை இப்போது காண முடிவதில்லை.*

*மன அழுத்தம், மாரடைப்பு, தற்கொலைகள் முதலியன அதிகரித்துள்ளமைக்கும் யோகா, தியான வகுப்புகள் முதலியன பெருகியுள்ளமைக்கும் காரணம் எண்ணங்களைப் பகிர்ந்துகொள்ள நல்ல நண்பர்கள் இல்லாமையே.*

*எல்லா உறவுகளுக்கும் நட்பே அடிப்படை. நட்புடன் பழகுவதன்மூலம் உறவுகளைக்கூடத் தக்கவைத்துக் கொள்ள முடியும்.*

www.tamilarangam.net



நல்ல நட்பு என்பது இறப்பிற்குப் பின்னும் வாழும்.

விபத்தொன்றில் கணவனை இழந்த ஒரு பெண், அவளது கணவனைச் சார்ந்தவர்களும் கைவிட்டு, நண்பர்கள் என்று அதுவரை கூறிக் கொண்டிருந்தவர்களும் காணாமல் போக, இரு பெண் குழந்தைகளுடன் அந்த அப்பாவிப் பெண் திக்கற்று நின்ற காட்சி மிகவும் கொடுமை. உதவச் சென்ற ஒரு நல்ல நண்பனுக்கு அவப்பெயர் சூட்டி அவனது குடும்பத்தில் பிளவை உண்டாக்கியது அதைவிடக் கொடுமை.

தாய்மையின் சிகரம், தியாகத்தின் சின்னம், பொறுமையின் பிறப்பிடம் என்றெல்லாம் போற்றப்படும் பெண்தான் ஆசை, பொறாமை, சந்தேகம் போன்றவற்றின் இருப்பிடமாகவும் திகழ்கின்றாள்.

பெண்ணுக்குப் பெண்ணே இழைக்கும் கொடுமை முதலில் மாற வேண்டும்.

கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரித்தறிவதே மெய் என்னும் மொழியை ஒவ்வொரு பெண்ணும் உணர வேண்டும்.

- தென்றல்

C 3, தச்சர் சாலை
18–வது வட்டம்,
நெய்வேலி – 607 803.

SEELAN BOOKS NORWAY SIGNATURE

www.tamilarangam.net



# பழி ஓரிடம் ...!

"வர்ரீய்யா!" துள்ளி ஒதுங்கினாள் அவள்.

"இன்னாம்மே ... வர்ரீய்யா !" போக்கிரித்தனம் குரலில் பொங்க அந்த கிசுகிசு குரலும் வெறுக்கத்தக்க நெடியும் சேர்ந்து முகத்தில் படித்தபோது இனி முடியாது என்று கருதி அவள் எழுந்தே விட்டாள்.

மாநிலத் தலைநகரின் இறக்குமதி போலும். அதுதான் கொமரவாடி சிற்றூருக்கு ஒட்டாத பாஷை.

"என்ன தொர . . . யாவாரம் படியலங்காட்டி" சற்று தூரத்திலிருந்து குரல் வந்தது. பத்தடி தூரத்தில் தகரக் குவளை, தடி, பக்கத்தில் ஒரு சொறிநாய், பழுத்து பல பொத்தல்களோடு ஒரு கம்பளிப் போர்வை ஆகியவற்றின் உரிமையாளனாக ஒரு பிச்சைக்காரன். அருகில் ஒரு பிச்சைக்காரி. தன் நிலமையை நொந்து கொண்டாள் அவள்.

கொமராவாடி பேருந்து நிலையத்தில் பின்னிரவு நிகழ்ச்சிகள் அரங்கேறிக் கொண்டு இருந்தன. பளிச் என்று எரிந்த விளக்குகள் அணைக்கப்பட்டன. பேருந்து நிலைய டீக்கடையும் தன் பணி முடிவை நெருங்கிக் கொண்டு இருந்தது.

டீக்கடை முதலாளியின் பார்வை வெறுப்பை வழியவிட்டது. "ஏமலே ... பாய்லர்ல தண்ணி ஒங்கப்பனா ஊத்துவான். எடுபட்ட பயமக்க ... சடுதியா ஊத்துவே" என்று அந்த வெறுப்புச் சொற்களாய் டீக்கடைப் பையனை அறைந்தது. அவளை அறைய முடியாதே !

கடை மூடி, கடைசியாக டீக்கடை முதலாளியின் ஒரே உதையில் டி.வி.எஸ். பிஃப்டி உயிர் பெற "ஏமலே ... கொளுப்பு வெச்சிக் கிடக்காக்கும். ஏறி குந்துல! ... பயமக்கா ... சீலைய கண்டா சிலுத்துக்குவியலே ! அந்தாக்குல பொட்டறியில போட்டா கண்ணு முளி தெறிச்சிடும் ... எதுவோ எங்கிட்டோ கெடக்குன்னு ..." அவர் அதட்ட சிறுவன் ஓடிச் சென்று அவர் பின்னால் ஏறினான். அந்த இரும்புக் குதிரை 'புடுபுடு' வென சப்தம் எழுப்பி ஓடி மறைய வெளி உலகத் தொடர்பே இல்லாமல் ஊருக்கு வெளியே ஒதுங்கி இருந்த அந்தப் பேருந்து நிலையம் அழுது வழியும் இருளில் அமிழ்ந்து தனியுலகாயிற்று. டீக்கடை முதலாளியைவிட அந்தாளுடைய வீரப்பன் மீசை பெரிய பாதுகாப்பாக இருந்தாற்போல் பட்டது அவளுக்கு. தன் தனிமையைப்

www.tamilarangam.net



பரிபூரணமாக உணர்ந்தாள் அவள். நேரம் பார்த்துப் பதுங்கி இருந்தது போல் பரட்டைத் தலையன் மீண்டும் தோன்றினான். சாராயமும் சிகரெட்டும் கூடவே வயிற்றுவலியும் மென்று துப்பிய சக்கையான அவன் தேக வலிமையை அவன் உலர்ந்து வற்றிய தோற்றமே வெளிச்சம் போட்டுக் காட்ட, கல்லூரியில் தற்காப்புக் கலையைப் பயின்று 'கிரீன் பெல்ட்' வாங்கியிருந்த அவளுக்கு அந்த பொறுக்கியை ஒரே 'கட்டா'வில் அடித்து வீழ்த்தும் வலிமை இருந்தாலும் பயிற்சியைப் பிரயோகிக்க இதுவா இடம். இந்த தொத்தலுக்கு உதவியாக எத்தனை வத்தல்கள் இந்த இருளுக்குள் ஒளிந்து இருக்குமோ! உடலில் உறுதி இருந்தாலும்கூட . . . ஹூம்.

"ஏட்டி கோமுட்டிப் புள்ள ! புள்ளக்கி உண்டன வெஞ்சனம் வைய்யேன். கொடைக்கி நேந்துவிட்ட செம்புளியாடு கணக்கா என்ன முளிக்கோங்கேன் . . . சவட்டி எடுத்து வீசிருவேங்காட்டியும் ... செவுட்டு மூதி! தட்டத்த பாத்துப் பரிமாறுவே! எடுபட்ட பய புள்ள ! வக்கனையா ஆக்கி வச்சி என்ன புரோசனம் ! ருசி பசி அறிஞ்சி பாத்து வாடிக்கோனும். அதுதான் ஆக்குனதுக்கு அளகு". தாயை அதட்டி அவள் தந்தை பார்த்துப் பார்த்து உண்ண வைப்பார். கூடுதல் வலிமைக்கு அதுவும் ஒரு காரணம். அவள் புறம் திரும்பி "மக்கா ... நீ சாப்புடுவே ! இந்த சாடயப் பாருவே ! வாயிலே வெச்சாக் கரையவுல்ல செய்யுது. தின்னவேலி சீமையிலே இந்த சிறுக்கி கணக்காச் சமைக்க எந்த பொட்டச்சிக்கு ஆகும்லே ! நல்லாத்தேன் ஆக்கியிருக்கா ... மொளகு சீரகம் அரச்சி வுட்டு, இஞ்சிபூண்டு தட்டி சேத்திருக்காப்புல ... அப்படியே மணத்து வளியுதே! காடையும் கவுதாரியும்...!" சர்ரென்று உறிஞ்சி அப்பா நொட்டை விடும்போது அவளுக்கு உண்டது முழுக்க தொண்டைக்கு வந்துவிடும்.

"கூந்தபன முருயன்கிட்ட சொல்லிவுட்டிருக்கேன். ஒருக்க மறுக்க ஒலக்க தண்டி வெறாமீனு கொண்டாரச்சொல்லி ... பயலும் கம்மாவுல புதுத்தண்ணி உடுறப்போ பெட்டிகட்டி கொண்டாறேனாப்புல ... வக்கன வயனமா எம்முட்டு ராசாத்திக்கு ஆக்கிப் போடு புள்ள ! அந்தாக்குல கெட்டிக்கிட்டுப் போற வெடத்துல எப்பிடியோ ! ஏலுமோ ... ஏலாதோ !" பெருமூச்சு பிறக்கும் அவரிடம்.

அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடும்போது தண்ணீரோடு விழுந்து புரண்டு மீன்களும் கண்மாய்க்குள் வந்து விழுந்து மதகு வழியாக மடையில் பாய்ந்துவிடும். மடை திரும்பும் இடத்தில் தண்ணீரோடு வேகமாக வரும் மீன்கள் வரப்பில் மோதி அந்த திருப்பத்தின் இரண்டு புறமும் கட்டிவிடப்பட்டிருக்கும் ஒலைப் பெட்டியில் துள்ளித்துள்ளி விழும். சில

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சமயங்களில் வரப்பு உயரம் குறைவாக இருக்கும் இடங்களில் துள்ளி வயலுக்குள்ளும் போய்க் கிடக்கும். இதைத்தான் ஸ்ரீ ஆண்டாள் நாச்சியார் திருப்பாவையில் 'ஓங்கு பெரு செந்நெல் ஊடு கயலுகள' என்கிறார். வெள்ளிக் கெண்டை, சேல் கெண்டை, ஜிலேபிக் கெண்டை, ஆரா அயில், வரால், உளுவை, விலாங்கு, கட்லா, கெளுத்தி, குரவை, அயிரை, வாளை, கயல் என்று பலவகை மீன்கள் பெட்டிகளில் நிரம்பி வழியும். "மூத்த புள்ள கணக்கா தண்ணி தாண்டி போகுதியலோ அல்ல ... ஐயங் கண்ணு காண குஞ்சு குளுவான் பெத்து மக்க மனிசாளோட இங்கிட்ட வாளுதியலோ ... அக்கச்சி கணக்காக தங்கச்சியும் கடல்தாண்டி போவியலா தாயி ...!" என்று தந்தை குரல் கம்ம மருகும்போது அவளுக்கும் கண்கள் குளம் கட்டும்.

"ஐயா ! உள்ளூரு மாப்பிள்ளையா பாரும். அக்கா கண்ணாலம் கண்ட பொறவு எங்கிட்டு கடல் தாண்டி போவ ... எனக்கு ஏலாது. அங்கிட்டு துட்டா கொட்டுனாலும் ஐயா அவுகள பாக்காம நான் சந்தோசப்படுவேனா? அல்ல ஐயாதான் மவ அனுப்புற துட்ட வெச்சி ஆனந்தப்படுவீரா ...?" என்று ஃபோனில் புலம்பித் தீர்க்கும் தமக்கையை நினைத்துக் கேட்க தந்தை ஆடிப் போனார்.

"அது என்ன தாயி அப்பிடிக் கேட்டுப்புட்டே! ஒக்காள வெளிநாடு அனுப்பி வெச்சிட்டு அவிய பேசுதாகளா ... பேசுதாகளான்னு நாம்ப இங்கிட்டு அலமோதிக் கெடக்கோணும். அத்தி பூக்காப்புல அவிய பேசிட்டாலும் என்னைய கெட்னவுக ... என்யை கெட்னவுகன்னு பேசி ஊடால கொஞ்சம் போல பேராண்டியளோட பெருமைய அவிய பீத்திக்கிறதும் அத கேட்டுட்டு நாம மருவி மருவி அவியளயும் அந்த பிஞ்சிகளையும் நெனச்சி நவுதாயப்படுறதும் நல்லாவா புள்ள இருக்கு?" என்பவர் அண்ணாந்து விட்டத்தை நோக்குவார்.

"மெட்ராசு போயி அவியள ஆகாசத்துல அனுப்புன பொறவு மொத ரோசனையே அதேன். அடுத்த புள்ள உள்ளூருதேன். தாயி ஒம்மள காலேசு படிப்பு வாசிக்க வச்சி, கண்ணா பொத்தி வளத்து வச்சி, கெட்டிக் கொடுக்கவும் ஏலாம வீட்டுல வெச்சிக்கவும் ஏலாம ... நான் முடிவா சொல்லுதேன்! எம்முட்டு எளய மவ அளகு சுந்தரிய எந்த பயமக்க கேட்டு வந்தாலும் உள்ளூரா இருந்தா செரிதான் ...!" அவர் மூத்தவள் மேல் படர்ந்த துக்கத்தை இளையவள் மேல் இரும்புப் பிடியாய் இறக்குவார். அவளுக்கும் அது சம்மதம்தான். தாமிரவருணி தண்ணீரைக் குடித்துப் பொன்னாய் ஒளிர்ந்த மேனியும் புதிதாய்ப் பூத்த புதுமலர் போல் பொலியும் அவள் இளமையும் கல்யாணம் செதுக்குமா அல்லது சிதைக்குமா என்று அவள்

www.tamilarangam.net



மனக்கணக்கு போட்டுப்பார்க்க விரும்பவில்லை. அக்காள் புருஷன் போல் இல்லாமல் அயோக்யனாய் இருந்துவிட்டால் ... ஆய்ந்து, ஓய்ந்து, சாய்ந்து, புலம்பப் பெற்றோர்கள் தோள்கூட எட்டாத தூரத்தில் கிடந்து சாதிக்கப் போவதுதான் என்ன?

செங்கேணிக்கடவு என்ற அந்த வானம் பார்த்த பூமியில் தாமிரவருணியின் நடமாட்டம் வெறும் இரண்டேமாதம்தான். ஒருபோக விளைச்சல் நாலுமாத சோலி. மற்ற காலங்களில் வயிறு வாய் மூடியா இருக்கும்? அல்லது வாய் மட்டும் வேலை செய்து, வம்பு பெருகி, வெட்டும் குத்தும் வீண்பழியும் பெருகாமல் இருக்குமா? உழுது விளைத்து அறுத்து மூட்டை கட்டாமல் இருக்க அந்தப் பின்தங்கிய பகுதி மக்கள் இடுப்பில் முடிந்தா வைத்துள்ளார்கள்? அல்லது எத்தனைக் காலம்தான் ஆடுகளை 'பத்தி' விட்டுக் கொண்டும் வாத்துக்களை விரட்டி மேய்த்துக் கொண்டும் வாழ முடியும்!

அந்தச் சமயத்தில் வயக்காட்டு வேலைக்கு அந்தவூர் நம்பி இருந்தது அவள் அப்பாவைத்தான்.

வெரச பயமக்க ஊரு இல்ல. ஈரகொல வத்திப்போன மண்ணு தாயி இது ! மக்க மனுச நல்லத்துக்கும் அல்லத்துக்கும் அஞ்சி நடந்த காலத்துல எம்பூட்டு தண்ணி கெடந்த ஊரு இது ! கம்மா வத்திச்சின்னு ஒரு சேதி உண்டா ! எங்க ஐயா சொல்லுவாக ... மாராளம் தோண்டிட்டாப்புல ஊத்து அப்பிடியே குத்தாலம் அருவி கணக்கா கொட்டுமாமுல்ல ! சுத்தம் கொறஞ்சி சத்தம் கூடிடுச்சி ! ஆத்தா காதோட சேத்துக் கண்ணயும் மூடிக்கிட்டா ... அவ நெஞ்சு நெறஞ்சா பஞ்சம் அந்தாக்குல பறந்திடுமில்ல ... ஹூம் இனி எங்கிட்டு ... நிக்குன்னும் போருன்னும் பாறய வெடி வெச்சிப் பொளந்து மோட்டாரு போட்டு ... ஒண்ணும் சொகமில்ல ... எதுக்கால வார காலத்த நெனச்சா பயந்து வருது ...!"

அவர் புலம்பினாலும் அவர் தொழில் என்னவோ ஊற்று தேடி போர் இறக்குவதுதான். ஆனால் அந்தத் தொழிலிலும் வெகு சுத்தம். பொதுப்பணித் துறைக்கு அல்லது வேளாண்மைத் துறைக்கு மண்ணுக்குள் இருக்கும் ஊற்றைத் தேடித்தரவென்று பணம் கட்டி மனு அனுப்பிவிட்டு அதைத் தவிர ஆயிரத்துக்கு மேல் கணக்கில் வராமல் செலவழித்துவிட்டு, "செத்த வெரச வாரீயளா பயிறு ஒணந்து நிக்கி ..." என்று காத்திருக்கச் சிலர் தயார் என்றாலும் பலர் கிணறு எடுக்கவோ போர் எடுக்கவோ அவள் தந்தையைத்தான் பெரிதும் நம்பி இருந்தனர். கவர்மெண்டுகாரர்கள் வந்து

www.tamilarangam.net



தேடிக் கொடுத்த இடத்தில் பத்தில் ஒன்றில் மட்டும் பழுதில்லாமல் தண்ணீர் கிடைத்தால் அவள் அப்பா குறித்துக் கொடுத்த இடத்தில் பத்தில் எட்டில் பஞ்சம் இல்லாமல் தண்ணீர் கிடைத்தது.

"ஏமய்யா ! நெல்லையப்பர் மயேன் சுப்புராசுவா? இந்தச் செங்கேணிக் கடவுக்காரனைப் பத்தித் தெரியுமில்லே ! ஊத்து பாத்துக் குடுத்தாக்குல நம்ம சோலிய முடிச்சி, பத்தி விட்டுறதுக்கு ஏலாது ... ரிக்கு வெச்சி நாந்தேன் போர் எறக்குவேன். அதுக்கு ஒப்புனா வாரேன். தண்ணி எடுத்துக் குடுக்கேன் !" என்று கறாராகப் பேசிக் கொள்வார்.

காலை இளம் வெய்யில் ஏறு முன் நீராடி, விபூதிப்பட்டையோடு ஈரவேட்டியைக் களையாமல் கையில் கவைக்குச்சியைப் பிடித்துக் கண்மூடி, வாய் இறைவன் நாமங்களை முணுமுணுக்கப் பக்திப் பழமாய் அவர் கிணறு தோண்ட வேண்டிய நிலப்பகுதியில் குறுக்கும் நெடுக்குமாய் நடப்பார். நீரூற்று இருக்கும் இடம் வந்தவுடனேயே அவர் உடல் துள்ளும். கால்கள் பின்னி முறுக்கிக் கொள்ளும். கண்ணில் நீர் அருவியாய் இறங்கும்.

"ஐயா சுப்புராசு !... ஒம்ம அப்பன் ஆத்தால அம்பா வெச்சிருக்கிய போல. அவிய பண்ண புண்ணியம் ... ஒமக்கு பாலாட்டம் தண்ணி கெடக்கப் போகுது அப்பேன் ! மண்ணுக்குள்ள எம்புட்டு ஊத்து கெடக்குதுவே ... அம்புட்டும் தின்னவேலி காந்தியம்மா அருளால என் கண்ணுக்குள்ள இப்பமே தெரியுதில்ல" என்று தலைச்சனைப் பெற்ற தந்தை போல் சந்தோஷத்தில் குதிப்பார் அவர்.

ஒரு சமயம் அவர் கணிப்பு பொய்த்துவிட்டால் அவர் அடையும் துயரம் சொல்லி மாளாது. அவர் இழப்பைக் காட்டிலும் நிலத்துக்காரன் இழப்பு அவரைத் துவட்டி எடுத்துவிடும்.

"ஐயா செவசுத் தம்பி ... ஆத்தா கைய விரிச்சிட்டா ! உம்ம மண்டைல கொளுப்பு உண்டன கூடிப்பேச்சுலேன்னு ஓங்கித் தட்டிட்டா. அம்புட்டு பாடும் பாளாப் போச்சே ! பாவம் எளந்தாரிப் புள்ள ! பம்புசெட்டு போட்டுத் தண்ணியப் பாச்சி நெல்லறுத்துடலாம்னு கெனா கெண்டிருப்பீரு ... ஏலாது போச்சுதே ! நமக்கும் மனசு தாங்கலாதான் ஆயிடிச்சி ... செவசுத் தம்பி ... இந்தப் பூட்டுக்குக் கேவுரு, சோளம்னு விதையும் ... மானம் கண் தொறக்கும். செங்கேணிக் கடவு சிந்தாமணி ஆத்தா பூச்சொரிக்குப் பொறவு மூணு நா ஒரு பொளுது வெரதம் இருந்து வேற வெக்குல ஒமக்கு இந்தச் செங்கேணிக் கடவுகாரனே தண்ணி எடுத்துக் கொடுக்கேன். மனசு

www.tamilarangam.net



தவுதாயப்படாதீரு" என்று சொல்லி அட்வான்சாக வாங்கிய பணத்தை பைசா பாக்கி இல்லாமல் எண்ணிக் கீழே வைத்தபோது, செவசு என்று சொல்லப்பட்ட அந்த சிவசுப்ரமணியன் விம்மி அழுதுவிட்டான், கையைப் பிசைந்தான். பெரியவுக பெரிய மனசு வெச்சி அடுத்த கொடைக்கி அச்சாரமா ... இந்தப் பணத்த ...!"

"ஆங் — பேசப்படாது ! பெமிலா போன சோலிக்கித் துட்டு வாங்கறது சரியான போக்கடாத்தனமில்ல ... பாவம்லே நீரு ... அடி மடில பொத்தியா வெச்சிருக்கீரு அள்ளிவிட ... வெவசாயம்தானே ! நெல்லுதான் இல்லேன்னு ஆயிப்போச்சே ! வூட்டுல தங்கச்சி ஒரு கொமரு வேற நிக்கி. துட்டக்கெட்டி வச்சிப் பளகுவே ! அந்தத் துட்டு மட்டும் இல்லாட்டி ஊருல ஒரு பய மக்கா உன் திக்குல திரும்பமாட்டேன்ங்குறேன்!" புத்திமதி சொல்லிக் கொண்டே அவர் சாமான் சட்டுக்களைக் கட்ட, அந்த சிவசுத் தம்பி அவர் காலடியில் கிடந்தான்.

"எளுந்திரி தம்பி ... அட எளுந்திரிங்கேன் ... ஆங் பணம் என்ன தம்பி பணம். மனிசன் மனிசனா இருக்கோணும். செங்கேணிக் கடவுக்காரன் ஊத்துப் போட்டுக் கொடுத்தான், தண்ணி வத்தாம கெடக்குன்னு காலத்துக்கும் சொல்லோனுமில்ல. அம்புட்டுத்தேன் !" அவர் கிளம்பியே விட்டார். யதார்த்தத்துக்கு ஒட்டாத அந்த ஈரமனம் சிவசுவைச் சிறிது மிரளத்தான் வைத்தது. அதான் மக்க அம்பூட்டும் இவுகளையே கொண்டாடுறாக என்று நினைத்துக் கொண்டான்.

ஆனால் அந்தக் கருணை உள்ளம் அவள் விஷயத்தில் உள்ளூர் மாப்பிள்ளை என்ற ஒரே காரணத்திற்காகக் கடினப்பட்டுப் பாறையாகிப் போனது எப்படி? இருக்கும் இடத்தை மறந்து அவள் அடிவயிற்றிலிருந்து ஒரு விம்மல் வெடித்து வந்தது.

"ஏ கடக்குட்டிப் புள்ள ! உம்ம ரோசனப்படி மேலவளவுக் கடக்காரவுக வீட்டுத் தம்பிக்கு நேத்து பஞ்சாயத்து ஆபீசுல வெச்சி ஒம்மள பேசி முடிச்சிப்புட்டோம் ... என்னா பச்சபுள்ள கணக்கா முளிக்கே ! அதேன் ! கொண்டு வித்த செட்டி இருக்காக இல்ல. அவுக வூட்டுக்கு அடுத்த வளவுதான் ! மாப்பிள்ளைக்குக் காலேசு வாசிப்பு இருக்காக்கும் !... அண்ணாச்சியோடு கூட்டாக் கடை ஏலம் எடுத்து யாவாரம் பாக்குறாக" அவள் தொண்டையில் துக்கப் பந்து உருண்டுவந்து அடைக்க, விழுங்க முடியாது விக்கித்துப் போனாள்.

www.tamilarangam.net



"அப்பச்சி ... அவுக ... தண்ணி விக்கிறவுக ..."

"ஆங் ... அவுகளேதான். வர்ர வெசாள கௌமிக்கி நம்ம வூட்டுக் கொமரப் பாக்க வாராக", மனைவியிடம் திரும்பி "ஏட்டி ஆங்கங் கெட்ட கூவ .. அரிசி மூட கணக்கா நட்டமையா குத்த வெச்சிக் கெடக்காமப் புள்ளக்கிக் கண்ணுக்கு லெச்சனமா அலங்காரம் செய்யோணும் !" மனைவி தலையாட்ட மீசையை முறுக்கிக் கொண்டு கிளம்பிப் போனார் தந்தை.

நிகழ் காலத்தில் பின்னாலிருந்து ஒரு மெல்லிய விசில் சப்தம் கேட்க, அதைத் தொடர்ந்து சைக்கிளில் ஒரு போலீஸ்காரர். சட்டத்தின் துணை கிடைத்தாற்போல் அவள் நெஞ்சு நிறைய நம்பிக்கை பிறந்தது.

"ஏமலே மெட்ராசு ... தொளில் எப்பிடி நடக்கி...?

"ஒன்னும் சொகமில்ல அண்ணாத்த ! கைக்கும் வாய்க்கும் ஏதோ போய்கினுகீது ... ஒங்க ஆளுகதான் துட்ட கண்ணுல காட்டாம தண்ணி காட்டுறீங்கல ...!"

அட ஒப்பந் தன்னான ! என்னவே வாயி தின்னவேலி டவுன் ஆல் ரோடு கணக்குல நீளுது. போலீசு பொரடியில போட்டாத் தெரியுமில்ல ... சவட்டிப் புடுவோம் சவட்டி ! சாக்ரத ! நேத்திக்கு டிபி.க்கு சரக்கு அனுப்பிட்டு துட்டு கேட்டீராமே ! இப்பமே உம்மள நியூசென்ஸ் கேசுல உள்ள தள்ளீரவா !" "ஐயோ சாமி ! காலுல உயிரேன். அண்ணாத்த தயவுலதான் தகிரியமா தொயில் பண்ணுறேன்!" சென்னை விரசமாக இளிக்க, "அங்க அந்த நெனப்பு மனசுல நல்லாப் பதியோணும்". பொறுக்கியிடம் சிகரெட் வாங்கி போலீஸ் பற்ற வைத்துப் புகையாய் ஊத, அதே புகையில் அவர் நம்பிக்கையும் கரைந்து போனது.

பகலில் உட்கார இடம் கிடைக்காத பேருந்து நிலைய சிமெண்ட் பெஞ்சுகள் இப்போது சுமைகள் விலகிய சுகத்தில், செல்லச் சோம்பலில் வெறுமையாக உறங்கின. அற்ற குளத்து அறுநீர்ப் பறவை போல் பகல் வேஷங்கள் பறந்துவிட, அவளும் பிச்சைக்கார இணையும் சொறிநாயும் பரட்டைத்தலைப் பொறுக்கியும் வெற்றுக் குளத்தைக் காக்கும் வேரூன்றிய தாமரையும் ஆம்பலும் போவாயின.

இடது கை மணிக்கட்டு இரவு மணி இரண்டு எனக்காட்ட "பொட்டப் புள்ளிக்குப் புத்தி பொடநிலேங்குறது செரிதாம் போல, அடுப்புக்குத் தப்பித் தீயில வுளுந்த கணக்கா சகதியிலே சிக்கியில்ல போயிட்டேன் இந்தச்

www.tamilarangam.net



சவுத்து மூதி" என்று மனதிற்குள் புலம்பினாள் அவள். சிந்தனை சிறகடித்தது.

"தே – அடியே ... வெளங்கா" மூதி – அவள் தாயின் பெயரை அவள் தந்தை உபயோகித்ததே இல்லை. புள்ள வீரகருப்பு எல்ல தாண்டி டவுனுக்குப் போயி காலேசுல வாசிச்சவுக இல்ல ... அதான் புத்தி குறுக்கால சோலி பாக்குது ... அப்பன் பல்லு மேல நாக்குப் போட்டுப் பேச்சவுட்டு வந்தபொறவு சாராயம் விக்கறவுக, சந்தனம் விக்குறவுகன்னு வெவகாரம் பண்ணுதியளோ! உள்ளூரு மாப்புள்ள பாருலமைய்யான்னு இதோ இங்கன வெச்சித்தானே சொன்னீக வெளங்காத பய புள்ள ... ரூம்புக்குள்ளயே அடச்சி வெய்யி – வளவ வுட்டு கொமரு எறங்கிப்புடட்டும் ... நமக்கு ஒத்த வாரியலு காணாது சொல்லிப்பிட்டேன்?" என்று மகளையும் மனைவியையும் எச்சரித்துவிட்டு அவர் போனதும் அவளுக்கு அந்த வீடே பாலைவனமாகிப் போனது.

அன்பே உருவான தந்தை வில்லனாகிப் போன விவரத்தையும் அவர் பேச்சே விளக்கியது. "நம்ம புள்ள காலேசு படிப்பு படிச்சிட்டாப்புல. அதுக்கு தக்கனதானே பாக்கோணும். சாராயக் கடக்காரவுகன்னா ஆவாதுன்னா எப்பிடி? அவுக குடிக்காங்களா சொல்லுக. பேசப்படாது. இன்னித் தேதில ஒரு சொட்டு வாயிலே வுட்டது இல்ல – அல்ல அங்கிட்டு இங்கிட்டு அப்பிடி இப்பிடின்னு ஏதாவது சொல்லுக ! சாதிப்போம் ! அது நமக்கும் ஆவாது இல்ல காசு பணம் உண்டன கெடக்கு. சும்மா சாராயம் சாராயம்னு பொலம்புனா... திருப்பாச்சி வீச்சருவாதேன் பேசும் ... செங்கேணிக் கடவுக்காரன் தல தரயில உருளுமில்ல!"

இலக்கு மட்டுமல்ல, அதை அடையும் பாதையும் தூய்மையானதாக இருக்க வேண்டும் என்று காந்தி சொல்லியிருக்கிறார், ஆகையால் வாழ்வது மட்டுமல்ல, பொருளீட்டும் வழியிலும் தூய்மை தேவை. இதை அந்த முரட்டு அப்பனுக்கு யார் புரிய வைக்க முடியும்?

"சாராயங்கற சால்சாப்பு தவிர வேறு ஏதாச்சும் காலேசு தொட்டு தொடுப்புன்னு காத்துவாக்குல காதுல வுளுந்துச்சாங்காட்டி ... ரெண்டு கூறா வகுந்து கம்மாவுல பொதச்சிக் கருவேலம் நாட்டிப்புடுவேம் ... செங்கேணிக் கடவுக்காரன் வள்வுல இந்தப் பாளாய்போன காதல் ஊதலுன்னா அம்புட்டுபேரும் அவுட்டுதேன் ..." உறுமலின் உக்கிரத்திலும் கண்கள் காட்டிய கோவைப்பழச் சிவப்பிலும் அவள் உடம்பின் உதிரம் உறைந்து சில்லிட்டது. சமீபத்தில் அவளுடைய ஒன்றுவிட்ட சித்தப்பன்

www.tamilarangam.net



வீட்டில் இதே 'வெட்டிப் பொதச்சி மூச்சு பறியாத' நாடகம் நடந்தேறியது உண்டு. அது அந்த மண்ணின் வளமை. முடித்து வைத்தது முடிய வராவிட்டால், முடிச்சுப்போட நூலே இல்லாமல் அறுத்துப் பறக்கவிட்டுவிட்டு அதையும் தலைமுறை தலைமுறையாகப் பேசிப் பெருமைப்படும் பேராவல்.

அன்று மாலை ஒட்டுத் திண்ணையில் ஒதுங்கி உட்கார்ந்திருந்த போது தூரத்திலிருந்து 'சடபட சட்டுச் சடபட' என்று ஓசை நெருங்கி வரத் துள்ளி இருட்டில் ஒதுங்கினாள் அவள். அது சாராயக் காசின் ஒலி. ஆடம்பர ஆரவாரம் அதற்குக் கூடப்பிறந்தது.

அவன் அவள் வீட்டுத் திண்ணையைத் தாண்டும்போது சடபட சத்தம் குறைந்து அவன் தலை திரும்ப பார்வை அலைந்தது. ரிக்கார்ட் டான்ஸ்காரியின் பகட்டு அலங்காரம் தோற்றுப்போவதுபோல் வண்டி பளபளவென்று எதை எதையோ மாட்டிக்கொண்டு ஒட்டாத கோலத்தில் ...

அவள் துணிந்துவிட்டாள். இந்தச் சாராயச் சங்கடம் தீர அவள் சென்னைக்குச் சென்று தோழியின் உதவியைத் தேடுவதுதான் வழி. அன்று இரவு அவள் பயணம் தொடங்கியது. முகத்தில் வந்து அப்பிய இருட்டை இடை இடையே மினுக்கிட்ட பஞ்சாயத்து பல்புகள் அடித்து விரட்டாமல் ஆரத் தழுவி இருக்க அங்கெல்லாம் அவள் வரவை எதிர்பார்த்து யாரோ காத்திருப்பதுபோல் அவள் அரண்டு போனாள். சிக்னல் கிடைக்கப்பெற்றுச் சீறிப் பாயும் நெல்லை எக்ஸ்பிரஸ் போல் அதிர்ந்து அடித்துக் கொள்ளும் இதயத்தையும் அமிலப் பிரவாகமாகிப் போன அடிவயிற்றையும் பிடித்துக்கொண்டு அவள் முன்னேறி வருவதற்குள் அப்பப்பா ... பஸ் நிலையத்தை வந்து அடைந்து அரையிருட்டில் ஒளிந்து கொள்ள நினைத்தால் ... ஆங்காங்கே ஆக்டோபஸ் கால்களாய் ஆபத்துகள்.

சிறிது தூரத்தில் முப்பதடி உயரத்தில் ஒருவன் ஒரு விளம்பரப் பலகை எழுதிக் கொண்டிருந்தான். மகாலட்சுமி சீயக்காய்த் தூள். ஊர் சிறிதாக இருந்தாலும் நேஷனல் ஹைவே ஆகையால் அப்படிப்பட்ட ஹோடிங்குகள் பஸ் நிலையத்தை ஒட்டினாற்போல் பல இருந்தன.

இந்தப் பொறுக்கி அத்துமீறினால் 'ஏ பெயிண்டுகாரவுகளே'ன்னு அந்த மனிசனை ஒத்தாசக்கி அளைக்கலாமா ! ஒசரத்துல இருந்து இறங்குனபொறவு அந்த மனிசனும் இந்தப் பொறுக்கிக்குச் சேக்காளியா இருந்தா ... பாப்பம். நாமே சமாளிப்போம். இருவது வருசப்படிப்பு இதுக்குப் புரோசனப் படாட்டா எப்பிடி ... இங்கிட்டு வரட்டும் மவனே ... கொதவளய

www.tamilarangam.net



புடிக்கேன்! எம்முட்டு ஒரு வீச்சு தாங்குவியாலே ! பொசக்கெட்ட நாயி மனதிற்குள் கறுவினாள் அவள். 'பம்முதியலோ ... இங்கிட்டு வாரும் பாத்துருவோம்'

பொறுக்கியின் கண்களுக்கு வியாபாரப் பொருளாகவும் பிச்சைக்காரன் கண்களுக்கு விடைதெரியாத பிரச்சனையாகவும் தோன்றிய அவள் அழகு முகம் ஓவியன் விரல்களில் மகாலட்சுமியாக மாறிக்கொண்டு இருந்தது. அந்த போர்ட் அழிபடும்வரை அவள் அங்கு மகாலட்சுமியாய் நிற்பாள்.

பொறுக்கி அவளை மீண்டும் நெருங்கி விட்டான். அப்போது ஒரு காலி பெயிண்ட் டப்பா பெயிண்டர் காலடியிலிருந்து உருண்டு வந்து பொறுக்கியின் காலடியில் விழுந்து கடகடவென்று ஒலி எழுப்பி இரவை உலுக்கி எடுத்தது.

பெயிண்டருக்கு வீட்டில் தனியாக விட்டு வந்திருக்கும் பாதுகாப்பற்ற மனைவியின் நினைவு வந்துவிட்டது போலும் ! வெளியிலிருந்து ஆதரவு கொடுக்கும்அரசியல்வாதிகளைப் போல் அவளுக்கு மறைமுக ஆதரவு தெரிவித்து பொறுக்கியின் வேகத்தைத் தடை செய்தான்.

"அண்ணாச்சி கோவிச்சுக்காதிய – கை தவறிடுச்சி" பெயிண்டரை ஒரே முறைப்பில் ஓரம் கட்டிவிட்டு ரவுடி முன்னேறினான்.

"தா ! பொண்ணு ! எத்தினி தபா கூப்புடுறேன். நீ இப்பம் வராங்காட்டி முடிய புட்சி இஸ்துகினு பூடுவேன். இங்க அல்லாம் நம்மாளு... இன்னா கூச்ச போட்டாலும் ஒரு பேமானி வரமாட்டான் என்று பெயிண்டரைப் பார்த்து உறுமிவிட்டு, அவள் கைகளைப் பிடிக்க எத்தனித்தான். அடுத்த வினாடி கூவென்று ஒரு மிருகக் கூச்சல் அவன் தொண்டையிலிருந்து புறப்பட, அந்த தொத்தல் மனித உருவம் நான்கடி பின்னால் போய் சுருண்டு விழுந்தது.

அந்த ஒலியில் உறங்கிய நாய் விழித்து ஒன்றும் புரியாது 'வள் வள்' என்று குரைத்து, விழுந்தவன் மேல் பாய்ந்து குதற, ஆழ்ந்த தூக்கத்திலிருந்து துடித்துப் புரண்ட பிச்சைக்காரி 'குய்யோ முறையோ' வென்று அவள் ராஜ்யத்துக் கஜானாவில் யாரோ கை வைத்துவிட்டதைப் போல் ஓலமிட்டாள்.

மூக்கால் மூச்சை இழுத்து நெஞ்சை நிரப்பிக் கொண்டு கைகளில்

www.tamilarangam.net



பலம் கூட்டி மார்புக்குக் குறுக்காக இரண்டு கைகளையும் கத்திரிபோல் பிடித்துத் தம் கட்டி ஒரே எம்பில் காற்றில் எழும்பி இரண்டு கைகளையும் பொறுக்கியின் தோள் மேல் பலம் கொண்டமட்டும் இறக்கியதுமல்லாது வலது முழங்காலை மடக்கி 'அவன் அடிவயிற்றில் ஓங்கி உதைக்க' அந்தப் பொறுக்கி வலி பொறுக்கமுடியாது துடித்து விழுந்ததுதான் இந்தக் களேபரத்திற்குக் காரணம்.

பஸ் நிலைய சரித்திரத்திலேயே அதுவரை நடைபெறாத அதிசயம் அரங்கேற, பிச்சைக்காரனும் பெயிண்டரும் பதறி அடித்து ஓடி வந்தனர். அவர்களைக் குப்பையாகக் கிடந்த பொறுக்கியின் உருவம் மருட்டியது. "வேணும்ல ஓமக்கு" பெயிண்டர் முணுமுணுத்தான்.

இருளிலிருந்து "வெல்டன் சிஸ்டர் !" என்று கைத்தட்டிப் பாராட்டும் ஒலி எழத் திடுக்கிட்டுத் திரும்பினாள் அவள்.

"பெயிண்ட் டப்பா விழுன பொழுதிலிருந்தே நான் நோக்கிட்டு ... உதவிக்கு வர நேரம் கண்டிருந்தபோது சிஸ்டர் ஆயாள சவட்டிப் போட்டு" வந்தவன் பேச்சில் மலையாள மணம் பூரணமாக இருந்தது.

"கடைசி பஸ் தவறிட்டு ... கொக்கிரகுளம் போகோணும். ஒரு சினிமே பார்த்துவந்து தாமசிக்க நெனச்சு. இவிட வருனபிறகு அம்மைக்கு நேர்ந்தது புரிஞ்சி போயி ... நாயிண்ட மகன் . நார் நாரா கிழிச்சு..." முனகிக் கொண்டே எழுந்து அவர்கள் பக்கம் கூட திரும்பாது நடந்த பொறுக்கியின் உருவத்தைப் பார்த்து அவன் நிறுத்தினான்.

அவன் ஒரு கேரள கிராமத்து இளைஞன். "படிப்பு முடிஞ்சி பத்து கொல்லம் ஆயி போயி .. போன வருசம் கொக்கிரகுளம் போஸ்ட் ஆபிஸில் வேலையாயி. நம்மட சிஸ்டர் கல்யாணம் கழிஞ்சிட்டு வரணு ... இன்னும் தமிழ் சரியாயிட்டு வரல்லா ...!"

உடம்பிலும் மனதிலும் தைரியம் பரவ புத்தகக் கல்வி கற்ற ஒருவனைக் கண்டதும் அவள் தெளிந்துவிட்டாள் யாரிடமாவது கொட்டி அழ வேண்டிய கட்டாயம் அடக்கி வைத்திருந்த அவள் மனதிற்கு ஏற்பட்டுவிட, ஆதியோடு அந்தம் அவனிடம் ஒப்புவித்தாள். காற்றுக்கும் கடலுக்கும் மட்டுமல்ல, அடர்த்தி மிகுந்து அடங்காது போன துக்கத்திற்கும்தான் மூடி இல்லை. சம்பந்தமே இல்லாத அந்த இருவரும் மனதளவில் ஒருவர் கொம்பும் ஒருவர் கொடியுமாயினர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவள் சொன்ன கதையைக் கேட்டு அவன் துக்கப்பட்டான். ஆனால் மாப்பிள்ளை சாராய வியாபாரி என்பதை அவனால் ஏற்க முடியவில்லை. ஏனென்றால் அவன் வாழ்ந்த பகுதியில் தண்ணீர், தண்ணீர்பட்ட பாடுதான்.

மணி மூன்றரையானது. அகலமான கேரியர் கட்டிய சைக்கிள்காரர்கள் சிலர் பேருந்து நிலையத்திற்குள் வர, அவர்களைத் தொடர்ந்து வந்த வேன் ஒன்று நாளேடு கட்டுகளையும் இதழ் கட்டுகளையும் தள்ளிவிட்டுப் பறந்தது. வந்தவர்கள் அவைகளை விரைந்து அடுக்க, அதில் ஒருவனின் பார்வை அவள்மீது கூர்மையாகப் படிய அவன் அடுத்தவினாடி சைக்கிளில் ஏறிப் பறந்தான்.

சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டு இருந்தவளுக்குத் திடீரென்று காதுகள் விடைத்தன. 'சடசட சட்டுச்சட' வென அந்தப் பழகிய மோட்டார் சைக்கிள் ஒலி இங்கு கேட்கக் காரணம்? அடுத்து வருவது என்ன டிரேக்டர் ஓசையா!

'யாரோ வெள்ளன காட்டு வேல பாக்கப் போறாவுக போல' என்று அவள் நினைப்பதற்குள் மோட்டார் சைக்கிளும் அதைத் தொடர்ந்து டிராக்டரும் பஸ் நிலையத்தினுள் நுழைந்து, தொப் தொப்பென்று மனிதர்கள் குதிக்க, உருட்டுக் கட்டையை ஓங்கிக் கொண்டு முன்னால் வந்த அவள் தந்தை ஆக்ரோஷத்தோடு "இந்தப் பொசக்கெட்ட ப்யதேன் நம்ம பொளப்பக் கெடுத்தவனா?" என்ற ஆங்காரக் கூச்சலோடு உருட்டுக் கட்டையை அந்தப் புதிய கேரள இளைஞன் தலையில் இறக்க அவன் முனகல் ஒலிகூட இல்லாது சாய்ந்தான்.

பழி ஓரிடம் இருக்க பாவம் அவன் தலையில் பலமாய் இறங்கி விட்டது. பிச்சைக்காரனும் பெயிண்டரும் விழி பிதுங்க மலைத்து நின்றனர்.

ஒரு வருடம் கழித்து ஆஸ்பத்திரியில் தலைக்குத் தையல்போட்டு அவளுடைய அன்பான கவனிப்பில் இரண்டு மாதம் கோமாவில் கிடந்து மீண்ட அந்த கேரளத்து இளைஞனையே அவள் மணந்து கொண்டாள். தன் தவற்றைச் சரிசெய்ய இறைவனாகக் காட்டிய பிராயச்சித்தமாக நினைத்து அவள் தந்தையும் அதற்குச் சம்மதித்தார்.

இதோ உள்ளறையில் அவன் பிராந்திப் பாட்டிலோடு குலாவுகிறான். சாராயக்கடை நடத்தியும் சொட்டுகூட குடிக்காத பழைய மாப்பிள்ளையையும் இவனையும் அவளால் ஒப்பிட்டுப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

www.tamilarangam.net



தன்னால் பிறர் அறிவு மயங்கினாலும் தான் தரம் இழந்துவிடாது நிலைத்து நின்ற பழையவனை அவள் உதறியது சரியா? குடிப்பது தவறில்லை என்று வெளிப்படையாக வாதாடித் தனக்காகச் சாவின் விளிம்பைத் தொட்டு மீண்டவனை ஏற்றது தவறா?

காந்தியை நடுவராகக் கொண்டு பட்டிமன்றம் நடத்தலாமா? அல்லது சரியான விடை தெரிந்தும் சொல்லாவிட்டால் மண்டை சுக்கு நூறாகப் பிளக்காவிட்டாலும் உங்கள் நிம்மதி என்ற வேதாளம் முருங்கை மரம் ஏறிவிடும் என்று வாசகர்களை அச்சுறுத்தலாமா?

***

*தண்டு வடத்தில் ஏற்பட்ட பாதிப்பிற்குப் பிள்ளையார் பட்டியில் ஒரு நாட்டு வைத்தியரிடம் தங்கி மருத்துவம் பார்த்துக் கொண்டபோது அதே காரணத்திற்காக அங்கு வந்து தங்கியிருந்த திருநெல்வேலி சீமையைச் சேர்ந்த ஒரு குடும்பம் நெருக்கமாயிற்று.*

*எங்கள் இரண்டு குடும்பத்தின் கதைகளும் ஊர்நடப்புகளும் ஊடும் பாவுமாக ஊடுருவி அழகான பட்டுச் சேலையாய் பின்னப்பட்டபோது அதில் நெய்யப்பட்ட சில சரிகைப் பூக்களில் இது திருநெல்வேலிப் பூ. பாஷையும் அப்போதுதான் பழக்கமாயிற்று அழகான தமிழ் வேர்ச் சொற்கள் விரவி நிற்கும் பாஷை.*

*அத்தோடு பெண்கள் மனதாலும் உடலாலும் வலியவராய் இருக்க வேண்டும் என்ற பாரதியின் நோக்கே என் நோக்கும். காந்தி கண்ட எளிய நேர்மையான வழிகள் வாழ்வை சுளுவாக்கும் என்பது என் கொள்கை.*

*கப்பும் கிளையுமாய்ப் படர்ந்து பரந்திருந்தாலும் அரசமரத்தின் வேர் மண்ணுக்கடியில் கண்ணுக்குத் தெரியாமல்தான். பெண்களின் குணங்கள், பொதுவாக சில விலக்குகள் தவிர மரங்களின் வேர்தூண். ஆண்களின் ஆடம்பரம் அவர்களில் சிலரின் ஆடம்பர ஆணவம் அதன் மேல்தான் நிற்கிறது என்பது எனது தனிப்பட்ட அபிப்ராயம். அதற்கு எடுத்துக்காட்டு தந்தை என்ற மரம். என்னுடைய அவள் வேர்.*

*'பழி ஓரிடம்' ... என்று ஆனபிறகு பெண்களுக்கே உரிய மனப்போராட்டம் அவளை பலவீனப்படுத்திவிட்டது.*

*சில பிரச்சனைகளுக்குத் தீர்வு இல்லை. அது எதிர்காலம் போல் நமக்குத் தெரியாமல் இருப்பதே நல்லதும்கூட . . .!*

– புனிதவல்லி

88/3, ராம்ஸ் அபார்ட்மெண்ட்,
காந்திநகர், அடையாறு,
சென்னை – 600 022.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மாயாவின் சிநேகிதம்

நிறைமாதக் கர்ப்பிணி போல் பஸ் மெதுவாக நகர்ந்து கொண்டிருந்தது. ஜன்னல் ஓரமாய் மாயா உட்கார்ந்திருந்தாள். காற்று மெதுவாய் முகத்தில் மோதிற்று. மாயா நிதானமாய்ச் சுவாசித்தாள். காலை நேரமாதலால் காற்றில் இன்னும் அசுத்தம் கலந்திருக்கவில்லை. எல்லாம் மாசு படிந்து, அசுத்தமடைந்து போய்க் கிடக்கிறது மனிதனின் மனம்போல்.

மாயா முந்தின தினம் நடந்த சண்டையை நினைத்துக் கொண்டாள். வீடு என்பது இதம் தருகிற இடமாக, புரிந்து கொள்கிற மனிதர்களாக இருக்க வேண்டும். அலுத்துச் சலித்துப் போகையில் ஆறுதல்படுத்துகிற இடமாக இருக்க வேண்டும். ஆனால் எத்தனை வீடுகள் மனதுக்கு இதம் தருகின்றன? மனதைப் புரிந்து கொள்கின்றன ! நேற்று வீட்டில் பிரச்சனை நடந்ததிலிருந்து மாயாவிற்குச் சூர்யாவைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. எத்தனை பிரச்சனை, கஷ்டம் என்றாலும் அவனைப் பார்த்துப் பேசினால் மனதுக்கு தெளிவு கிடைத்து விடும். தலைபோகிற விஷயம் என்றாலும் ஒரு புன்னகையோடுதான் அதனை எதிர்கொள்வான்.

சூர்யாவின் முகத்தில் அந்தப் புன்னகை நிரந்தரமாய் இருக்கும். எவ்வளவு உன்னதமான சிநேகிதன் ! ஆணுக்கும் பெண்ணுக்குமான தோழமை உணர்வை முதலில் புரியவைத்தவன்.

சூர்யாவுக்கும் மாயாவுக்கும் ஒரே அலுவலகத்தில் வேலை. சாதாரணப் பழக்கம்தான். பின்னால் அதுவே இறுகிக் கொண்ட நட்பானது. மாயாவின் உணர்வுகளைப் புரிந்து கொண்டவனாய்ச் சூர்யா இருந்தான். ஆண், பெண் சிநேகத்தை எப்போது இந்தச் சமூகம் சரியாய்ப் புரிந்து கொண்டது? அலுவலகம் மொத்தமும் இருவரின் நட்பையும் கேவலப்படுத்திற்று. ஆனாலும், எப்போதும், எதையாவது பேசும் இச் சமூகத்திற்காய்த் தம் நட்பைத் தொலைத்துக் கொள்ள இருவருமே தயாராக இல்லை. நட்பு எப்போதும் போல் வாசனை பரப்பிற்று.

ஆனால் நட்பின் வாசனை மாயாவின் வீட்டுக்குள் வீசிய பின்புதான் புரிதல் இல்லாமல் போயிற்று.

மாயா ஜன்னல் வழியே மெதுவாய்க் கடந்து போகும் மரங்களையும் வயல்களையும் புதிதாய்ப் பார்ப்பது போல் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

www.tamilarangam.net



வேலைக்குச் சேர்ந்து நான்கு வருஷம் இருக்குமா? இருக்கும். இந்த நான்கு வருடத்தில் மரங்களும் வயல்களும் பார்க்கப் பார்க்க அலுக்கவேயில்லை. இயற்கை எப்போதும் அலுப்பதில்லை. அது அதன் இயல்பில் இருந்து எப்போதும் மாறுவதில்லை. மாறிக் கொண்டே இருக்கிற மனிதர்கள் அலுத்து விடுகிறார்கள்.

மாயாவிற்கு மறுபடியும் நேற்று வீட்டில் நடந்த சண்டை நினைவிற்கு வந்தது. அண்ணாதான் சண்டைக்கான முதல் படியை எடுத்து வைத்தவன். மாயா வீட்டில் நுழைந்ததும் நுழையாததுமாய் அவன்தான் ஆரம்பித்தான்.

'மகாராணி, இன்னைக்கு ஆபிஸ் முடிந்து எங்க போயிட்டு வர்றீங்க?'

மாயா அமைதியாய் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். எள்ளும் கொள்ளும் வெடித்துக் கொண்டிருந்தது. அப்பாவை பார்த்தாள். கோபத்தில் முகம் ஜிவ்வென்றிருந்த அண்ணி தூங்குகிற குழந்தையை இழுத்து, இழுத்து ஆட்டிக் கொண்டிருந்தாள். அம்மா எப்போதும் போல் சமையலறையில்.

'அவன்தான் கேட்டுக்கிட்டே இருக்கான்ல்ல வாய மூடிக்கிட்டிருந்தா என்ன அர்த்தம்?' – இது அப்பா விஜயராகவன்.

மாயாவிற்குப் புரிந்து போனது. சூர்யாவிற்குத் தலைவலி என்று காபி குடிக்கப் போனதுதான் பிரச்சனை. பேருந்து நிறுத்தத்திற்குச் சற்றுத் தள்ளி இருக்கிற டீ கடையில் இருவரும் காபி சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது மாயாவின் அண்ணன் அவ் வழியே கடந்து போனான். வண்டியை நிறுத்தாமல் ஒருமுறை, முறைத்துவிட்டுப் போனான். மாயா அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் அவன் வந்தவுடன் வீட்டில் கர்ம சிரத்தையாய்ச் சொல்லி முடித்திருக்கிறான்.

'வாயத் திறக்கிறாளா பாருங்கப்பா. திமிரு சம்பாதிக்கிறோம்ன்ற திமிரு.'

'அதாண்டா சரவணா, நம்மள யாரு கேள்வி கேக்குறதுன்ற திமிரு.'

'இப்ப என்ன நடந்துச்சுன்னு எல்லாரும் குற்றவாளியக் கேக்குற மாதிரி கேக்குறீங்க?'

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'என்ன நடந்துச்சா? ஆபிஸ் விட்டா நேரா வீட்டுக்கு வர வேண்டியதுதானே. எவனோடயோ நின்னு சிரித்துப் பேசிக்கிட்டுக் காபி என்ன வேண்டிக்கிடக்கு காபி !'

'சூர்யா என்னோட சிநேகிதன். அவனோட நின்னு ஒரு காபி சாப்பிட்டது தப்பா?'

'பாத்திங்களாப்பா தப்பான்னு நம்மளையே கேள்வி கேக்குறா?'

'சரவணனின் முகத்தில் தெரிந்த கோபத்தையும் வேகத்தையும் பார்த்து, அவனின் அறியாமையை நினைத்து மாயாவிற்கு அலுப்பாய் இருந்தது. இவனெல்லாம் படித்து, பெரிய உத்தியோகம் பார்த்து என்ன பிரயோஜனம்? ஒரு ஆணும் பெண்ணும் சிநேகிதர்களாக இருக்கமுடியும் என்கிற சிந்தனை இல்லாமலேயே வளர்ந்து விட்டிருக்கிறான் பாவம். தவறு இவன் மேல் மட்டுமில்லை. ஒட்டு மொத்த சமூகமும் இப்படித்தான்.

'ஒனக்கென்னடி ஆம்பளயோட சிநேகிதம் வேண்டிக்கிடக்கு? ஆபிஸ் போனோமா, வந்தோமான்னு இல்லாம, சிநேகிதமாம் சிநேகிதம் – அதுவும் ஆம்பளயோட, அப்பா எகிறினார்.

'நான் வேற என் பொறந்த வீட்டுல இவளுக்கு மாப்பிள்ள பாக்கச் சொல்லியிருக்கேன். இவ இப்பிடி இருந்தான்னா எவன் வருவான் தாலி கட்ட' – அண்ணி சமயம் பார்த்து அம்பினை எய்தாள்.

'எனக்கு மாப்பிள்ள பாருங்கன்னு நா ஒங்ககிட்ட சொன்னேனா. எனக்குத் தாலிகட்ட வருவானா, வரமாட்டானான்னு நீங்க ஒன்னும் கவலப்பட வேண்டாம் அண்ணி.'

'பாத்தீங்களா. என்ன பேச்சுப் பேசுறா? எனக்கென்ன நீ எக்கேடு கெட்டுப்போனா. ஏதோ நான் புகுந்தவீடாச்சே, நாளைக்கி யாரும் ஒரு பேச்சு பேசிடக்கூடாதுன்னு நெனைச்சேன்.'

'இதப் பாரு. இதுதான் முதலும் கடைசியும். இனிமே இந்த மாதிரி காபி சாப்பிட்டேன் பலகாரம் சாப்பிட்டேன்னு வந்து நின்ன, அப்புறம் நடக்கறதே வேற' – சரவணன் முடிவாய்ச் சொல்லிவிட்டு வெளியேறினான். இது அவன் வீடு. அப்பா தனியார் கம்பெனி ஒன்றில் வேலை பார்த்து ஓய்வு பெற்று விட்டார். சரவணனின் சாம்ராஜ்யம் இது.

www.tamilarangam.net



மாயா சாப்பிடாமலேயே படுத்துக் கொண்டாள். வயிறு பசித்தது. ஆனாலும் சாப்பிடும் மனநிலையில் அவள் இல்லை. அம்மாதான் கெஞ்சினாள்.

'ஒரு வயசுப் புள்ள. வயித்தக் காயப் போடாதடி. கொஞ்சமாவது சாப்பிட்டுப் படு.'

'மனசு நெறஞ்சு போய் இருக்கும்மா. ப்ச் பசிக்கல – விடு.'

'மாயா அந்தப் பையன நீ விரும்புறியா?

'அய்யோ, அம்மா – நீயும் புரியாமப் பேசாத. அவன் என்னோட சிநேகிதன். நல்ல சிநேகிதன். அவ்வளவுதான்,

அம்மா நீண்டதாய் ஒரு பெருமூச்சு விட்டாள். அவளுக்குப் புரிந்ததோ என்னவோ மாயாவை அதிகம் கேள்வி கேட்கவில்லை.

மாயா அலுவலகம் வந்து சேர்ந்தவுடன் சூர்யாவைத் தேடினாள். அவன் இன்னும் வரவில்லைபோலும். அவன் இருக்கை காலியாய் இருந்தது. அவன் எப்போதும் சரியான நேரத்திற்கு வந்துவிடுவான். காலதாமதம் என்பது அவனில் கிடையவே கிடையாது. சூர்யா அன்று லீவ் எடுத்துள்ளான் என்று பிறகுதான் புரிந்தது. என்ன திடீர் லீவ். நேற்றுகூட ஒன்றுமே சொல்லவில்லையே. உடம்பு ஏதும் சரியில்லையோ – இருக்காது. நேற்றுவரை நன்றாகத்தானே இருந்தான். ஒரு நாள் மட்டும்தான் விடுப்பு எடுத்திருந்தான். சரி நாளை பார்த்துக் கொள்வோம் என்று நினைத்தாள்.

கடற்கரை காற்று உப்புத் தன்மையோட வீசிக் கொண்டிருந்தது. எதையோ எதிர்பார்த்து, தேடி ஏமாற்றத்தோடு திரும்பி கொண்டிருந்தன அலைகள். ஆனாலும் தேடுதல் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது.

மாயா சூர்யாவின் முகத்தைப் பார்த்தாள். எப்போதும் போல் புன்னகை பூசிக் கொண்ட முகம். ஆனாலும் அதையும் மீறி ஏதோ வலி தெரிந்தது. மாயா அவன் கைகளை இதமாய்ப் பற்றினாள். என்ன பிரச்சனையானாலும், பகிர்ந்து கொள்ள நானிருக்கிறேன் தோழனே என்பதுபோல் இருந்தது அந்தத் தொடுதல். சூர்யா ஒரு புன்னகையோடு அவளை ஏறிட்டான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'பிரச்சனை ஒன்னுமில்ல மாயா – என் தங்கை ஒருவனை விரும்புகிறாள் என்பது உனக்குத் தெரியும்தானே. கடைசிவரை வீட்டுல கேட்டுப் பாத்தா யாரும் ஒத்துக்கல – வீட்ட விட்டுப் போயிட்டா'.

'ஏன் சூரியா – நீ இருந்தும்கூட அவள இப்படிப் போகவிட்டுட்ட. நீ வீட்டுல பேசியிருக்கலாமே?'

'இல்ல மாயா, நானும் எவ்வளவோ சொல்லிப் பாத்தேன். சடங்கு, சம்பிரதாயம்ன்னு யாரும் ஒத்துக்கல. கீழ்ச்சாதிப் பையன எப்படிக் கல்யாணம் பண்ணறதுன்னு ஒரே ஆர்ப்பாட்டம்.

'இதுல ஒனக்கொன்னும் வருத்தம் இல்லையே சூர்யா?'

'எனக்கென்ன வருத்தம்? அவளுக்கு நல்லபடியா கல்யாணம் பண்ணி வைக்கமுடியாமப் போச்சேன்னுதான். நேத்துப்பூரா அவங்க கூடத்தான் இருந்தேன் மாயா. பாவம் இரண்டு பேரும் பயந்து போய் இருக்காங்க. பயப்படாம இருங்க நானிருக்கிறேன்னு சொல்லிவிட்டு வந்தேன்.'

'நீ ஒரு நல்ல மனிதன் சூர்யா'. நீ எனக்கு சிநேகிதன்னு நினைக்கும்போதே பெருமையா இருக்குப்பா. எதற்காகவும் இந்த சிநேகத்தை நான் விட்டுக் கொடுக்க மாட்டேன்.

'ஆமா உனக்கும் ஏதோ பிரச்சனைன்னு சொன்னியே – என்னடா என்ன பிரச்சனை?'

மாயா அவனை அதிகம் கஷ்டப்படுத்த வேண்டாமே என்று நினைத்தாள்.

'ஒன்னும் பெரிய பிரச்சனை இல்ல சூர்யா. இந்த அலையும், கடலும் மனசுக்கு இதமா இருக்குல்ல'.

'ஆமா மாயா – இந்தக் கடல்கூட எவ்வளவு பேர வாழ வைக்குது – எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாம – இல்ல?'

'இயற்கையிடமிருந்து கற்றுக்கொள்ள எவ்வளவோ இருக்கு மனிதர்களுக்கு. ஆனால் யார் கற்றுக் கொள்கிறார்கள்? இருக்கும் இயற்கையையும் அழித்து கொண்டு – இல்ல சூர்யா'.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவன் ஆமோதிப்பது போல தலையாட்டிக் கொண்டான். அலைகள் இடைவிடாமல் தேடலைத் தொடர்ந்து கொண்டிருந்தன.

சரவணன் வானத்துக்கும் பூமிக்குமாய் குதித்துக் கொண்டிருந்தான்.

'நான் இவ்வளவு தூரம் சொல்லியும் நீ அவனோட சுத்திக்கிட்டு இருக்க. கடற்கரைக்கு என்ன காத்து வாங்கப் போனீகளோ? என் ப்ரெண்ட்ஸ் எல்லாம் என்கிட்ட வந்து 'என்னடா ஒன் தங்கச்சிய அங்க பாத்தேன். இங்க பாத்தேன்'னு சொல்லும்போது, தூக்குப் போட்டுக்கிட்டு தொங்கலாம் போல இருக்கு'.

'சிநேகிதம்னா என்னன்னு உனக்கும் தெரியாது. உன்னைச் சுற்றி இருக்கவங்களுக்கும் புரியாது.

'மாயா, அவன்தான் இவ்வளவு சொல்றானே – இதென்ன திமிர்த்தனம்? அவன் சொல்றபடிதான் நீ கேட்கணும்'.

'ஆமா, செல்லமா சொல்லுங்க. என்னைக்காவது மாலையும், கழுத்துமா வந்து நிப்பா. அப்பத் தெரியும்'.

'சூர்யாவ நான் கல்யாணம் பண்ணிக்கனும் என்று நெனச்சா எப்பவோ பண்ணிருந்திருப்பேன். ஆனா அவன் எனக்கு எப்பவுமே சிநேகிதன்தான். அவனோடான என் சிநேகிதம் எப்பவும் இருக்கும். யாருக்காகவும் நான் என் சிநேகத்த விட்டுக் கொடுக்க மாட்டேன்'.

சரவணா பளாரென அவளை அறைந்தான்.

'திமிர் பிடிச்ச நாயே. நான் சொல்லிக்கிட்டே இருக்கேன். நீ பாட்டுக்குப் பேசிக்கிட்டே இருக்க. இதப்பாரு இது என் வீடு. இங்க நான் சொல்றபடிதான் நீ கேட்கணும். ஒன்னிஷ்டத்துக்கு இங்க இருக்க முடியாது'.

மாயா ஒன்றும் பேசாமல், அமைதியாய்த் தன் உடைமைகளைச் சேகரித்தாள். காலையில் துவைத்துப் போட்ட, இன்னும் முழுவதுமாய்க் காயாத உடைகளைத் தனியே ஒரு பையினுள் வைத்தாள். அம்மா எப்போதும்போல சமையல் அறையில் இருந்தாள்.

www.tamilarangam.net



'அம்மா, நான் லேடீஸ் ஹாஸ்டலில் சேர்ந்து கொள்ளப் போகிறேன். நீ என்னப்பத்தி கவலப்படாதம்மா. நான் எங்க இருந்தாலும் மரியாதைக்குள்ள பெண்ணாத்தான் இருப்பேன்'.

'என்னடி இது – நீ எப்பிடித் தனியா . . .?

'இருக்க முடியும். இருப்பேன். ஒரு ஆணையும் பெண்ணையும் சிநேகமா ஏத்துக்க முடியாத இந்த வீட்டுல சுவாசிக்கறதே ரொம்பக் கஷ்டம்மா. நான் என்னையே அழிச்சுக்கிட்டு, என் உணர்வுகளக் கொன்னுட்டு, என் சிநேகத்தத் தொலைச்சிட்டு இங்க இருக்க விரும்பல. நான் ஒன்ன அடிக்கடி வந்து பார்ப்பேன். என்னைக்காவது இந்த வீட்டுல என்னப் புரிஞ்சுக்குவாங்க. அதுவரைக்கும் விலகி இருக்கறதுதான் நல்லதும்மா. நான் கிளம்பறேன்.

மாயா வீட்டை விட்டு வெளியேறினாள். அந்தி நேரத்துக் காற்று சில்லென்று வீசியது. மாயா நிதானமாய்ச் சுதந்தரமாய்ச் சுவாசித்தாள்.

- சிஸ்டர் ஷீபா

C/o அருள்திரு சுதாகர்
R.C. கோயில், தவசி மேடை
திண்டுக்கல்.

www.tamilarangam.net



# பூஞ்சோலைப் பூங்குயில்

யாழ்ப்பாணத் தமிழர்களின் பிரச்சனைகளை மையமிட்டு எழுதப்பட்ட பல கதைகளுள் ஒன்று. ஜோதினி சரவணன் என்ற தீவிரவாதியைப் பிடிக்கத்தான் பூஞ்சோலை கிராமத்திற்கு வருகிறாள். காதல் வளையில் தானே சிறைப்படுகிறாள். சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுத் தீவிரவாதி என்று தொடர்ந்து முத்திரை குத்தப்பட்டுக் குற்ற பரம்பரையாக்கப்பட்ட சரவணன் ஒருவனாக இருக்க முடியுமா? இது ஒரு மாதிரிச் சான்றினை முன் வைக்கிறது.

- ஹரி விஜயலட்சுமி

பூஞ்சோலைக் கிராமம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஆயிரம் கிராமங்களில் ஒன்று. கிராமங்களின் அழகும் அமைதியும் இங்கும் குடியிருந்தது. இயற்கை அன்னை அழகாகக் கோலம் வரைந்திருந்தாள்.

நீண்டுயர்ந்த தென்னைகள், குலை குலையாக மாங்கனிகளைக் கொண்ட மாஞ்சோலைகள், கப்பல், இதரை, கதலி, சீனி இன வாழைத் தோட்டங்கள், பச்சை வயல்கள், சலசலத்தோடும் அருவிகள், மணம் வீசும் மல்லிகை, முல்லை, மனோரஞ்சித மலர்கள். பெயருக்கேற்ப பூஞ்சோலையாக மிளிர்ந்தது.

வடக்குக் கரையில் பிரசித்திபெற்ற கண்ணகி ஆலயமும் கிழக்குப் பகுதியில் குடியானவர்களின் குடிசைகளும் தென் பகுதியில் சில சில்லறைக் கடைகளும் அமைந்திருந்தன. மேற்குப் பகுதியோ வெறிச்சோடிப் பற்றையும் காடுமாக இருந்தது.

கிராமத்தின் மத்தியில் மாஞ்சோலைக்குள் அமைந்திருந்தது அந்த பச்சை வர்ணம் பூசிய வீடு – மீண்டும் ஒருமுறை விலாசத்தைச் சரிப்பார்த்துக் கொண்ட ஜோதினி – அவ் வளவுக்குள் நுழைந்தாள். மனம் "திக் திக்" என்று அடித்துக் கொண்டது. ஆபத்து யார் உருவில் எந்த வடிவத்தில் உருவெடுக்குமோ? . . . . .

ஜோதினி இருபத்தி மூன்று வயது நிரம்பிய கன்னி மயில். அவள் கயல் விழிகள், ஆயிரம் கவிதைகளை வடிக்க கவிஞர்களை ஊக்குவிக்கும், கொவ்வை இதழ்கள், மலர்ந்தால் தாமரை முகிழ்ந்ததைப் போல் தோன்றும், – அந்தக் கன்னங்கள் – தக்காளியா? ஆப்பிளா? தடுமாற வைக்கும், அலை அலையாகப் பாயும் கருங்கூந்தல் வண்ண மயிலை நினைவில் எழச் செய்யும். இந்த மயில் ஏன் இங்கு வந்தாள்? காரணத்தோடுதான் . . .

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாசல் படியேறிய ஜோதினி – மெல்ல கதவை தட்டினாள் ... உள்ளத்தில் தோன்றிய நடுக்கத்தை அதட்டி அடக்கினாள். மெல்லிய காலடி ஓசை நெருங்கி வந்தது. கதவைத் திறந்தவளுக்கு ஐம்பது வயதிருக்கும்– சிநேகத்துடன் புன்னகைத்தாள்.

"நான் கொழும்பில் இருந்து வருகிறேன்". வாங்கம்மா– ஐயா. அறிவித்திருந்தார். எல்லாமே ஒழுங்குபடுத்தியிருக்கு – உங்கள் விருப்பப்படி தங்கலாம்".

செங்கதிரோன் ஜன்னலுக்குள் எட்டிப் பார்த்தபோது கண் விழித்தாள் ஜோதினி. அவள் எண்ணம் எல்லாம் நிறைந்திருந்தவன் "அரசாங்கத்தால் தீவிரவாதி என்று பெயர் குத்தி – தேடப்படும் அவன் .. . பெயர்கூடத் தெரியாத அவனை இவள் தேடி வந்திருந்தாள். "பூஞ்சோலை கிராமத்திற்குள் ஒளிந்திருக்கிறான் என்பது மட்டும்தான் அவளுக்குக் கிடைத்த ஒரே ஆதாரம்.

மகா முரடன், எதற்கும் அஞ்சாதவன், இறால் தலையைக் கொய்வதைப்போல மனிதர்கள் தலையைக் கொய்து விடுவான். கொலை பாதகன் . . . . .

மனிதர்கள் எல்லோரும் மழலையாக உதிக்கும் போது நல்லவர்களாகத் தானே இருக்கிறார்கள் ! . . . ஏன் இடையில் மாறிவிடுகிறார்கள்? இந்தச் சமூகம், நாடு, அரசாங்கம் மாற்றி உருக்குலைத்துச் சின்னா பின்னப்படுத்தி விடுகின்றதா? அல்லது இறைவனே உன் தலைவிதி இதுதான் என்று எழுதி அனுப்பிவிடுகின்றானா? இறைவனுக்கும் இது ஒரு திருவிளையாடலா? இதமான குளிரும் மாஞ்சோலைக் காற்றும் அவளைப் படுக்கையில் புரண்டு கொண்டிருக்கச் செய்தது. எண்ணங்களோ முகம் தெரியாத அவனை வட்டமிட்டது.

"அம்மா, தேத்தண்ணி குடிக்கிறீர்களா?" பார்வதி எட்டிப் பார்த்தாள்.

"நான் குளித்துவிட்டுக் கிராமத்தைச் சுற்றிப் பார்க்கப் போக வேண்டும் – சாப்பாட்டையும் ரெடி பண்ணுங்க" என்ற ஜோதினி படுக்கையை விட்டு எழுந்து குளியலறையை நோக்கிச் சென்றாள் – நீரை மொண்டு தலையில் ஊற்றும்போது, அவள் எண்ணம் எப்படி இருப்பான்? அவள் கற்பனையில் ஓர உருவம் – "பற்றைத் தாடி, முரட்டு விழிகள், தடித்த உதடுகள், சிரிப்பேயில்லாத பயங்கர முகம் ... நிச்சயம் இப்படித்தான் இருப்பான். அயோக்கியன் முகம் ... இப்படித்தான் இருக்கும். கணக்கிட்டாள்.

www.tamilarangam.net



கிராம மக்கள் வஞ்சகமற்றவர்கள். அந்நியரை அனுசரிப்பதிலும் வரவேற்பதிலும் மகிழ்ச்சி கொண்டவர்கள். ஜோதினியைச் சிநேகப் பார்வையுடன் நோக்கினார்கள், புன்னகைத்தார்கள் – தமிழனின் விருந்தோம்பல் பண்பு பூஞ்சோலை மக்களிடம் மட்டும் இல்லாமல் போய் விடுமா? "இந்தாம்மா கறுத்த கொழும்பான் மாம்பழம் சாப்பிடு. நீதானே பச்சை வீட்டு பங்களாவுக்கு வந்திருக்கும் பெண்" – அன்போடு விசாரித்து மாம்பழங்களைக் கொடுத்தாள் இளம்பெண். திங்கள் முகம் கொண்ட அப் பெண்ணைச் சிநேகம் பிடித்துக் கொண்டாள் ஜோதினி. அப் பெண் மூலம் நிறைய விடயங்களை அறிந்து கொண்டாள்.

"பூஞ்சோலையில் பாதி சனங்கள் அகதிகளாக வந்து குடியேறியவர்கள் – மட்டக்களப்பு, திருக்கோணமலைப் பகுதிகளில் வாழ்ந்த சிலர்கள் – யுத்தம் காரணமாக – இன, சன பந்துக்களை விட்டு, தாரமிழந்து, சொத்தை இழந்து, உறவுகளை இழந்து, கை கால்களை இழந்து . . . ஐயையோ தமிழனுக்கு ஏன் இந்த கொடுமை? அவன் என்ன பாவம் செய்தான்?" தமிழனாக இந்த ஈழ மண்ணில் பிறந்த குற்றத்திற்காக உணர்ச்சி வசப்பட்டு பேசிய அப் பெண்ணைப் பிடித்துக் குலுக்கினாள் ஜோதினி . . .

ஏய் ஏய் என்னம்மா? . . .
குலுங்கி, குலுங்கி அழுத அவள் தொடர்ந்தாள். நான்கூட ஓர் அனாதை. ஒன்றுமே அறியாத என் பெற்றோரை இராணுவம் அடித்த ஷெல் என்னிடம் இருந்து பிரித்து விட்டது. என்னை ஆதரிக்க ஒருவருமில்லை, அன்பு செலுத்த ஒருவருமில்லை. இங்கு வந்த அகதிகளில் ஒருத்தியாக வந்த என்னை அன்போடு வரவேற்று இந்த ஓலைக் கொட்டிலைப் போட்டுத் தந்தவர்" – பற்களால் தன் உதடுகளை இறுகக் கடித்தாள்.

"உம் யார் உனக்கு இவ்வுதவியை செய்தவர்?" ஜோதினி காரியமே கண்ணாகக் கேட்டாள்.

"அதை நான் சொல்ல மாட்டேன். அந்த உத்தமரையே உங்களுக்குக் காட்டுகிறேன். வெள்ளிக்கிழமை கண்ணகி அம்மன் கோயிலுக்கு வாருங்கள் ..."

"ஆமாம் என்னென்னவோ பேசிவிட்டோம். உன் பெயரை இன்னும் நான் தெரிந்து கொள்ளவில்லையே ..."

"என் பெயர் சங்கீதா. ஆமாம் நீங்க உங்களைப்பற்றி ஒன்றுமே சொல்லவில்லையே . . ."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"நான் ... புரட்சி பத்திரிகையின் நிருபர். ஓய்வுக் காலத்தை இங்கு கழித்துக் கதை எழுத வந்திருக்கிறேன்.

"பூஞ்சோலை ரொம்ப அழகான கிராமம் அல்லவா? பூஞ்சோலை மட்டுமா? இங்குள்ள மக்களும்தான் அன்பும் அழகும் உள்ளவர்கள்.

ஜோதினியின் விழிகள் கிராமத்தின் நாலாபுறமும் சுழன்று தேடின... உம் அந்த முரட்டு முகத்தைக் காண முடியவில்லை. முகம் கண்ணில் படவும் இல்லை. ரொம்ப பொல்லாதவனாக இருப்பானோ? . . . பயங்கரமானவனாக இருப்பானோ? மறைந்து திரியும் மாயாவியோ? – தீர்க்கமாகச் சொன்னார்களே – இங்கு தான் எங்கோ மறைந்திருக்கிறான்? கண்ணில் படாமலா போய் விடுவான்? அதுவும் இந்த ஜோதினி கண்ணில்? கறுவிக் கொண்டு அவனைத் தேடினாள் . . .

வெள்ளிக்கிழமை.

கண்ணகி அம்மன் சந்நிதியில் கரம் கூப்பி நின்றாள். "அம்மனே ! துஷ்டர்களை அழிக்கும் தேவியே என் விழிகளில் அவனைக் காட்ட மாட்டாயா? அந்தத் தேசத் துரோகியைப் பிடித்து அரசிடம் ஒப்புவித்து நான் மெடல் வாங்கி . . . ,

"ஐயையோ என் பிள்ளை" திடீரென்று ஒலித்த குரல் இவளைத் திரும்பிப் பார்க்க வைத்தது.

மூன்று வயது மொழு, மொழு குழந்தை. தத்தித் தத்திப் படிகளில் இறங்கிக் குளத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. வழுக்கி விழுந்தால் குளத்திற்குள் விழவேண்டியதுதான்.

ஜோதினி ஒரே எட்டில் பாய்ந்து குழந்தையை அணைத்துக் கொண்டாள் ... ஆனால் அவள் போதாக் காலம். அவள் கால்கள் அங்கு கிடந்த வாழைப்பழத் தோலில் வழுக்கி ... படிகளில் உருண்டு, உருண்டு ...

... இறுதியாக இரு வெள்ளை தூய பாதங்களினால் தடுக்கப்பட்டாள்.

குழந்தையை அவள் நெஞ்சோடு அணைத்து ஒரு ஆபத்தும் இல்லாமல் காப்பாற்றியிருந்தாள். மெல்ல நிமிர்ந்த அவள் விழிகள் அந்தக் கூரிய விழிகளைச் சந்தித்தன.

"அம்மா புண்ணியவதி ! என் பிள்ளையைக் காப்பாற்றினாயே". பிள்ளையின் தாய் பிள்ளையைப் பெற்றுக் கொண்டதோடு அவளையும் வாழ்த்தினாள்.

www.tamilarangam.net



"தம்பி கார்த்திக்கேயா ! உனக்கும் நன்றி" "கார்த்திக்கேயன்" – நிமிர்ந்தாள் ஜோதினி . . .

சிவந்த வதனம், நெற்றியில் புரண்டு விழும் முன் கேசம் கூரிய விழிகள் . . . அதில் மட்டும் என்ன இத்தனைக் கூர்மை". நேருக்கு நேராக நோக்கியவள், "நன்றி" என்றாள் கரம் கூப்பி ! ...

அதே வேளை கீழே எழுந்த இரைச்சல் அவன் கவனத்தைத் திசை திருப்பியது.

கூரிய வாளை, தூக்கிக் கொண்டு முரட்டு இளைஞன் ஒருவன் நின்றிருந்தான்.

அவள் கற்பனையில் வடித்திருந்த அந்த முரடன் – முரட்டு உருவம் கொலைபாதகன் அவள் தேடும் கொலைகாரன் . . . நிச்சயமாக இவன்தான்.

மேலே ஓடினாள் ஜோதினி . . . சுவர் ஓரமாக மறைந்து நின்று கீழே எட்டிப் பார்த்தாள்.

"ஏய் யாராவது இங்கிருந்து போலீசுக்கு தகவல் கொடுத்தீர்கள் உங்கள் எலும்பு மிஞ்சாது . . . நொறுக்கிப் போட்டு விடுவேன்".

"எது நீதி? எது நியாயம்? எது உண்மை? எனக்குத் தெரியும் – தமிழ் இளைஞர்களைப் புனர் வாழ்வு முகாமுக்குள் புகுந்து துண்டு துண்டாக வெட்டி கொன்றிருக்கிறார்கள். நெருப்பில் உயிரோடு போட்டு எரித்திருக்கிறார்கள். இதைக் கேட்ட பின்னும் ... பத்திரிகையில் வாசித்த பின்னும் ... தமிழர்கள், நிலை தெரியவில்லையா? யாரிடம் பாதுகாப்புக் கேட்பது ... வேலியே பயிரை மேயும் போது" ... வாளை அங்கிருந்த கல்லொன்றில் மேலும் தீட்டி கூர்மையாக்கினான்.

கூடியிருந்த மக்கள் மௌனமாகக் கலைந்தனர். ஜோதினி படியருகே சந்தித்த வாலிபனைத் தேடினாள். அவனையும் அங்கு காணோம்.

மெல்ல படியிறங்கியவள் அக் காட்சியைக் கண்டு திடுக்கிட்டுக் கண்ணைக் கசக்கிக் கொண்டு மீண்டும் பார்த்தாள் . . .

அந்த முரடனுக்குக் கறுத்த கொழும்பான் கொடுத்துச் சிரித்து, சிரித்து பேசிக் கொண்டிருந்தாள் சங்கீதா . . .

படுக்கையில் புரண்டு, புரண்டு படுத்தவளை நித்திராதேவி

www.tamilarangam.net



அணைக்க மறுத்தாள். அந்த வெள்ளைப் பாதங்களின் கொள்ளை அழகு, அந்த விழிகளின் கூர்மை, இதழ்களில் மலர்ந்த புன்னகை, அவனை மீண்டும் பார்க்க வேண்டும் போல உள்ளம் ஏங்கியது. ஏன் இந்த ஏக்கம் அவளுக்குப் புரியாதப் புதிராக இருந்தது. "கார்த்திகேயன்" மெல்ல அப் பெயரை உச்சரித்தாள். உதடுகளும் தித்தித்தன. அதே நேரம் அந்த முரடன் மனக் கண்ணில் தோன்றினான். சங்கீதாவை வைத்து இவனை மடக்கிப் பிடிக்கிறேன். இவன் கரங்களில் விலங்கு மாட்டி இழுத்துச் செல்ல வேண்டும். "வாளை தூக்கினவன்" எல்லோரும் வீரனாகி விடமுடியுமா? அவனைச் சந்திக்க வேண்டும். அந்த முரடனோடு பேச வேண்டும். மீண்டும் கார்த்திக்கின் அழகுத் தோற்றம். அந்தப் பட்டு வேட்டிக்கிடையே அந்த பாதங்கள். அதைத் தொட்டுக் கும்பிட வேண்டும் போல இருக்கே ... அந்த நெற்றியில் விபூதிக்கிடையே மிளிர்ந்த சந்தனப் பொட்டு . . . ஓ தூய தமிழனோ? –அந்த முரடனின் முரட்டுக் கைகள் உம் ... வாள் ... சங்கீதா ... முணங்கியபடியே விழிகளை மூடினாள். சங்கீதாவைச் சந்திக்க அவள் குடிசை நோக்கிச் சென்றாள்.

"அவன் பெயர் சரவணன்; எம்.ஏ., பட்டதாரி என்றாள். யாழ் மண்ணில் தமிழனாகப் பிறந்தது அவன் செய்த மகாத் தவறு. மலைநாட்டில் ஆசிரியனாகக் கடமை புரிந்தது அதைவிடப் பெரிய தவறு. சந்தேகத்தின் பெயரில் கைது செய்து அவன் அனுபவித்த வேதனைகள் – பட்ட அவமானங்கள் – அவனை விரக்தியின் எல்லைக்கு கொண்டு வந்தது. ஒன்றுமே அறியாத அப்பாவி. அவனுக்கு ஏன் இந்த அடியும் புண்களும் எல்லாவற்றையும் உதறிவிட்டுப் பூஞ்சோலைக்குள் இருக்கிறான்". இவைகள் சங்கீதா கூறி இவன் அறிந்து தெரிந்து கொண்டவை ... ஆனால் இவன் ரயில் நிலையத்தைக் குண்டு வைத்துத் தகர்க்க முயன்றான். அமைச்சர்களைக் கொல்ல முயன்றான். தீவிரவாதி – அரசாங்கம் வலை விரித்திருக்கும் கொலைகாரன் – பாடசாலைக்கு குண்டு வைத்து ஐநூறு மாணவர்களை பலியாக்கியவன்".

அவன் குடிசையை நெருங்கி மெல்ல எட்டிப் பார்த்தாள்.

சரவணன் கையில் "செங்கோல்" புத்தகம். அவன் உரக்க படித்துக் கொண்டிருந்தான்.

இன்றைய கல்வி – கொலைக் கல்வி.

ஏனென்றால், தாவீது கோலியாத்தை வென்றான். எனவே நீயும் வெல்லலாம் – கொல்லலாம் என்றுதான் கற்பிக்கப்படுகின்றது.

www.tamilarangam.net



இன்றைய கல்வி – போட்டி பொறாமை ஊக்கிக் கல்வி. ஏனென்றால் ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசின் பரீட்சையில் வெற்றி பெற வேண்டும். அதற்காக உன் அறிவைக் காட்டாதே என்பதுதான்.

சில கல்வியாளர்களின் எழுத்தில் இல்லாத வழிகாட்டல்கள் –

இன்றைய கல்வி – விரக்தியுறுவாக்கும் கல்வி.

ஏனென்றால், பரீட்சைகளும் போட்டிகளும் ஒருவரின் தகுதி கண்டு முன்னேற உதவுவதில்லை. மாறாக – உனக்கு தகுதியில்லை என்று கூறி விரக்தியுறவே செய்கின்றது.

இன்றைய கல்வி – கணனியை இயக்க கற்பித்துள்ளதேயன்றி மனிதத்துடன் வாழக் கற்பிக்கவில்லை. ஏனெனில், அணு ஆயுதங்களின் ... கவிதை வாசிப்பதை நிறுத்தி நிமிர்ந்தான்.

"ஓ ! பூஞ்சோலை வந்திருக்கும் பூங்குயிலே. உள்ளே வரலாமே. ஏன் வெளியே நின்று வேவு பார்க்கிறீர்கள்?" துணுக்குற்ற ஜோதினி, "மகா கெட்டிக்காரன்தான். ஆற்றலும் கொண்ட நீங்கள் ... இந்த சாதாரண கிராமத்திற்குள் முடங்கி கிடக்காமல்.

தமிழையும் அதன் பெருமையு இந்த இலங்கை பூராவும் பதப்பலாமே என்றாள் சிரித்தபடி –

சரவணன் அவளைக் கூர்ந்து நோக்கியபடி கூறினான். "தமிழை நான் வளர்க்கத் தேவையில்லை. ஜோதினி தமிழ் உலகெட்டும் பரவி இருக்கிறது – தமிழர்கள் உலகில் ஆறாவது ஸ்தானத்தில் இருக்கிறார்கள். இந்த ஈழத் திருநாட்டில் தமிழர்கள் ஏமாற்றப்படுகிறார்கள். நியாயம் கேட்டால் உயிர் பறிக்கப்படுகிறது. நீதி கேட்டால் சிறையில் வாட வேண்டியிருக்கிறது. உண்மைகள் மறைக்கப்படுகின்றன ... அதனால், இந்தத் தமிழ்க் கிராமம் என் சொந்த மண் ... இங்கு ஒரு நேரக் கஞ்சியைக் குடித்தாலும் நிம்மதியுடன் இருக்கிறேன். என் மக்களுக்கு என்னால் இயன்றதைச் செய்கிறேன். மந்திரி பதவி பெற்றுப் பாராளுமன்றத்தில் சென்று நான் சேவை செய்ய வேண்டுமென்றில்லை. சேவை ... சேவை ... சேவை ... அதைச் சாதாரண ஒரு குடிமகனும் செய்யலாம் ..." செவிகள் அவன் கூறியவைகளைச் செவிமடுத்தபோது விழிகள் அக் குடிசையின் மூலை முடுக்குகளைத் துழாவியது. ஆயுதங்கள், குண்டுகள், இத்யாதி ... ஒன்றுமில்லை ஒரே ஒரு வாள்.

"ஜோதினி – ஏதாவது குடிக்கிறீர்களா?" "வேண்டாம் – மறுமுறை உங்களைச் சந்திக்கிறேன்". விடை பெற்றாள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவள் மனம் ஏனோ வேதனைப்பட்டது. இளைஞர்கள் விரக்தியின் எல்லையில்தான் தீவிரவாதிகளாகின்றனரா?

சிறிது தூரம் சென்றவள் கண்கள் வியப்பால் விரிந்தன – எவனைப் பார்க்க அவள் உள்ளம் துடித்ததோ அந்த ஆணழகன் சேரிப் பகுதி மக்களுக்கு உணவு, உடைகளை வழங்கிக் கொண்டிருந்தான்.

"தம்பி கார்த்திக், நீ – நீடுழி வாழவேண்டும். இந்த ஏழை அகதிகளுக்கு கஞ்சி வார்க்கிறாயே அப்பா".

"கார்த்திக் அண்ணா, எனக்கு கணக்கு சொல்லித் தருவீர்களா?"

"மகனே கார்த்திக் ! இந்த குடிசை ஒழுகுகிறது. எனக்கு நூறு பனை ஓலைகள் தருவாயா?" மூதாட்டி ஒருவர்.

அவரவருக்குப் பதில் கூறியவன், புன்னகையுடன் திரும்பினான். அந்த விழிகள் இவள் விழிகளுடன் உறவாடின.

மாதங்கள் இரண்டு மறைந்தோடின. கார்த்திக்கின் விரல்கள் ஜோதினியின் விரல்களை அழுத்தின.

வயல்வெளியில் அமர்ந்து இயற்கையை ரசித்துக் கொண்டிருந்த ஜோதினி என்ன? என்ற கேள்வி விழிகளில் தேங்க நோக்கினாள் –

"என்னைப் பற்றி என்ன நினைக்கிறாய் ஜோதி" நீங்கள் மனிதர்களில் உயர்ந்தவர், மாணிக்கம், ஏழைகளின் தோழன். இந்த அகதி மக்களுக்கு உணவளிக்கிறீர்கள், உடை அளிக்கிறீர்கள். அதுமட்டுமா சரவணனைக் கொண்டு கல்வியையும் கொடுக்கிறீர்கள். எல்லாவற்றையும் விட இந்த சி.ஐ.டி. ஆபிஸர் ஜோதினியின் இதயத்தில் அழியாத ஓவியமாக இருக்கிறீர்கள் ...

"ஜோதி எக் காரணம் கொண்டும் அந்த ஓவியத்தை அழித்து விட மாட்டாயே?"

"என்ன கேள்வி இது கார்த்திக்? நான் சரவணனைக் கைது செய்து, தக்க சாட்சிகளுடன் அரசிடம் ஒப்படைத்த பின் ... கழுத்தை நீட்டுகிறேன்".

"நிறுத்து ஜோதி ! நீ தேடி வந்தாயே அந்த முரடன், சரவணன் அல்ல ... நான் ... நான் ... நான்தான்".

"என்ன?" வியந்து ஆடிப்போனாள். "ஜோதி நான் நேர்மையானவன்.

www.tamilarangam.net



என் மக்கள் படும் துயரை என் சிறுவயதில் (1983 –இல், கலவரத்தில் கண்டேன். துண்டு துண்டாக வெட்டப்பட்ட என் மக்கள். பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தப்பட்ட என் பெற்றோர்கள். தீக்கிரையான என் இனத்தின் சொத்துக்கள், வெறுப்பு ... வெறுப்பு ... வெறுப்பு.

வெறுப்பின் எல்லையில் வாழ்ந்து கொண்டிருந்தேன். நானும் ஒரு எம்.ஏ. பட்டதாரி. என் மக்கள் வஞ்சிக்கப்படுவதைச் சகிக்க முடியவில்லை.

ஆனால் நான் தவறான வழிகளில் செயல்படவில்லை. எங்கள் மாணவர்கள் சுற்றுலா போன நேரத்தில் அந்த புகைவண்டி குண்டுவெடிப்பு ஏற்பட்டது. நானும் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டேன்.

அடி, உதை, குத்து, உணவு இல்லை, சலம் கழிக்க வழியில்லை இருபத்தைந்து பேர்களை ஒரு புறாக் கூண்டு அறைக்குள் அடைத்து வைத்திருந்தார்கள் ...

சித்திரவதை – அவ் வேளையில் தமிழ்க் கைதிகள் சிறைக்குள் கொல்லப்பட்டார்கள்.

ஆடிப்போனோம். தப்ப நினைத்து வழி அமைத்தோம். ஐவர் ஓடிவந்த போது மூவர் மரணம் அடைந்தார்கள். நானும் சரவணனும் இங்கு வந்து சேர்ந்தோம்".

கார்த்திக் வேட்டியைச் சற்றுத் தளர்த்திக் காலில் பட்ட சூட்டுக் காயத்தைக் காட்டினான். "என்னை நம்பு. உன்னிடம் பொய் சொல்ல மாட்டேன்".

"உங்களை நம்புகிறேன் கார்த்திக். உங்கள் உயர்ந்த சேவையை என் கண்ணால் கண்டிருக்கிறேன். நீங்கள் அகதிகளுக்கு வாழ்வு அளிக்கும் தெய்வம்".

"ஜோதி ! சரவணன் எனக்காக முரடனாக நடித்தான். உன்னைத் திசை திருப்ப சங்கீதா ஒத்துழைத்தாள்.

என்னை மன்னித்து விடம்மா ! உன்னிடம் உண்மையை மறைக்க முடியவில்லை ..." அவள் கரங்களில் முகம் புதைத்தான். உடல் குலுங்கியது.

"கார்த்திக் நான் தவறு செய்து விட்டேன். சரவணனைக் கைது செய்ய இராணுவம் வந்து கொண்டிருக்கும்.

நீங்கள் தப்பிச் சென்று விடுங்கள். உத்தமர்கள் தண்டனை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அனுபவிக்கக் கூடாது. சரவணனையும் சங்கீதாவையும் அழைத்துக் கொண்டு சென்று விடுங்கள்".

"ஜோதி !" நீ ... முடிந்தால் உங்களைச் சந்திப்பேன் ..."

கார்த்திக் அவள் உதடுகளில் முத்தமிட்டான். விழிகள் நீரை சொரிந்தன.

வேட்டுச் சத்தங்கள் நாலாபுறமும் சிதறின. ஆகாயத்தில் இருந்து ஹெலிகாப்டர்கள் குண்டுகளைப் பொழிந்தன ...

"ஜோதினி எங்கே? தீவிரவாதிகளைக் காட்டு" ... இராணுவம் வந்தது.

ஜோதினி மௌனம் சாதித்தாள் ...

"ஏய் எங்கே? அவர்கள் தப்பி ஓடி விட்டார்களா?"

"தெரியாது". தலையை ஆட்டினாள்.

"தெரியாதா?"

டுமீல் ... டுமீல் ... டுமீல் ....

ஜோதினியின் உடலைக் குண்டுகள் துளைத்தன "துரோகி"

இராணுவம் வெளியேறியது ...

"ஜோதி !" கார்த்திக் அவள் தலையை மடியில் வைத்தான். நெஞ்சில் இருந்து பீறிட்ட இரத்தம் தரையை முத்தமிட்டிருந்தது.

"கா ... ர் ... த் ... திக்" மெல்ல முணங்கியவள் கரங்கள் அவன் கழுத்தைத் தன் பக்கமாகச் சாய்த்தது.

– துடித்த உதடுகளில் முத்தமிட்டான் – அவள் விழிகள் மூடிக் கொண்டன.

அந்தப் பூங்குயில் பூஞ்சோலைக்கு வாழ்வளித்துப் பறந்து சென்றது ...

கார்த்திக் விழிகளில் வழிந்த கண்ணீரை ... ஆதரவோடு துடைத்து விட்டு – அன்போடு தோளில் கை போட்டு அழைத்துச் சென்றான் சரவணன்.

***

www.tamilarangam.net



அநீதியைக் கண்டு கொதித்தெழுந்த பெண் கண்ணகி, தெய்வமாக போற்றப்படவில்லையா? ஆண்களால் பெண்கள் வரலாற்றுக் காலம் தொட்டு ஏமாற்றப்பட்டுதான் வந்திருக்கிறார்கள். "பெண்கள் காலகாலமாகக் கலாச்சாரச் சின்னமாகக் கருதப்பட்டு வந்திருக்கிறார்கள் – பெண் இப்படியிருக்க வேண்டும் பெண் இப்படி வாழ வேண்டும் ஏற்ற சம்பிரதாயங்களை மாற்றத்தான் வேண்டும்.

ஆண் செய்யும் அடாவடித்தனங்களைச் சுமக்கும் சுமைதாங்கி அல்ல பெண். அவளுக்கும் உள்ளம், சிந்தனை, ஆசை என்று இருக்கின்றது. அவற்றையும் மதித்து வாழ ஆண் இனம் பழகிக் கொள்ள வேண்டும்.

குடிபோதையில் ஆண்களின் அட்டகாசம், படித்த அறிவுள்ள பெண்களையே – வேலைக்காரிப்போல நடத்தும் ஆண்மக்கள் எம்மிடையே இருக்கிறார்கள். இவர்களுக்கு தான் பெண்ணியம் தோன்றியுள்ளமை வெறுப்பை ஊட்டும்.

பெண்ணோ, ஆணோ, சுதந்திரமாக வாழ வேண்டும். புரிந்துணர்வுடன் வாழ பழகிக் கொள்ள வேண்டும்.

தமிழ்ப்பெண்கள், பண்போடு பாதுகாப்போடு கூடிய சுதந்திரத்தையே வேண்டி நிற்கிறார்கள். என்னதான் குதித்தாலும் பெண்கள் – கோழிகள்தான் – கோழி கூவி பொழுது விடியுமா? என்று கொக்கரிக்கும் ஆண்களும் உண்டு. பொழுது விடிவதைக் கண்ட பின்தான் சேவல் கூவுகிறதோ தெரியவில்லை?

பாரதி அன்று வித்திட்ட தீ – இன்று நாலாபுறமும் பற்றி எரிகிறது. பெண்கள் விடிவைக் கண்டுகொண்டு முன்னேறுகிறார்கள் என்பதே என் தாழ்மையான கண்ணோட்டம்.

இயற்கை அழகு கொஞ்சும் கிராமம் என் தந்தை யாருடையது. பச்சைப் பசேல் என்ற வயல்களும் தென்னஞ் சோலைகளும் மாந்தோப்புகளும் வாழைத் தோட்டங்களும் பண்ணிசை பாடும் புள்ளினங்களும் காதல் மொழி பேசும் திங்கள் முகம் கொண்ட கன்னியரும் தடந்தோற் கொண்ட காளையரும் நிறைந்த அந்தக் கிராமம் ரம்மியமானது. ஆற்றலும் அறிவுத் திறனும் செயல் திறனும், நிறைந்த எண்ணற்ற இளைஞர்களும் யுவதிகளும் இன்றைய சூழ்நிலையில் தங்கள் இளமைக்காலக் கனவுகளும் வசந்தகால உணர்வுகளும் பொய்த்துப் போன நிலையில் – சிதைந்த ஓவியங்களாக – வாழும் வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை "என் சிறுகதைகள்" பொய் முகங்கள், பூஞ்சோலைப் பூங்குயில், வேலைக்காரி ஆகியன.

– என். விஜயலட்சுமி

சென் தாமஸ் கல்லூரி,
குருந்தலாவ, ஸ்ரீலங்கா.

www.tamilarangam.net

தொகுப்பு : ஞானி

SEELAN BOOKS ★ NORWAY ★
SIGNATURE

www.tamilarangam.net

தமிழ் இலக்கியத்தில் பெண்ணியப் பார்வை அண்மைக் காலத்தில் மேலோங்கி வருகிறது. சமூகத்திலும் குடும்பத்திலும் பெண்கள் தம் நிலையைப் புரிந்து கொண்டு, தங்களுக்கான இடத்தை, மரியாதையை, வாய்ப்புக்களை பெறுவதற்கு முனைப்புக் கொள்ள வேண்டும். இதற்கேற்ற முறையில் தங்களுக்குள் மறைந்துள்ள ஆக்கத் திறன்களை கண்டறிந்து வளர்த்துக் கொள்ள வேண்டும். இத்தகைய படைப்புத் திறன்களில் ஒரு முக்கியமான கூறு இலக்கியக் கலை.

தமிழ்ப் பெண்களின் படைப்புத் திறனை ஊக்குவிக்கும் முறையில் மூன்றாவது ஆண்டாக நடைபெற்ற பெண் எழுத்தாளர்களுக்கான சிறுகதைப் போட்டியில் பங்கும் பரிசும் பெற்றவர்களின் பதினைந்து கதைகள் இந்தத் தொகுப்பில் உள்ளன. முதலாண்டில் "காயங்கள்", இரண்டாவது ஆண்டில் "உடலே சவப்பெட்டியாக" என்ற தொகுப்புக்கள் வெளிவந்தன. இப்பொழுது வெளிவருவது "காற்றாய் புயலாய்". எத்தனை அவலங்கள் இருந்தாலும், இவற்றையும் மீறி நம் பெண்கள் சிந்திக்கிறார்கள் மற்றும் படைக்கிறார்கள் என்பதற்கு இந்தத் தொகுப்பும் சான்றாகிறது. இந்தப் படைப்பாளிகளை வாழ்த்துவதும் வரவேற்பதும், இவர்களுக்கு நாம் செய்யும் மரியாதை.

- கவிஞர் நித்திலன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்